# அரையாண்டு
# அரசிறை நிலைமை அறிக்கை - 2018

2003 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க அரசிறை
முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்டது.

**மங்கள சமரவீர, பா.உ.**
**நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்**

2018 ஆனி 30 ஆந் திகதி

## 2003 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ பொறுப்புச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ்
## கௌரவ நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரினால் வெளியிடப்பட்ட அரையாண்டு அரசிறை நிலைமை அறிக்கை

2003 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்பு) சட்டத்தின் 10 ஆம் பிரிவின் நியதிகளின் படி நிதி அமைச்சரானவர் வருடத்தின் யூன் மாதத்தின் இறுதித் தினத்தில் அரசிறை நிலைமை அறிக்கையினை பொது மக்களுக்கு சமர்ப்பிக்கவும் அதனைத் தொடர்ந்து பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கும் கேட்கப்பட்டுள்ளார்.

இந்த அறிக்கையின் நோக்கம் அரசாங்கத்தின் அரசிறை செயலாற்றுகையையும் அரசாங்கத்தின் அரசிறை உபாயத்தினையும் பற்றிய இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை வழங்குவதாகும்.

அறிக்கையின் உள்ளடக்கமானது 2018 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களின் போது அரசாங்கத்தின் வருமானம் செலவினம், காசுப்பாய்ச்சல் செயற்பாடுகள் மற்றும் பெறுகைகளின் செயலாற்றுகையினைக் கொண்டுள்ளது. அத்துடன், பேரண்டப் பொருளாதார செயலாற்றுகை, விலை அபிவிருத்தி, வெளிநாட்டு நிதி உதவி, அரசாங்கப் படுகடன், வெளிநாட்டு ஒதுக்கங்கள் என்பவற்றுடன் தொடர்பான 2018 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களுக்கான இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை வழங்குவதோடு அரசுடமை தொழில் முயற்சிகளின் செயலாற்றுகையினையும் விபரிக்கின்றது.

# உள்ளடக்கம்

பக்க இல.


**அத்தியாயம் 1 பொருளாதாரம்**

| | | |
|---|---|---|
| 1.1 | பொருளாதார வளர்ச்சி | 1 |
| 1.2 | பணவீக்கம் | 4 |
| 1.3 | நாணய மற்றும் கடன் | 5 |
| 1.4 | பங்குச் சந்தை | 6 |
| 1.5 | வெளிநாட்டுத் துறை அபிவிருத்திகள் | 7 |

**அத்தியாயம் 2 உலகப் பொருளாதார போக்கு**

| | | |
|---|---|---|
| 2.1 | சர்வதேச பொருளாதார அபிவிருத்திகள் | 9 |
| 2.2 | சர்வதேச பணவீக்கம் மற்றும் வட்டி வீதங்கள் | 10 |
| 2.3 | அந்நிய செலாவணி விகிதங்கள் | 11 |
| 2.4 | அரசிறைப் பற்றாக்குறைகள் | 11 |
| 2.5 | அரசாங்கப் படுகடன் | 12 |
| 2.6 | சர்வதேச வர்த்தகம் மற்றும் நுகர்வுப் பொருள்கள் விலைகள் | 12 |

**அத்தியாயம் 3 அரசிறை அபிவிருத்திகள்**

| | | |
|---|---|---|
| 3.1 | மேன்நோக்கு | 15 |
| 3.2 | அரசாங்க வருமானம் | 18 |
| 3.3 | அரசாங்க செலவினம் | 32 |
| 3.4 | திறைசேரி செயற்பாடுகள் | 60 |

**அத்தியாயம் 4 அரசுடமைத் தொழில் முயற்சிகளின் செயலாற்றுகை**

| | | |
|---|---|---|
| 4.1 | மேன்நோக்கு | 65 |
| 4.2 | பிரதான 10 தொழில் முயற்சிகளின் மீளாய்வு | 66 |
| 4.3 | பிரதான தொழில் முயற்சிகளின் மறுசீரமைப்பு முன்னெடுப்பு | 70 |

**அத்தியாயம் 5 வெளிநாட்டு நிதியளிப்பு**

| | | |
|---|---|---|
| 5.1 | வெளிநாட்டு நிதியளிப்பு அர்ப்பணிப்புகள் | 75 |
| 5.2 | வெளிநாட்டு நிதிப் பகிர்வுகள் | 78 |
| 5.3 | நிதியளிக்கப்பட்டு செலவிடப்படாத அல்லது பயன்படாத மீதி | 79 |
| 5.4 | மொத்த வெளிநாட்டுக் கடன் நிலுவை மற்றும் படுகடன் சேவைக் கொடுப்பனவுகள் | 81 |

## முக்கிய பொருளாதார குறிகாட்டிகள்

| குறிகாட்டி | காலம் | அலகு | பெறுமதி 2017 | பெறுமதி 2018 (ஏற்பாடுகள்) |
|---|---|---|---|---|
| **மெய்த்துறை** | | | | |
| பொருளாதார வளர்ச்சி | முதலாம் காலாண்டு | % | 3.8 | 3.2 |
| விவசாயம் | முதலாம் காலாண்டு | % | (3.2) | 4.8 |
| கைத்தொழில் | முதலாம் காலாண்டு | % | 6.3 | 1.0 |
| சேவைகள் | முதலாம் காலாண்டு | % | 3.5 | 4.4 |
| பணவீக்கம்( புள்ளிக்குப் புள்ளி) | மே மாத இறுதியில் | % | 7.1(ஆ) | 2.1 |
| பணவீக்கம் (சராசரி) | மே மாத இறுதியில் | % | 6.1(ஆ) | 5.7 |
| வேலையின்மை வீதம் (தொழிற்படை சதவீதம்) | வருடாந்தம் | % | 4.2 | த.இ |
| தொழிற்படைப் பங்கேற்பு | வருடாந்தம் | % | 54.1 | த.இ |
| **அரசிறைத் துறை** | | | | |
| வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை | சன – ஏப் | ரூபா. மில் | -233,171 | -250,638 |
| மொத்த வருமானம் | சன – ஏப் | ரூபா. மில் | 589,019 | 622,378 |
| வரி வருமானம் | சன – ஏப் | ரூபா. மில் | 554,715 | 570,471 |
| வரியல்லா வருமானம் | சன – ஏப் | ரூபா. மில் | 34,725 | 51,908 |
| மீண்டெழும் செலவினம் | சன – ஏப் | ரூபா. மில் | 626,469 | 685,966 |
| அரசாங்க முதலீடு | சன – ஏப் | ரூபா. மில் | 201,012 | 181,998 |
| அரசாங்க படுகடன் | உள்ளவாறு | ரூபா. மில் | 10,313,045 (திசெ இறுதி) | 10,654,098 (மாரச் இறுதி) |
| **வெளிநாட்டுத் துறை** | | | | |
| ஏற்றுமதிகள் | சன – ஏப் | ஐ.அ.டொ.மில் | 3,569 | 3,784 |
| அதில், விவசாய ஏற்றுமதிகள் | சன – ஏப் | ஐ.அ.டொ.மில் | 852 | 843 |
| கைத்தொழில் ஏற்றுமதிகள் | சன – ஏப் | ஐ.அ.டொ.மில் | 2,701 | 2,923 |
| புடவை மற்றும் ஆடைகள் | சன – ஏப் | ஐ.அ.டொ.மில் | 1,626 | 1,667 |
| ஏனையவை | சன – ஏப் | ஐ.அ.டொ.மில் | 1,075 | 1,256 |
| இறக்குமதிகள் | சன – ஏப் | ஐ.அ.டொ.மில் | 6,883 | 7,765 |
| நுகர்வுப் பொருட்கள் | சன – ஏப் | ஐ.அ.டொ.மில் | 1,516 | 1,780 |
| இடைநிலைப் பொருட்கள் | சன – ஏப் | ஐ.அ.டொ.மில் | 3,692 | 4,330 |
| அதில், பெற்றோலிய உற்பத்திகள் | சன – ஏப் | ஐ.அ.டொ.மில் | 1,208 | 1,402 |
| முதலீட்டுப் பொருட்கள் | சன – ஏப் | ஐ.அ.டொ.மில் | 1,615 | 1,591 |
| வர்த்தக மீதி | சன – ஏப் | ஐ.அ.டொ.மில் | -3,314 | -3,981 |
| உல்லாசப் பிரயாணிகளின் வருகை | சன – மே | எண்ணிக்கை | 887,093 | 1,017,819 |
| சுற்றுலாத்துறை சம்பாத்தியம் | சன – மே | ஐ.அ.டொ.மில் | 1,645.1(m) | 1,887.6 |
| தொழிலாளர்கள் பணவனுப்பல் | சன – மே | ஐ.அ.டொ.மில் | 3,000.1(b) | 3,100.1 |
| முதலீட்டுப் பஙகுகள் (தேறிய) | சன – ஏப் | ஐ.அ.டொ.மில் | 154.5 | 154.5 |
| மொத்த சென்மதி நிலுவை | சன – ஏப் | ஐ.அ.டொ.மில் | (175.9) | (175.9) |
| மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்கங்கள் | ஏப்ரல் இறுதி | ஐ.அ.டொ.மில் | 6,759.7 | 8,769.0 |
| நாணய மாற்று விகிதம் (இறுதி மாதம்) | மே இறுதி | ஐ.அ.டொ. இற்கான ரூபாய் | 152.71 | 158.09 |
| நாணய மாற்று விகிதம் (மாதாந்த சராசரி) | சன – மே | ஐ.அ.டொ. இற்கான ரூபாய் | 152.33 | 157.90 |
| **நாணயத்துறை அபிவிருத்தி** | | | | |
| நிலையான வைப்பு வசதி விகிதம் (SDFR) | யூன் இறுதி | % | 7.25 | 7.25 |
| நிலையான கடன் வசதி விகிதம் (SLFR) | யூன் இறுதி | % | 8.75 | 8.50 |

| | | | | |
|---|---|---|---|---|
| நியதிச்சட்ட ஒதுக்க தேவைப்பாடு (SRR) | யூன் இறுதி | % | 7.50 | 7.50 |
| அடிப்படை கடன் விகிதமிடப்பட்ட வர்த்த வங்கி சராசரி (AWPLR) | யூன் இறுதி | % | 11.88 | 10.92 |
| கடன் விகிதமிடப்பட்ட வர்த்தக வங்கிச் சராசரி (AWLR) | ஏப்ரல் இறுதி | % | 13.52 | 14.13 |
| இலங்கையின் வங்கிக் கிடையேயான வழங்கல் விகிதம் (01மாதம்) | யூன் இறுதி | % | 10.52 | 9.01 |
| திறைசேரி உண்டியல் விளைவு விகிதம் (91 நாட்கள்) | யூன் இறுதி | % | 9.60 | 8.32 |
| திறைசேரி உண்டியல் விளைவு விகிதம் (364 நாட்கள்) | யூன் இறுதி | % | 10.47 | 9.37 |
| நாணய வழங்கல் வளர்ச்சி ($M_{2b}$) | மார்ச் 2018/ ஏப்ரல் 2017 | % | 20.09 | 16.77 |
| தனியார் துறை கடன் வளர்ச்சி | மார்ச் 2018/ ஏப்ரல் 2017 | % | 19.99 | 15.30 |

*(அ) 2017 ஆம் ஆண்டுக்கான சராசரி தங்கிநிற்கும் காலம் மற்றும் நாளொன்றுக்கான சராசரி செலவிடல் மதிப்பீடுகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் ஆய்வின் விளைவினை அடிப்படையாகக கொண்டவை*

*(ஆ) திருத்திய*

.இலங்கை: தெரிவு செய்யப்பட்ட சுட்டிகள்

| குறிகாட்டி | காலம் | அலகு | பெறுமதி |
|---|---|---|---|
| **மின்சாரம்** | | | |
| மின் விநியோக மட்டம் | 2017 | % | 99.0 |
| **நீர்** | | | |
| பாதுகாப்பான குடிநீரைப் பெறுவதற்கான அடைவு | 2017 | சனத்தொகை % | 88.8(உ) |
| குழாய் நீரைப் பெறுவதற்கான அடைவு | 2017 | சனத்தொகை % | 49.2 |
| **வீதிகள்** | | | |
| வீதி அடர்த்தி | 2017 | கி.மீ$^2$ | 1.82 |
| வீதிகளின் மொத்த நீளம் | 2017 | கி.மீ | 119,480 |
| **தொடர்பாடல்** | | | |
| செல்லிட தொலைபேசி உள்ளடங்கலாக தொலைபேசிக்கான அடர்த்தி | 2017 | ஒவ்வொரு 100 பேருக்கு | 143.6 |
| இணையதள வலைப்பின்னலுக்கான அடைவு | 2017 | ஒவ்வொரு 100 பேருக்கு | 27.5 |
| **கல்வி** | | | |
| **பொதுக் கல்வி** | | | |
| ஆரம்ப பாடசாலைகளில் இணையும் வீதம் | 2017 | % | 93.9 |
| மாணவர்.்.ஆசிரியர் விகிதம் (அரசாங்க பாடசாலைகள் ) | 2017 | எண்ணிக்கை | 17.3 |
| எழுத்தறிவு வீதம் (சராசரி) | 2016 | % | 93.1(ன) |
| கணணி அறிவு வீதம் (முதல் 06 மாதங்கள்) | 2017 | % | 28.3 |
| **பல்கலைக்கழகக் கல்வி** | | | |
| மாணவர்.்.ஆசிரியர் விகிதம் | 2017 | எண்ணிக்கை | 17.4 |
| வயது குறிப்பீடு செய்யப்பட்டு இணையும் விகதம் (வயது 19-23 வருடங்கள்) (அ) | 2017 | % | 6.8 |
| **சுகாதாரம்** | | | |
| வைத்தியசாலைகள் (மேற்கத்தேய மருத்துவம்) (ஆ) | 2017 | எண்ணிக்கை | 612 |
| கட்டில்களின் எண்ணிக்கை (ஆ) | 2017 | எண்ணிக்கை | 76,829 |
| வைத்திய சாலைக் கட்டில்கள் | 2017 | ஒவ்வொரு 1000 பேருக்கும் | 3.6 |
| வைத்தியர் / நோயாளிகள் சராசரி விகிதம் | 2017 | எண்ணிக்கை | 1,054 |
| **சனத்தொகை** | | | |
| சனத்தொகை அடர்த்தி | 2017 | சதுர கி.மீ க்காண ஆட்கள் | 342 |
| சனத்தொகை வளர்ச்சி | 2017 | % | 1.1 |
| ஆயுள் எதிர்பார்க்கை | 2015 | வருடங்கள் | 75.0 |
| சிசு மரண வீதம் | 2015 | 1000 பிறப்புகளுக்கு | 8.5 |
| தாய் மரண வீதம் | 2013 | 1000 பிறப்புகளுக்கு | 26.8 |
| பருமட்டான பிறப்பு வீதம் | 2017 | ஒவ்வோர் 1000 மனிதர்களில் | 15.2 |
| பருமட்டான இறப்பு வீதம் | 2017 | ஒவ்வோர் 1000 மனிதர்களில் | 6.5 |
| தங்கிவாழ்வோர் வீதம் | 2017 | % | 49.4 |
| **வறுமை** | | | |
| வறுமை ஆள் கணக்கெடுப்பு சுட்டெண் | 2016 | % | 4.1 |
| குடும்ப வருமானத்தின் கிணிக் குணகம் | 2016 | குணகம் | 0.45 |
| வறுமை இடைவெளி | 2016 | % | 0.6 |
| நாளாந்தம் உட்கொள்ளும் சராசரி கலோரிப் பெறுமானம் | 2016 | கிலோ கலோரிகள் | 2,095 |

| சர்வதேச தரப்படுத்தல் | | | தரம் |
|---|---|---|---|
| மனித அபிவிருத்திச் சுட்டெண் | 2015 | 188 நாடுகளுடன் தரப்படுத்தலில் | 73 |
| வியாபாரம் புரிவோர் சுட்டெண் | 2018 | 190 நாடுகளுடன் தரப்படுத்தலில் | 111 |
| உலகளாவிய போட்டித்தன்மை சுட்டெண் | 2017/18 | 138 நாடுகளுடன் தரப்படுத்தலில் | 85 |
| பொருளாதார சுதந்திரச் சுட்டெண் | 2018 | 180 நாடுகளுடன் தரப்படுத்தலில் | 111 |
| உலகளாவிய சமாதானச் சுட்டெண் | 2018 | 163 நாடுகளுடன் தரப்படுத்தலில் | 67 |
| இலத்திரனியல் - ஆட்சி முறை அபிவிருத்திச் சுட்டெண் | 2016 | 193 நாடுகளுடன் தரப்படுத்தலில் | 79 |

*(அ) உள்வாரியாக இணைத்துக்கொள்ளப்படும் மாணவர்களை மாத்திரம் உள்ளடக்குகிறது*

*(ஆ) அரசாங்க*

*(இ) தொகை மதிப்பீடு, புள்ளிவிபரவியல் திணைக்கள வீட்டுடமை வருமானம், செலவின ஆய்வு (2016) இனை அடிப்படையாகக் கொண்டது.*

*(ஈ) 2011 ஆம் ஆண்டுக்காக மீள் நிறையளிக்கப்பட்ட, திருத்தியமைக்கப்பட்ட தொழிற்படை தரவுகளை தொகை மதிப்பீடு, புள்ளிவிபரவியல் திணைக்களம் 2017 ஆம் ஆண்டு யூலை மாதத்தில் வெளியிட்டது. இது நாடளாவிய ரீதியில் நடாத்தப்பட்ட காலாண்டு தொழிற்படை ஆய்வினை அடிப்படையாகக் கொண்டுள்ளது.*


# அத்தியாயம் 1

# பொருளாதார நோக்கு

## 1.1 பொருளாதார வளர்ச்சி

இலங்கைப் பொருளாதாரமானது 2017 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் காணப்பட்ட 3.8 சதவீத வளர்ச்சியோடு ஒப்பிடும்போது 2018 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் 3.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது. விவசாயத்துறையானது குறிப்பாக, தானியங்கள், நெற் செய்கை, நன்னீர் மீன்பிடி மற்றும் நன்னீர் மீன் வளர்ப்பு போன்ற துறைகளில் வளர்ச்சியொன்றைக் காட்டியுள்ளது. விவசாயத்துறையானது 2017 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவு செய்துள்ள 3.2 சதவீத எதிர்மறையான வளர்ச்சியிலிருந்து 2018 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் 4.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது. 2018 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் கைத்தொழில் மற்றும் சேவைகள் துறையானது முறையே 1.0 சதவீதத்தினாலும் 4.4 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்துள்ளது. நாட்டின் சில பகுதிகளில் நிலவிய தொடர்ச்சியான வறட்சி நிலைமை மற்றும் நாட்டின் சில மாவட்டங்களில் இடம்பெற்ற வெள்ளம் மற்றும் மண்சரிவு என்பன பொருளாதார செயற்பாடுகளில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியது.


**வரைபு 1.1| காலாண்டு மொ.உ.உற்பத்தி வளர்ச்சி**




2018 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் விவசாயம், கைத்தொழில், சேவைகள் மற்றும் வரி குறைந்த மானிய பொருட்கள் என்பன முறையே 7 சதவீதம், 30 சதவீதம், 54 சதவீதம் மற்றும் 9 சதவீதம் என மொ.உ.உற்பத்திக்குப் பங்களிப்புச் செய்துள்ளது. விவசாயத்துறையானது தானியங்கள், அரிசி, மரக்கறிகள் மற்றும் நன்னீர் மீன்பிடி என்பனவற்றின் பெறுமதிசேர் உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக வளர்ச்சியடைந்து காணப்பட்டது. நெல் உற்பத்தியானது பிரதானமாக, சாதகமான காலநிலை காரணமாக 2016/2017 பெரும்போகத்தில் பதிவாகிய 1.5 மில்லியன் மெ.தொன்களுடன் ஒப்பிடுகையில் 2.4 மில்லியன் மெ.தொன்களுக்கு 60 சதவீதத்தினால் 2017/2018 பெரும்போகத்தின் போது குறிப்பிடத்தக்களவு அதிகரித்துக் காணப்பட்டது. எவ்வாறாயினும், தெங்கு மற்றும் இறப்பர் உற்பத்திகள் முறையே 14.9 சதவீதம் மற்றும் 13.8 சதவீதம் என எதிர்மறையான வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்து குறிப்பிடத்தக்களவு சுருக்கமடைந்துள்ளது. உள்நாட்டு மீன்பிடி உபதுறையானது தேக்கங்களுக்கு மீன் குஞ்சுகளை விடுவித்ததன் காரணமாக நன்மையடைந்துள்ளது. இதேவேளை, ஆழ் கடல் மீன்பிடி உபதுறையானது ஐரோப்பிய

ஒன்றியத்தினால் மீன் ஏற்றுமதிகளின் மீதான தடையை தளர்த்தியதன் காரணமாக இலங்கை கடல் உணவு வகைகளின் ஏற்றுமதிகளுக்கான கேள்வியில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக வளர்ச்சியடைந்தது.

**வரைபு 1.2: மொத்த உள்நாட்டு உற்பத்தியின் துறைரீதியான வகுதி (நடைமுறை விலையில்) - முதலாம் காலாண்டு 2018**




பெறுமதிசேர் கைத்தொழில் துறையானது, 2017 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் பதிவாக்கிய 6.3 சதவீதத்துடன் ஒப்பிடும்போது 2018 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 1.0 சதவீதத்தினால் விரிவடைந்துள்ளது. உணவு மற்றும் குடிபானம், பலகைகள், இரசாயண உற்பத்திகள், இறப்பர் மற்றும் பிளாஸ்திக் உற்பத்திகள், அடிப்படை உலோகங்கள், மின்சாரம், எரிவாயு, நீராவி மற்றும் குளிரூட்டி வழங்கல், கழிவு மற்றும் கழிவகற்றல் செயற்பாடுகள் உள்ளிட்ட கைத்தொழில் நடவடிக்கைகள் என்பன கைத்தொழிற் துறையின் வளர்ச்சிக்கு சாதகமான முறையில் பங்களிப்புச் செய்துள்ளது. பலகை மற்றும் பலகை உற்பத்திகள் 2017 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவு செய்துள்ள 2.1 சதவீத வீழ்ச்சியிலிருந்து மீளாய்வுக் காலப்பகுதியில் 11.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது.

**அட்டவணை 1.1 | மொ.உ.உற்பத்தியின் துறைவாரியான உள்ளடக்கம் (2010 நிலையான விலைகளில்) முதலாம் காலாண்டு முதலாம் காலாண்டு (2017 -2018)**

*ரூபா.பில்*

| | பொருளாதார செயற்பாடுகள | 2017 | 2018 (தற்க.) | மாற்றல் சதவீதம் (%) |
|---|---|---|---|---|
| | **விவசாயம் காடாக்கம் மற்றும் மீன்பிடி** | **147,783** | **154,907** | **4.8** |
| 1 | தானியங்கள் (நெல் நீங்கலாக) | 3,253 | 4,561 | 40.2 |
| 2 | நெல் | 5,372 | 8,415 | 56.6 |
| 3 | மரக்கறிகள் | 8,323 | 10,179 | 22.3 |
| 4 | கரும்பு, புகையிலை, நீண்ட காலப் பயிர்கள் அல்லாதவை | 436 | 396 | -9.2 |
| 5 | பழங்கள் | 12,867 | 13,638 | 6.0 |
| 6 | எண்ணெய் பிரித்தெடுக்கும் காய்கள் (தேங்காய், செவ்விளநீர், பனங்காய்) | 15,043 | 13,012 | -13.5 |
| 7 | தேயிலை (பச்சை இலைகள்) | 14,588 | 16,139 | 10.6 |
| 8 | ஏனைய பிற பானப் பயிர்கள் (கோப்பி, கொக்கோ) முதலியன | 317 | 333 | 5.0 |
| 9 | நறுமணப் பொருட்கள், வாசனைப் பயிர்கள், மருந்தாக்கல் பயிர்கள் | 15,663 | 15,982 | 2.0 |

| | | | | |
|---|---|---|---|---|
| 10 | இறப்பர் | 6,799 | 5,853 | -13.9 |
| 11 | ஏனைய நீண்டகாலப் பயிர்கள் | 4,289 | 4,165 | -2.9 |
| 12 | கால்நடை உற்பத்தி | 13,277 | 13,994 | 5.4 |
| 13 | நாற்றுக்கள் விநியோகம் மற்றும் விவசாய ஒத்துழைப்பு செயற்பாடுகள் | 2,595 | 2,484 | -4.3 |
| 14 | விறகு, காடாக்கம் | 14,576 | 15,044 | 3.2 |
| 15 | ஆழ்கடல் மீன்பிடி, ஆழ்கடல் மீன் வளர்ப்பு | 27,993 | 27,428 | -2.0 |
| 16 | நன்னீர் மீன்பிடி மற்றும் நன்னீர் மீன் வளர்ப்பு | 2,390 | 3,284 | 37.4 |
| | | | | |
| **கைத்தொழில்** | | **690,910** | **697,620** | 1.0 |
| 17 | அகழ்வு, சுரங்க மறுத்தல் | 58,806 | 59,172 | 0.6 |
| 18 | உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்திகள் | 158,328 | 166,586 | 5.2 |
| 19 | பிடவை, ஆடைகள் மற்றும் தோற்பொருட்கள் | 105,245 | 110,176 | 4.7 |
| 20 | மரம், மரப்பொருள், தக்கை உற்பத்திகள் தளபாடம் நீங்கலாக | 9,773 | 10,940 | 11.9 |
| 21 | காகித உற்பத்திகள், அச்சு மற்றும் ஊடக உற்பத்திகளின் மீள் உற்பத்தி | 12,023 | 11,844 | -1.5 |
| 22 | சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் மற்றும் தார் வகை உற்பத்திகள் | 11,739 | 7,188 | -38.8 |
| 23 | இரசாயனப் பொருட்கள் மற்றும் அடிப்படை மருந்தாக்கல் பொருட்கள் உற்பத்தி | 20,458 | 21,713 | 6.1 |
| 24 | இறப்பர் மற்றும் பிளாஸ்ரிக் உற்பத்திகள் | 11,924 | 12,870 | 7.9 |
| 25 | ஏனைய உலோக கனிப்பொருட்கள் அல்லாத உற்பத்திகள் | 19,152 | 19,465 | 1.6 |
| 26 | அடிப்படை உலோகங்கள், பொருத்தப்பட்ட உலோகப் பொருட்கள் | 12,031 | 13,123 | 9.1 |
| 27 | இயந்திரங்கள், சாதனங்கள் | 14,430 | 13,632 | -5.5 |
| 28 | தளபாடம் | 30,240 | 29,626 | -2.0 |
| 29 | ஏனைய இயந்திர சாதன தயாரிப்பு, பொருத்துதல், பழுதுபார்த்தல் | 21,434 | 21,368 | -0.3 |
| 30 | மின்சாரம், எரிவாயு, நீராவி மற்றும் குளிரூட்டல் சேவை | 22,653 | 24,972 | 10.2 |
| 31 | நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல் | 3,375 | 3,423 | 1.4 |
| 32 | கழிவுப் பொருட்கள், கழிவு, சுத்திகரித்தல் மற்றும் அகற்றல் செயற்பாடுகள் | 6,692 | 7,348 | 9.8 |
| 33 | நிர்மாணம் | 172,608 | 164,173 | -4.9 |
| | | | | |
| **சேவைகள்** | | **1,215,384** | **1,269,228** | **4.4** |
| 34 | மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம் | 244,700 | 258,018 | 5.4 |
| 35 | பண்டசாலை உள்ளடங்கலாக பொருட்கள் மற்றும் பயணிகள் போக்குவரத்து | 220,064 | 222,731 | 1.2 |
| 36 | தபால் மற்றும் விரைவுத் தபால் செயற்பாடுகள் | 1,084 | 1,155 | 6.5 |
| 37 | தங்குமிடம், உணவு மற்றும் குடிபானச் செயற்பாடுகள் | 36,004 | 38,739 | 7.6 |
| 38 | ஒலிபரப்பு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ஒலி, ஒளி தயாரிப்புகள் | 771 | 630 | -18.3 |
| 39 | தொலைத்தொடர்பு | 9,421 | 10,465 | 11.1 |
| 40 | தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்ட மதியுரையும் மற்றும் தொடர்புபட்ட செயற்பாடுகளும் | 3,236 | 3,374 | 4.3 |
| 41 | நிதிச்சேவை செயற்பாடுகள், துணை நிதிச்சேவை | 118,082 | 132,524 | 12.2 |
| 42 | காப்புறுதி, மீள் காப்புறுதி மற்றும் ஓய்வூதிய நிதியளிப்பு | 16,616 | 18,155 | 9.3 |
| 43 | வதிவிட உரித்து உள்ளடங்கலாக ஆதன விற்பனை | 134,141 | 140,693 | 4.9 |
| 44 | உயர் தொழில் சேவைகள் | 37,879 | 39,341 | 3.9 |
| 45 | பொது நிருவாகம் பாதுகாப்பு கட்டாய சமூகப் பாதுகாப்பு | 96,330 | 95,951 | -0.4 |
| 46 | கல்வி | 42,618 | 41,909 | -1.7 |
| 47 | மனித தேகாரோக்கிய செயற்பாடுகள் | 32,464 | 32,519 | 0.2 |
| 48 | ஏயை தனிப்பட்ட சேவை செயற்பாடுகள் | 221,972 | 233,023 | 5.0 |
| | **அடிப்படை விலைகளில் மொத்த பெறுமதி சேர்க்கை** | **2,054,078** | **2,121,756** | **3.3** |
| | **(+)மானியங்கள் குறைந்த பொருட்கள் மீதான வரிகள்** | **100,893** | **102,101** | **1.2** |
| | **நிலையான விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி** | **2,154,971** | **2,223,856** | **3.2** |

அவ்வாறே, மின்சாரம், எரிவாயு, நீராவி மற்றும் குளிரூட்டல் வழங்கல் உபதுறையானது 2017ஆம் ஆண்டில் முதல் காலாண்டில் காணப்பட்ட 0.3 சதவீத எதிா்மறையான வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது 2018 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 10.2 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவில் வளர்ச்சியடைந்தது. பெற்றோலியத் துறையின் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகள் மீளாய்வுக் காலத்தில் 38.8 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது. எவ்வாறாயினும், பெற்றோலியத்தின் மூலமான ஏற்றுமதிச் சம்பாத்தியம் 2017 ஆம் ஆண்டில் இதே காலாண்டில் பெறப்பட்ட ஐ.அ.டொ. 90.6 மில்லியனுடன் ஒப்பிடும்போது 2018 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் ஐ.அ.டொ. 135.5 மில்லியன் வரை 49.6 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. மின்வலு உற்பத்தியும் 2017 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் காணப்பட்ட 3,500 ஜிகா வோட்டிலிருந்து 2018 ஆம் ஆண்டின் சனவரி முதல் மார்ச்சு மாத வரையான காலப்பகுதியில் 3,838 ஜிகா வோட் வரையில் 9.6 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. நீர் மின் உற்பத்தியானது நாட்டில் நிலவிய கடும் மழையான வானிலை காரணமாக மீளாய்வுக் காலத்தில் 650 ஜிகா வோட்வரையில் 87.6 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

சேவைகள் துறையானது நிதிச் சேவைகள், தொலைத்தொடர்பு, தங்குமிட வசதிகள், காப்புறுதி, மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம், ஆதன விற்பனை, உயர்தொழில் சேவைகள், தபால் மற்றும் கூரியர் சேவை ஆகியவற்றின் விரிவாக்கம் காரணமாக 2017 ஆம் ஆண்டின் இதே காலாண்டின் 3.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது 2018 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் பெறுமதிசேர் நியதிகளில் 4.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது. பெறுமதிசேர் நிதிச் சேவைகள் 2017 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவுசெய்த 14.9 சதவீதத்திலிருந்து 2018 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் 12.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது. இதேவேளை, காப்புறுதி செயறபாடுகள் மீளாய்வுக் காலத்தில் 9.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது.

தொலைத்தொடர்பு செயற்பாடுகள் என்பனவும் மீளாய்வுக் காலப்பகுதியில் பெறுமதிசேர் நியதிகளில் பயன்பாடு அதிகரித்ததன் காரணமாக 2018 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் சேர்க்கப்பட்ட நூற்றுக்கு 11.1 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. மொத்த மற்றும் சில்லறை வர்த்தக உப துறையும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தக செயற்பாடுகள் காரணமாக 2017 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவாகிய 4.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது 2018 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் பெறுமதிசேர் நியதிகளில் 5.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது. இதேவேளை, தபால் மற்றும் கூரியர் சேவைகள், தங்குமிட வசதிகள், உணவு மற்றும் குடிபானம், ஆதனச் சொத்து விற்பனை என்பனவும் மீளாய்வுக் காலத்தில் பெறுமதி நியதிக்கமைவாக முறையே 6.5 சதவீதத்தினாலும், 7.6 சதவீதத்தினாலும் மற்றும் 4.9 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்துள்ளது.

### 1.2 பணவீக்கம்

தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் (2013=100) அமைவாக கணக்கிடப்படுகின்ற பணவீக்கமானது 2017 டிசம்பர் மாதத்தில் பதிவு செய்துள்ள 7.3 சதவீதத்திலிருந்து 2018 சனவரி மாதத்தில் 5.4 சதவீதமாக ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் வீழ்ச்சியடைந்துள்ளது. 2017 சனவரி மாதத்தில் காணப்பட்ட உயர்மட்ட பணவீக்கமானது, 2018 சனவரி மாதத்தின் உணவு விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக வீழ்ச்சிடைவதற்கு காரணமாக அமைந்தது. வருடாந்த சராசரி அடிப்படையில் அளவிடப்பட்ட தேசிய நுகர்வோர் விலைச் சுட்டிடெண்ணின் வருடாந்த சராசரிப் பெறுமதியில் ஏற்பட்ட மாற்றமானது 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதத்தன் 7.7 சதவீதத்திலிருந்து 2018 சனவரி மாதத்தில் 7.6 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

2018 மார்ச்சு மாதத்தில் 2.8 சதவீதத்திலிருந்து 2018 ஏப்பிரல் மாதத்தில் 1.6 சதவீதம் வரையில் பணவீக்கமானது ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் மேலும் வீழ்ச்சியடைந்துள்ள அதேவேளையில், 2017 ஏப்பிரல் மாதத்தில் உணவு வழங்கல்களின் விலைகள் அதிகூடிய பெறுமதியைப் பெற்றமை இதற்குப் பிரதான காரணமாக அமைந்தது. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையில் கணக்கிடப்படுகின்ற வருடாந்த சராசரி பணவீக்கம் 2018 சனவரி மாதத்தில் காணப்பட்ட 7.6 சதவீதத்திலிருந்து 2018 ஏப்பிரல் மாதத்தில் நூற்றுக்கு 6.1 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் மூலம் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் கணக்கிடப்படுகின்ற பண வீக்கமானது, 2017 ஆம் ஆண்டின் மே மாதத்தில் பதிவு செய்த 6.0 சதவீதத்துடன் ஒப்பிடும்போது 2018 ஆம் ஆண்டின் மே மாதத்தில் 4.0 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்துள்ளது. 2017 ஆம் ஆண்டின் மே மாதத்தில் 9.3 சதவீதமாக ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் காணப்பட்ட உணவுப் பொருட்கள் பணவீக்கமானது 2018 மே மாதத்தில் 3.3 சதவிதமாக வீழ்ச்சியடைந்துள்ள அதே வேளையில் உணவு அல்லாத பொருட்கள் முறையே 3.8 சதவீதத்திலிருந்து 4.2 சதவீதமாக அதிகரித்துள்ளது. கேள்வியின் மூலம் ஏற்படுகின்ற அழுத்தத்தை படிப்படியாக முகாமை செய்வதன் ஊடாக பணவீக்கம் தொடர்ந்தும் நடுத்தரமான ஒற்றை இலக்கத்தில் பேணுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற அதேவேளையில் நடுத்தர காலத்தில் 4 - 6 சதவீத இடைவெளியில் நிலையாக வைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

**அட்டவணை 1.2 | பணவீக்க அசைவுகள் (%)**

| ஆண்டு | மாதம் | கொ.நு.வி.சு.எ. (2013=100) | | | | தே.நு.நீ.சு.(2013=100) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | தலைக்குரிய பணவீக்கம் | | முக்கிய பணவீக்கம் * | | தலைக்குரிய பணவீக்கம் | | முக்கிய பணவீக்கம் * | |
| | | புள்ளிக்கு புள்ளி | வருடாந்த சராசரி | புள்ளிக்குப் புள்ளி | வருடாந்த சராசரி | புள்ளிக்குப் புள்ளி | வருடாந்த சராசரி | புள்ளிக்குப் புள்ளி | வருடாந்த சராசரி |
| 2017 | சனவரி | 5.5 | 4.3 | 7.0 | 4.7 | 6.5 | 4.6 | 7.1 | 6.2 |
| | பெப்ரவரி | 6.8 | 4.6 | 7.1 | 5.0 | 8.2 | 5.1 | 7.1 | 6.4 |
| | மார்ச்சு | 7.3 | 5.0 | 7.3 | 5.3 | 8.6 | 5.6 | 7.0 | 6.6 |
| | ஏப்பிரல் | 6.9 | 5.3 | 6.8 | 5.5 | 8.4 | 6.0 | 5.9 | 6.6 |
| | மே | 6.0 | 5.4 | 5.2 | 5.5 | 7.1 | 6.1 | 4.7 | 6.4 |
| | யூன் | 6.1 | 5.5 | 5.1 | 5.5 | 6.3 | 6.1 | 4.1 | 6.1 |
| | யூலை | 4.8 | 5.4 | 4.9 | 5.4 | 6.3 | 6.2 | 4.2 | 5.9 |
| | ஓகத்து | 6.0 | 5.5 | 6.0 | 5.6 | 7.9 | 6.5 | 4.8 | 5.8 |
| | செத்தெம்பர் | 7.1 | 5.8 | 6.0 | 5.8 | 8.6 | 6.8 | 4.6 | 5.7 |
| | ஒக்தோபர் | 7.8 | 6.1 | 5.8 | 6.0 | 8.8 | 7.1 | 4.1 | 5.6 |
| | நவம்பர் | 7.6 | 6.4 | 5.2 | 6.0 | 8.4 | 7.5 | 2.8 | 5.2 |
| | திசெம்பர் | 7.1 | 6.6 | 4.3 | 5.9 | 7.3 | 7.7 | 2.7 | 4.9 |
| 2018 | சனவரி | 5.8 | 6.6 | 3.5 | 5.6 | 5.4 | 7.6 | 2.1 | 4.5 |
| | பெப்ரவரி | 4.5 | 6.4 | 3.5 | 5.3 | 3.2 | 7.2 | 2.0 | 4.1 |
| | மார்ச்சு | 4.2 | 6.1 | 3.4 | 5.0 | 2.8 | 6.7 | 1.9 | 3.6 |
| | ஏப்பிரல் | 3.8 | 5.9 | 3.5 | 4.7 | 1.6 | 6.1 | 1.9 | 3.3 |
| | மே | 4.0 | 5.7 | 3.2 | 4.5 | 2.1 | 5.7 | 1.7 | 3.1 |

மூலம்: *தொகை மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*

**கொ.நு.வி.சுட். முக்கிய பணவீக்கம் உணவு, சக்தி, வலு மற்றும் போக்குவரத்து நீங்கலாக*

## 1.3 நாணயம் மற்றும் கடன்

2018 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் ஒதுக்கப் பணம் மற்றும் விரிந்த பணம் (M2b) அதேபோன்று தனியார் துறைக்கான கடன் வழங்கல் என்பன அதிகரித்துள்ளன. 2018 ஆம் ஆண்டின் ஏப்பிரல் மாதத்தில் இலங்கை மத்திய வங்கியினால் நிலையான கடன் வசதி வீதம் 25 அடிப்படைப் புள்ளிகளினால் 8.5 சதவீதம் வரை குறைக்கப்பட்ட அதேவேளையில் நிலையான வைப்பு வசதி வீதம் 7.25 சதவீதத்தில் மாற்றமின்றி பேணப்பட்டு வந்துள்ளது. அதன் பிரகாரம் நாணயச் சந்தை வட்டி வீதங்கள் குறிப்பாக கடன் வழங்கல் வட்டி வீதம் 2018 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட கொள்கை ரீதியான வட்டி விகிதாசாரங்களின் சீராக்கத்தின் பெறுபேறாக எதிர்காலத்தில் வீழ்ச்சியடையுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. 2018 ஆம் ஆண்டில் மார்ச்சு மாதத்தில் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் ஒதுக்கு நிதியும் 11.8 சதவீதத்தினால் அதிகரித்துள்ள இதேவேளையில் விரிவடைந்த நாணயம் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 2017 ஆம் ஆண்டில் பதிவு செய்துள்ள 20.0 சதவீதததுடன் ஒப்பிடும்போது 2018 ஆம் ஆண்டின் மார்ச்சு மாதத்தில் 16.4 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. மேலும் அதிகூடிய பருவ கால கடன் கேள்வி காரணமாக 2018 ஆம் ஆண்டின் மார்ச்சு மாதத்தில் வருடாந்த அடிப்படையில் கணக்கிடப்படுகின்ற

தனியார் துறைக்கான கடன் 15.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது. நாட்டின் பொருளாதாரத்தின் அனைத்து முக்கிய துறைகளும் உள்ளடங்கக் கூடியவாறு இந்த தனியார் துறையின் கடன் வழங்கல் சமமான அளவில் பங்களிப்புச்செய்துள்ளது.

**அட்டவணை 1.3|நாணய மற்றும் தனியார் துறை கடன்**

| விடயம் | 2017 | | | | 2018 | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | சனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | சனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | 2018 ஏப்ரல்/ 2017 ஏப்ரல் வளர்ச்சி (%) |
| ஒதுக்க நாணயம் | 828.5 | 847.6 | 892.2 | 885.6 | 930 | 938.1 | 997.2 | 1,000.10 | 12.9 |
| விரிந்த நாணயம் (M2b) | 5,460.40 | 5,552.00 | 5,677.40 | 5,730.80 | 6,378.40 | 6,450.50 | 6,606.60 | 6,691.70 | 16.8 |
| தனியார் துறை கடன் | 4,222.30 | 4,293.20 | 4,375.20 | 4,394.10 | 4,863.40 | 4,921.60 | 5,043.90 | 5,066.50 | 15.3 |

*மூலம் : இலங்கை மத்திய வங்கி*

## 1.4 பங்குச் சந்தை

ரூபாவின் பெறுமதியிறக்கம், அவ்வாறே பொருளாதாரத்தின் மிதமான போக்கு மற்றும் கொழும்பு பங்குச் சந்தையிலிருந்து வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வெளியேறியமை காரணமாக 2018 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாத காலப்பகுதியில் பங்குச் சந்தை குறைந்த மட்டச் செயலாற்றுகையினைக் காட்டியது. அனைத்துப் பங்கு விலைச்சுட்டிகளும் 2017 ஆம் ஆண்டின் ஏப்பிரல் மாத இறுதியுடன் ஒப்பிடும்போது 2018 ஆம் ஆண்டின் மே மாத இறுதியில் 6,398 புள்ளிகளுக்கு 4.1 சதவீத வீழ்ச்சியொன்றைக் காட்டியுள்ளது. அதே வேளையில் எஸ் அன்ட் பி எஸ் எல் 20 சுட்டியானது (S&PSL20 Index) 2018 ஆம் ஆண்டின் மே மாத இறுதியில் 3,567 புள்ளிகளைப் பெற்று 6.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. எவ்வாறாயினும் முன்னைய வருடத்தின் தொடர்புடைய காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது 2018 ஆம், ஆண்டின் முதல் ஐந்து மாத காலத்தில் நாளாந்த சராசரி புரள்வுானது ரூபா 998 மில்லியனுக்கு 10.8 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. மேலும் 2017 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 2,953 பில்லியனாகக் காணப்பட்ட சந்தை மூலதனமயமாக்கல் 2018 ஆம் ஆண்டில் ரூபா 2,989 பில்லியன்களாக 1.2 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

**அட்டவணை 1.4 : |மூலதனச் சந்தை அசைவுகள்**

| குறிகாட்டிகள் | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | மே இறுதியில் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 2017 | 2018 |
| அனைத்து பங்குகள் விலைச் சுட்டெண்(1985=100) | 5,913 | 7,299 | 6,895 | 6,228 | 6,369 | 6,674 | 6,398 |
| மிலங்கா விலைச் சுட்டெண; S & P SL 20 சுட்டெண் * | 3,264 | 4,089 | 3,626 | 3,496 | 3,672 | 3,819 | 3,567 |
| சந்தை மூலதனவாக்கம் (ரூபா. பில்.) | 2,460 | 3,105 | 2,938 | 2,745 | 2,899 | 2,953 | 2,989 |
| விற்பனைகள் நிரற்படுத்தப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கைழு | 289 | 294 | 294 | 295 | 296 | 296 | 299 |
| வருடாந்த புரள்வு (ரூ.பில்.) | 828 | 1,415 | 1,060 | 737 | 915 | 901 | 998 |
| வெளிநாட்டு விற்பனைகள் (ரூ.மில்.) | 60,873 | 83,554 | 89,790 | 74,200 | 94,627 | 31,612 | 44,681 |
| வெளிநாட்டு கொள்வனவுகள் (ரூ.மில்.) | 83,657 | 104,771 | 84,418 | 74,583 | 112,285 | 50,411 | 43,093 |
| தேறிய கொள்வனவுகள் (ரூ.மில்.) | 22,784 | 21,217 | -5,372 | 384 | 17,658 | 18,798 | -1,588 |

*மூலம்: கொழும்பு பங்கு வரிவர்த்தனை நிலையம், இலங்கை மத்திய வங்கி*

** 2012 ஜூன் மாதம் பயன் வலுப்பெறும் வகையில் மிலங்கா விலைச்சுட்டியானது S & P SL 20 குறிகாட்டியினால் மாற்றியமைக்கப்பட்டது.*

## 1.5 வெளிநாட்டுத் துறை அபிவிருத்தி

இலங்கையின் வெளிநாட்டுத்துறையானது, அதிகரித்த சுற்றுளாத்துறை வருமானம், தொழிலாளர் பணவனுப்பல்கள் மற்றும் நிதிக் கணக்கிற்கான அதிகரித்த பணவனுப்பல்களை மற்றும் நிதிக் கணக்கிற்கான அதிகரித்த உட்பாய்ச்சல்கள் என்பனவற்றுடன் 2018 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களின் போது மேம்பட்ட செயலாற்றுகை ஒன்றினைப் பதிவாக்கியது. சர்வதேச நாணய முறிகள் விநியோகம் மூலமான வருவாய்களுடன் 2018 ஆம் ஆண்டின் இறுதியில் மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்குகள் ஒதுக்குகள் ஒருபோதுமில்லாதவாறு ஐ.அ.டொ.9.9 பில்லியன் என்ற உயர் பெறுமானத்தினைப் பதிவாக்கியதோடு கொழும்பு பங்குச் சந்தை மற்றும் அரசாங்க பிணையங்கள் சந்தையிலும் வெளிநாட்டுக் காசுப் பாய்ச்சல்கள் அதிகரித்துக் காணப்பட்டன. எவ்வாறாயினும், வர்த்தகப் பற்றாக்குறையானது ஏற்றுமதி வருமானங்களின் (6.0 சதவீத) மிதமான செயலாற்றுகைக்கு எதிராக அதிகரித்த இறக்குமதிச் செலவினம் (12.8 சதவீதம்) காரணமாக 2018 இன் முதல் நான்கு மாதங்களின் போது ஐ.அ.டொ.3,981 மில்லியனுக்கு அதிகரித்துள்ளது. மேலும், வர்த்தகப் பற்றாக்குறையானது விரிவடைந்து காணப்பட்ட போதிலும், 2017 இன் முதல் நான்கு முதல் நான்கு மாதங்களில் ஐ.அ.டொ.344 மில்லியன் பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் 2018 இன் ஏப்ரல் மாத இறுதியில் ஐ.அ.டொ.2,036 மில்லியன் மிகையொன்றினைப் பதிவாக்கியுள்ளது

**அட்டவணை 1.5 | வெளிநாட்டு வரத்தகம் (சனவரி – ஏப்ரல்)**

*ஐ.அ.டொ.மில்*

| விடயம் | 2017 | 2018 தற். | மாற்றம் % |
|---|---|---|---|
| **ஏற்றுமதிகள்** | **3,569.0** | **3,783.7** | **6.0** |
| விவசாய் உற்பத்திகள் | 851.7 | 843.4 | -1.0 |
| தேயிலை | 458.2 | 478.1 | 4.3 |
| ஆரம்ப நிலை உற்பத்திகள் (இறப்பர், தெங்கு உற்பத்திகள்) | 134.7 | 115.1 | -14.6 |
| ஏனைய விவசாய உற்பத்திகள் | 258.8 | 250.2 | -3.3 |
| கைத்தொழில் உற்பத்திகள் | 2,701.5 | 2,923.3 | 8.2 |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 1,626.3 | 1,667.2 | 2.5 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 120.1 | 173.2 | 44.2 |
| ஏனைய கைத்தொழில் உற்பத்திகள் | 955.0 | 1,082.8 | 13.4 |
| கனிப்பொருட்கள் | 9.9 | 10.3 | 4.0 |
| ஏனையவை | 5.9 | 6.7 | 14.3 |
| **இறக்குமதிகள்** | **6,883.3** | **7,764.6** | **12.8** |
| நுகர்வுப் பொருட்கள் | 1,515.6 | 1,780.0 | 17.4 |
| உணவு மற்றும் குடிபானங்கள் | 629.2 | 652.7 | 3.7 |
| ஏனைய நுகர்வுப் பொருட்கள் | 886.5 | 1,127.4 | 27.2 |
| இடைநிலைப் பொருட்கள் | 3,692.2 | 4,329.8 | 17.3 |
| பெற்றோலியம் | 1,208.3 | 1,402.0 | 16.0 |
| உரம் | 22.6 | 88.5 | 291.0 |
| பிடவைகள் மற்றும் ஆடைகள் | 860.6 | 882.7 | 2.6 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 1,600.7 | 1,956.6 | 22.2 |
| முதலீட்டுப் பொருட்கள் | 1,614.6 | 1,590.7 | -1.5 |
| இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 871.9 | 866.9 | -0.6 |
| போக்குவரத்து உபகரணங்கள் | 215.1 | 221.4 | 2.9 |
| கட்டட மூலப் பொருட்கள் | 524.1 | 499.7 | -4.7 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 3.4 | 2.7 | -20.8 |
| ஏனையவை | 60.9 | 64.1 | 5.3 |
| **வர்த்தக மீதி** | **-3,314.3** | **-3,980.9** | **20.1** |

*மூலம்: இலங்கை சுங்கம், இலங்கை மத்திய வங்கி*

### ஏற்றுமதிகள்

கைத்தொழில் ஏற்றுமதிகள் மூலமான வருமானங்கள் காரணமாக 2018 இன் முதல் நான்கு மாதங்களின் போது ஏற்றுமதி வருமானமானது ஐ.அ.டொ.3784 மில்லியனுக்கு 6.0 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் என்பனவற்றுக்கான அதிகரித்த

ஏற்றுமதி காரணமாக 2018 இன் முதல் நான்கு மாதங்களின் போது தைக்கப்பட்ட ஆடைகள் ஏற்றுமதி வருமானமானது ஐ.அ.டொ.1,564 மில்லியனுக்கு 2.1 சதவீதத்தனால் அதிகரித்துள்ளது. மேலும், 2018 இன் முதல் நான்கு மாதங்களின் போது தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதிகள் முறையே 4.3 சதவீதம் மற்றும் 12.9 சதவீதம் என அதிகரித்துள்ளது. எவ்வாறாயினும், தெங்கு மற்றும் வாசனைப் பொருட்களிலிருந்தான ஏற்றுமதி வருமானமானது அவற்றின் உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக மீளாய்வுக் காலத்தில் முறையே 12.8 சதவீதத்தினாலும் மற்றும் 12.1 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடை ந்துள்ளது. அத்துடன், மீளாய்வுக் காலத்தில் இலங்கையின் உற்பத்திகளுக்கான முன்னணி ஏற்றுமதி சந்தைகளான ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் , இந்தியா, ஜேர்மனி மற்றும் இத்தாலி போன்ற நாடுகள் காணப்பட்டன.

## இறக்குமதிகள்

இறக்குமதிகள் மீதான செலவினம் 2018 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் ஐ.அ.டொ.7,765 மில்லியனுக்கு 12.8 சதவீத்தினால் அதிகரித்துள்ளது.இதற்கு இடைநிலைப் பொருட்களின் இறக்குமதியில் ஏற்பட்ட அதிகரிப்பே பிரதான காரணமாய் அமைந்தன. இறக்குமதிச் செலவினத்தில் எரிபொருள் இறக்குமதிச் செலவினங்கள் பாரிய பங்களிப்புச் செய்துள்ளதோடு அதில் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய இறக்குமதிக் கட்டணம் ஐ.அ.டொ.1,054 மில்லியனுக்கு 27 சதவீதத்தினால் அதிகரித்துக் காணப்பட்ட வேளையில் மசகு எண்ணெய் மற்றும் நிலக்கரி இறக்குமதிகள் என்பன 2018 இன் முதல் நான்கு மாதங்களின் போது வீழ்ச்சியடைந்துள்ளது. மோட்டார் வாகனங்கள் மீதான இறக்குமதிச் செலவினம் 2018 இன் முதல் நான்கு மாதங்களின் போது ஐ.அ.டொ.516.6 மில்லியனுக்கு 108.2 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இதற்கு 1,000 சி.சி க்கு மேற்படாத மோட்டார் வாகனங்களின் அதிகரித்த இறக்குமதியே பிரதான காரணமாக அமைந்தது. எவ்வாறாயினும், மீளாய்வுக் காலத்தில் அரிசி இறக்குமதிச்செலவினமானது ஐ.அ.டொ.98.8 மில்லியனுக்கு 10.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. இதேவேளை, தங்க இறக்குமதிச் செலவினமும் மீளாய்வுக் காலத்தில் ஐ.அ.டொ.437.3 மில்லியனுக்கு 126.5 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளது. தங்க இறக்குமதியினைக் கட்டுப்படுத்தும் வகையில் 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18 ஆந் திகதி முதல் இறக்குமதித் தங்கத்திற்காக 15 சதவீத சுங்கத் தீர்வை யொன்றினையும் அமுல்படுத்தியது. அத்துடன், பசளை இறக்குமதிச் செலவினமும் 291.0 சதவீதத்தினால் அதிகரித்து இலங்கையின் இறக்குமதிச் செலவினம் அதிகரிப்பதற்கு பாரியளவில் பங்களிப்புச் செய்துள்ளது. இந்தியா, சீனா, ஐக்கிய அரபு எமிரேட், யப்பான மற்றும் சிங்கப்பூர் என்பன இலங்கையின் பிரதான இறக்குமதி நாடுகளாக அமைந்தன

## நடைமுறைக் கணக்கு

ஐக்கிய இராச்சியம், இந்தியா, ஜேர்மனி, சீனா மற்றும் ர'யா ஆகிய நாடுகளிலிருந்து பெருமளவிலான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்தமையினால் 2018 இன் முதலாவது காலாண்டுப் பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது. 2018 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் வருகை தந்துள்ள மொத்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 888,253 ஆகக் காணப்படுகின்ற அதேவேளையில் அது, 2017 ஆம் அண்டின் முதலாவது காலாண்டுடன் ஒப்பிடும்போது 16.1 சதவீத அதிகரிப்பாகும். அத்துடன், சுற்றுளாத்துறை வருமானமும் ஐ.அ.டொ.1,647 மில்லியனாக மீளாய்வுக் காலத்தில் பதியப்பட்டுள்ளது. ஊழியர்களின் பனவனுப்பல்களும் மீளாய்வு காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றை பதிவு செய்துள்ள அதேவேளையில், 2018 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் ஐ.அ.டொலர் 2,520 மில்லியன் வரை 5.0 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

## நிதி உட்பாய்ச்சல்

2018 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் கொழும்புப் பங்குப் பரிமாற்றத்திலுள்ள வெளிநாட்டு முதலீடுகள் ஐ.அ.டொ. 47.2 மில்லியனாக காணப்பட்டதோடு அரசாங்க பிணையங்கள் சந்தைக்கு 2018 ஏப்ரல் இறுதியில் ஐ.அ.டொ.13.6 மில்லியனும் அரசாங்கத்தின் நீண்ட கால கடன்களுக்காக ஐ.அ.டொ 30.1 மில்லியனும் மீளாய்வுக் காலத்தில் உட்பாய்சப்பட்டுள்ளன.

## சர்வதேச ஒதுக்குகள்

மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்கங்கள் ஏப்ரல் மாத இறுதியில் 5.5 மாத இறக்குமதிகளுக்குச் சமனாக ஐ.அ.டொலர் 9.9 பில்லியனாக காணப்பட்டது. மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 2018 ஏப்ரல் மாத இறுதியில் ஐ.அ.டொலர் 12.3 பில்லியன் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

## அத்தியாயம் 2

# உலக பொருளாதாரத்தின் போக்குகள்

### 2.1 உலக பொருளாதார அபிவிருத்திகள்

உலக பொருளாதார வளர்ச்சியானது சீனா, யப்பான் மற்றும் ஏனைய கிழக்காசிய பொருளாதாரங்களில் ஏற்பட்ட பலமான பொருளாதார வளர்ச்சி காரணமாக 2017 இல் பதிவாகிய 3.8 சதவீதத்திலிருந்து 2018 இல் 3.9 சதவீதத்திற்கு வலுவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.. கைத்தொழில் உற்பத்தி, அதிகரித்த முதலீட்டுகள் தொழிற்சந்தை நிலவரங்கள் மற்றும் பலமான வணிகப் பிணைப்புகள் என்பன இவ்வளர்ச்சிக்கு உந்துதல் அளித்துள்ளன. ஐக்கிய அமெரிக்க நாடுகளின் பொருளாதாரமும் அதன் எதிர்பார்க்கப்பட்டதை விடவும் வளர்ச்சியடையுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. எவ்வாறாயினும், தற்போது மேற்கொள்ளப்படுகின்ற வரி மறுசீரமைப்புகள் அத்தகைய வளர்ச்சிப் போக்கில் தாக்கத்தினை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஐரோப்பிய வலயத்தில் எதிர்பார்க்கப்பட்ட உள்நாட்டுக் கேள்வியினை விடவும் அதிகரித்த கேள்விகள், சாதகமான நாணயக் கொள்கை மற்றும் அதிகரித்த வெளிநாட்டுக் கேள்விகள் என்பனவற்றின் பிரதிபலிப்பு, 2017 ஆம் ஆண்டில் 2.3 சதவீதமாகக் காணப்பட்ட ஐரோப்பிய வலய பொருளாதாரத்தை 2018 இல் 2.4 சதவீதத்திற்கு வளர்ச்சியடையச்செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது.

2017 ஆம் ஆண்டில் 4.8 சதவீதமாகக் காணப்பட்ட வளர்ந்து வருகின்ற சந்தை மற்றும் அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளின் பொருளாதார வளர்ச்சியானது 2018 இல் 4.9 சதவீதத்திற்கு வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுவதோடு இதற்காக தற்போதைய பண்ட ஏற்றுமதியாளர்களில் ஏற்பட்ட மீளெழுச்சி மற்றும் பண்ட இறக்குமதியாளர்களின் அதிகரித்த செயற்பாடுகள் காரணமாக அமைந்துள்ளன. முதலீடுகள் பலமடைந்தமை, நிறுவனங்களின் வருமானம் அதிகரித்தமை மற்றும் சாதகமான நாணய கொள்கைகள் என்பவற்றின் பிரதிபலனாக பண்ட ஏற்றுமதி பொருளாதாரம் விரிவடைந்துள்ளது. அவ்வாறே உள்நாட்டுக் கேள்வி அதிகரிப்பு மற்றும் ஏற்றுமதி அதிகரிப்பு காரணமாக பண்ட இறக்குமதிப் பொருளாதாரங்கள் வளர்ச்சியடைந்து காணப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. எவ்வாறாயினும் அதிகரித்த வெளிநாட்டுக் கேள்வி காரணமாக சீனப் பொருளாதாரமானது 2018இல் 6.6 சதவீத நடுத்தர வளர்ச்சியொன்றினைப் பிரதிபலிக்குமெனவும் அது 2019 இல் 6.4 சதவீதமாக அமையப்பெறுமெனவும் எதிர்வுகூறப்படுகின்றது. இதேவேளை பொருட்கள் மற்றும் சேவைகள் வரியின் அமுலாக்கம் மற்றும் நாணயப் மாற்ற முன்னெடுப்புகளின் தாக்கங்கள் காரணமாக இந்திய பொருளாதார வளர்ச்சியானது 2018 இல் 7.4 சதவீதமாகவும் 2019 இல் 7.8 சதவீதமாகவும் அமைந்து காணப்படுமெனவும் எதிர்வு கூறப்படுகிறது.

ஆயினும், பூகோள ரீதியாக நிச்சயமற்ற தன்மை மேலும் தொடர்ந்து காணப்படுகிறது. உயர்ந்த படுகடன் மட்டம் மற்றும் ஒரு சில துறைகளின் ஆதித கொள்திறன் காரணமாக சீன பொருளாதாரம் மீதான பாதிப்புக்கள் அதிகரித்து காணப்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு மேலதிகமாக, பெரும்பாலான நாடுகளின் சனத்தொகை கட்டமைப்பில் ஏற்படுகின்ற மாற்றம் மற்றும் குறைந்தளவிலான உற்பத்தித் திறன் வளர்ச்சி என்பன காரணமாக உலகப் பொருளாதாரம் மந்தகதி வளர்ச்சியை நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலத்திற்கு கொண்டிருக்கும்.

2017 ஆம் ஆண்டில் 5.5 சதவீதமாகக் காணப்பட்ட குறைந்த வருமானம் பெறும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சியானது 2018 இல் 5.7 சதவீதம் வரை அதிகரிக்குமெனவும் 2019 – 2020 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் 6.1 சதவீத சராசரிப் பெறுமதியொன்றினைப் பெறுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு அதிகரித்த கனியப் பொருட்களின் உற்பத்தி, எண்ணெய் மற்றும் உலோகங்களின் விலைகள் அதிகரித்தல், விவசாய வெளியீடுகளின் வளர்ச்சி மற்றும் அதற்கான தொடர்ச்சியான உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திற்கான முதலீடுகள் என்பன காரணமாக அமைந்திருக்கின்றன.

அட்டவணை 2.1| தெரிவு செய்யப்பட்ட நாடுகளின் பிரதான பொருளாதார குறிகாட்டிகளின் பொழிப்பு – 2017

| நாடு | மொ.உ.உ வளர்ச்சி (வருடாந்த வளர்ச்சி மாற்றங்கள | பணவீக்கம் (சதவீதம்) | வேலையின்மை சதவீதம் | அரசிறை பற்றாக்குறை (மொ.உ.உ சதவீதமாக) | மொத்த பற்றாக்குறை (மொ.உ.உ சதவீதமாக) |
|---|---|---|---|---|---|
| ஆர்ஜெந்தீனா | 2.9 | 25.7 | 8.4 | -6.5 | 52.6 |
| அவுஸ்திரேலியா | 2.3 | 2 | 5.6 | -2.2 | 41.6 |
| பிரேசில் | 1 | 3.4 | 12.8 | -7.8 | 84 |
| கனடா | 3 | 1.6 | 6.3 | -1 | 89.7 |
| சிலி | 1.5 | 2.2 | 6.7 | -2.7 | 23.6 |
| சீனா | 6.9 | 1.6 | 3.9 | -4 | 47.8 |
| பிரான்ஸ் | 1.8 | 1.2 | 9.4 | -2.6 | 97 |
| ஜேர்மனி | 2.5 | 1.7 | 3.8 | 1.1 | 64.1 |
| கிரேக்கம் | 1.4 | 1.1 | 21.5 | 0 | 181.9 |
| இந்தியா | 6.7 | 3.6 | …. | -6.9 | 70.2 |
| இந்தோனேசியா | 5.1 | 3.8 | 5.4 | -2.5 | 28.9 |
| இத்தாலி | 1.5 | 1.3 | 11.3 | -1.9 | 131.5 |
| யப்பான் | 1.7 | 0.5 | 2.9 | -4.2 | 236.4 |
| கொரியா | 3.1 | 1.9 | 3.7 | 1.9 | 39.8 |
| மலேசியா | 5.9 | 3.8 | 3.4 | -2.9 | 54.2 |
| மெக்சிகோ | 2 | 6 | 3.4 | -1.1 | 54.2 |
| ர்‘யா | 1.5 | 3.7 | 5.2 | -1.5 | 17.4 |
| சிங்கப்பூர் | 3.6 | 0.6 | 2.2 | 5.9 | 110.9 |
| தென்னாபிரிக்கா | 1.3 | 5.3 | 27.5 | -4.5 | 52.7 |
| ஸ்பெய்ன் | 3.1 | 2 | 17.2 | -3.1 | 98.4 |
| இலங்கை | 3.1 | 7.1 | 4.2 | -5.5 | 77.6 |
| தாய்லாந்து | 3.9 | 0.7 | 0.7 | -0.6 | 41.6 |
| ஐக்கிய இராச்சியம் | 1.8 | 2.7 | 4.4 | -2.3 | 87 |
| ஐக்கிய அமெரிக்கா | 2.3 | 2.1 | 4.4 | -4.6 | 107.8 |
| வியட்நாம் | 6.8 | 3.5 | 2.2 | -4.7 | 58.2 |
| வெனிசுவேலா | -14 | 1087.5 | 27.1 | -31.8 | 34.9 |

*மூலம்: " உலகப் பொருளாதார பார்வை,, ச.நா.நி, ஏப்ரல் 2018*
*அரசிறை கண்காணிப்பு ச.நா.நி ஏப்ரல் 2018,ஆண்டறிக்கை 2017 இலங்கை மத்திய வங்கி*

## 2.2 உலக பணவீக்கம் மற்றும் வட்டி வீதங்கள்

அபிவிருத்தியடைந்த மற்றும் வளர்ந்து வருகின்ற சந்தைகள் மற்றும் அபிவிருத்தியடைந்து வருகின்ற பொருளாதாரங்களில் நுகர்வுப் பொருட்களின் விலைகள் அதிகரித்ததன் காரணமாக 2018 இல் உலகப் பணவீக்கமானது அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 2017 இல் அபிவிருத்தியடைந்த பொருளாதார பணவீக்கமானது 2018 இல் 2.0 சதவீதத்திற்கு அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. சக்தி மூலங்களின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்புக் காரணமாக ஐக்கிய அமெரிக்காவின் வருடாந்த பணவீக்கமானது 2018 இல், 2.5 சதவீதத்திற்கு அதிகரிக்குமெனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

ஐரோப்பிய பொருளாதாரங்களின் பணவீக்கமானது 2018 இல் 1.5 சதவீதத்தில் காணப்படுமெனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது. அவ்வாறே ஐக்கிய இராச்சியத்தின் பணவீக்கமானது 2018 இல் 2.7 சதவீதத்தில் மாற்றமுறாது காணப்படும் என்பதோடு ஸ்ரேலிங் பவுணின் பெறுமதியிறக்கம் மற்றும் பொருளாதார செயற்பாடுகளின் மந்த கதியிலான வளர்ச்சி என்பன இதற்கு காரணமாய் அமைந்துள்ளன. சக்தி வளங்கள் மற்றும் உணவு விலைகள் அதிகரித்தமை மற்றும் உள்நாட்டுக் கேள்விகள் வலுவடைந்தமை என்பன காரணமாக யப்பானின் பணவீக்கமானது 2018 – 19 ஆண்டுக் காலப்பகுதியில் 1.1 சதவீதம் வரையில் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் வளர்ந்து வருகின்ற சந்தை மற்றும் அபிவிருத்தி அடைந்து வருகின்ற பொருளாதாரங்களின் (வெனிசுவேலா நீங்கலாக) பணவீக்கமானது 2018 இல் 4.6 சதவீதம் வரையில் அதிகரிக்குமென எதிர்வு கூறப்படுகிறது. சீனாவின் பணவீக்கமானது 2018 இல் 2.5 சதவீதம் வரை அதிகரிக்கும் என்பதோடு இந்தியாவின் பணவீக்கமானது 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் 5.0 சதவீதத்தில் காணப்படுமெனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

வட்டி வீதங்களைப் பார்க்கும் போது, 2018 “ உலக பொருளாதாரப் பார்வை” (World Economic Outlook) அறிக்கை மூலம் எதிர்வு கூறப்பட்டுள்ளவாறு 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் ஆறு மாத அமெரிக்க டொலர் வைப்பின் அடிப்படையில், லண்டன் வங்கியிடை வட்டி விகிதங்கள் (LIBOR) சராசரியாக முறையே 2.4 சதவீதமாகவும் மற்றும் 3.4 சதவீதமாகவும் காணப்படுமெனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது. இதேவேளை, மூன்று மாத யூரோ வைப்பு சதவீதமானது 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் முறையே - 0.3 சதவீதம் மற்றும் 0.0 சதவீதம் ஆகவும் அமைந்து காணப்படும். அத்துடன், ஆறு மாத யாப்பானிய யென் வைப்பு அடிப்படையிலான வட்டி வீதமானது 2018 இல் பூச்சிய சதவீதமாகவும் 2019 இல் 0.1 சதவீதமாகவும் அமைந்து காணப்படுமெனவும் எதிர்வு கூறப்படுகிறது.

## 2.3 அந்நியச் செலாவணி வீதம்

நுகர்வுப் பண்ட விலைகள் பலமடைந்ததன் காரணமாக 2018 இல் அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்கள் மற்றும் வளர்ந்து வருகின்ற சந்தை மற்றும் அபிவிருத்தியடைந்து வருகின்ற பொருளாதாரங்களின் அந்நியச் செலாவணி பலமான நிலையில் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. சர்வதேச நாணய நிதியத்தின் “WEO – 2018” அறிக்கைக்கு அமைவாக, ஐக்கிய அமெரிக்க டொலர் மற்றும் யூரோ நாணய அலகுகளின் வினைத் திறனான மெய்ப்பெறுமதி 2017 ஆகஸ்ட் மாதத்தில் காணப்பட்ட மட்டத்திற்கு கிட்டிய மட்டமொன்றில் காணப்படும். யப்பானிய யென்னானது வட்டி சதவீத மாற்றம் விரிவாக்கமடைந்ததன் காரணமாக 5 சதவீதத்தினால் பெறுமதியிறக்கம் அடைந்துள்ளதோடு பிரித்தானிய பவுணானது 4 சதவீதத்திளால் பெறுமதியேற்றம் பெற்றுள்ளதோடு, இங்கிலாந்து வங்கியானது கடந்த நொவெம்பர் மாதத்தில் வட்டி வீதங்களை அதிகரித்தமையே இதற்கான பிரதான காரணமாய் அமைந்துள்ளது. வளர்ந்து வருகின்ற சந்தைப் பொருளாதாரங்களில் நிதி அலகுகளைக் கவனத்திற் கொள்ளும் போது, சீனாவின் ரெண்மின்பி நாணய அலகானது 2.0 சதவீதத்தினாலும் மலேசிய ரிங்கிட் நாணய அலகானது 7.0 சதவீதத்தினாலும் பெறுமதியேற்றம் பெற்றுள்ளதோடு இதற்காக உலகப் பொருளாதாரத்தின் போக்கில் ஏற்பட்ட வளர்ச்சி மற்றும் நுகர்வுப் பொருட்களின் விலைகள் ஸ்திரமாகக் காணப்பட்டமை என்பன காரணமாய் அமைந்திருந்தன. அதற்குமாறாக, மெக்ஸிகோவின் பேசோ நாணய அலகு, வட அமெரிக்க சுதந்திர சந்தை உடன்படிக்கை தொடர்பில் தற்போது காணப்படுகின்ற நிச்சயமற்ற தன்மை காரணமாக பெறுமதியிறக்கம் அனைந்துள்ளது. துருக்கியின் லீரா நாணய அலகானது எதிர்பார்க்கப்படும், அதிகரித்த பணவீக்கம் காரணமாக 4.5 சதவீதத்தினால் பெறுமதியிறக்கமடைந்துள்ளது.

## 2.4 அரசிறைப் பற்றாக்குறை

உலக வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையானது 2017 இல் பதிவு செய்யப்பட்ட மொ.தே.உற்பத்தியின் 3.3 சதவீத பெறுமதியிலிருந்து 2018 இல் 3.2 சதவீதத்திற்கு 0.1 சதவீத புள்ளிகளினால் சுருக்கமடைந்துள்ளது. எரி சக்தி மற்றும் நுகர்வுப் பொருட்களின் விலைகள் படிப்படியாக மீட்சியடைந்தமை மற்றும் உலகப் பொருளாதாரம் வலுவடைந்தமை என்பன இதற்கு காரணமாக அமைந்துள்ளன. அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்களில் அரசிறைப் பற்றாக்குறையானது 2018 இல் மொ.தே. உற்பத்தியின் 2.7 சதவீதமாக காணப்படும்

என்பதோடு, அது 2019 இல் 2.8 சதவீதத்தில் காணப்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. ஐக்கிய அமெரிக்க நாடுகளின் அதிகரித்த நடைமுறைச் செலவினம், கனடா மற்றும் யப்பான் போன்ற நாடுகளின் அதிகரித்த மூலதனச் செலவினம் காரணமாக பல நாடுகளில் நிதி நிலைமைகள் விரிவடைந்த நிலையொன்றினை வெளிக்காட்டின. எனினும், 2017 இல் 4.4 சதவீதமாக காணப்பட்ட வளர்ந்து வரும் சந்தை மற்றும் நடுத்தர பொருளாதாரங்களின் அரசிறைப் பற்றாக்குறையானது 2018 இல் மொ.தே. உற்பத்தியின் 4.2 சதவீதம் வரையில் சிறிதளவில் சுருக்கமடைந்துள்ளதோடு இதற்கு அந்நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட அரசிறை அபிவிருத்திகள் காரணமாய் அமைந்துள்ளன. மேலும், குறைந்த வருமானங்களுடன் கூடிய அபிவிருத்தி அடைந்து வருகின்ற பொருளாதாரங்களின் சராசரி அரசிறைப் பற்றாக்குறையானது 2018 இல் மொ.தே. உற்பத்தியின் 4.2 சதவீதத்தில் நிலையாகக் காணப்படும். இவ்வாண்டின் இரண்டாம் அரையாண்டில் பண்டங்களின் விலை அதிகரிப்பு காரணமாக சிறிதளவு வருமான அதிகரிப்பினைக் காட்டிய போதிலும் பண்ட ஏற்றுமதிப் பொருளாதாரங்களில் அரசிறைப் பற்றாக்குறையானது தொடர்ந்தும் மோசமடையும் நிலமையொன்றினைப் பிரதிபலிக்கும்.

## 2.5 அரசாங்க படுகடன்

மொ.தே. உற்பத்தி சதவீதம் என்ற வகையில் 2017 இல் 82.4 சதவீதமாகக் காணப்பட்ட அரச படுகடனானது 2018 இல் 82.1 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்துள்ளது. அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்களில் 2017 இல் மொ.தே. உற்பத்தி சதவீதம் என்ற வகையில் 105.4 சதவீதமாகக் காணப்பட்ட மொத்த அரச படுகடனானது 2018 இல் 103.9 சதவீதம் வரையில் சிறிதளவு வீழ்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஒப்பீட்டளவில், வளர்ச்சியடைந்து வருகின்ற மற்றும் சந்தைப் பொருளாதாரங்களில் 2018 இல் மொ.தே உற்பத்தி சதவீதம் என்ற வகையில் அரச படுகடனானது 51.2 சதவீதத்தில் காணப்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது. 2019 இல் அது 52.9 சதவீதம் வரையில் அதிகரிக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு மேலதிகமாக, குறைந்த வருமானம் பெறும் அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளின் அரச படுகடனானது முன்னைய வருடத்தில் மொ.தே உற்பத்தயின் 44.3 சதவீதத்திலிருந்து 2018 இல் 45.5 சதவீதம் வரையில் அதிகரிக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## 2.6 சர்வதேச வர்த்தகம் மற்றும் பண்ட விலைகள்

சர்வதேச வர்த்தகத்தின் வளர்ச்சியானது 2018 ஆம் மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் வலுவாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது, இது சர்வதேச பொருளாதார வளர்ச்சியில் குறிப்பாக, ஐக்கிய அமெரிக்கா உட்பட அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்களின் முதலீட்டில் ஏற்பட்ட வளர்ச்சி மற்றும் யப்பானின் அதிகரித்த நுகர்வு என்பன இதற்கு பிரதான ஒத்துழைப்பை வழங்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. சர்வதேச வர்த்தகத்தின் பரும அளவானது கடந்த ஆண்டின் 4.7 சதவீதத்திலிருந்து 2018 ஆம் ஆண்டில் 4.4 சதவீத்தினால் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அபிவிருத்திடைந்த, அபிருத்தியடைந்து வரும் மற்றும் வளர்ந்துவரும் பொருளாதாரங்களின் ஏற்றுமதிகளும் 2018 இல் முறையே 3.8 சதவீதம் மற்றும் 5.4 சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதே நேரத்தில் 2018 ஆம் ஆண்டில் அபிவிருத்தியடைந்த, அபிவிருத்தியடைந்து வருகின்ற மற்றும் வளர்ந்துவரும் நாடுகளின் இறக்குமதிகள் முறையே 4.1 சதவீதம் மற்றும் 4.8 சதவீதம் என அதிகரிக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

2018 இன் முதல் காலாண்டில் பொருட்களின் விலைகள் வலிமையடைந்து வருகின்றது. கச்சா எண்ணெய்யின் விலை 2018 இலும் 2019 இலும் சராசரியாக ஒரு பரலிற்கு ஐ.அ.டொ. 65 ஆக அதிகரிக்கும் கேள்வி, பெற்றோலிய பொருளாதார கூட்டமைப்பு நாடுகளினதும் மற்றும் பெற்றோலிய பொருளாதார கூட்டமைப்பில் இல்லாத நாடுகளினாலும் ஏற்படுத்தப்படும் கட்டுப்பாடுகள் மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் அதிகரித்த எண்ணெய் உற்பத்தியும் காரணமாக அமைகின்றன. 2018 ஆம் ஆண்டில், நுகர்வு குறைவதினாலும் மற்றும் தேக்கமடையும் கையிருப்புக்கள் காரணமாகவும நிலக்கரியின் விலை சராசரியாக ஒரு மெற்றிக் தொன்னிற்கு அ.டொ. 85 ஆக இருக்குமெனவும் எதிர்வு கூறப்படுகின்றது. சர்வதேச எண்ணெய் நுகர்வு 2018 இல் 1.5 சதவிகிதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) அதிகரிக்கும் என கணிக்கப்படுகின்றது.

**அட்டவணை 2.2 : சர்வதேச பொருள் விலைகள்**

| விடயம் | அலகு | மெய் | | எதிர்பார்கை | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 2016 | 2017 | 2018 கா 1 | 2018 கா 2 | 2018 கா 3 | 2018 கா 4 |
| **சக்தி** | | | | | | | |
| நிலக்கரி, அவுஸ்திரேலியா | MT | 70.1 | 86.7 | 82.3 | 79.1 | 77.7 | 76.0 |
| மசகு எண்ணெய், சராசரி * | $/bbl | 42.8 | 49.0 | 47.8 | 48.4 | 48.9 | 49.3 |
| இயற்கை வாயு, ஐ.அ.டொ. | $/MMBTU | 2.5 | 3.0 | 3.3 | 2.8 | 2.9 | 2.9 |
| **சக்தியல்லாதவை** | | | | | | | |
| **விவசாயம்** | | | | | | | |
| **குடிபானங்கள்** | | | | | | | |
| கொக்கோ விதைகள் | $MT | 2,892.0 | 1,957.7 | 1,910.6 | 1,930.1 | 1,954.0 | 1,983.2 |
| கோப்பி, ரோபுஸ்தா | cts/lb | 94.3 | 106.6 | 104.0 | 103.7 | 104.7 | 105.3 |
| தேயிலை | cts/kg | 287.4 | 375.8 | 381.2 | 381.2 | 381.2 | 381.2 |
| **உணவுகள்** | | | | | | | |
| **கொழுப்புகள் மற்றும் எண்ணெய்கள்** | | | | | | | |
| பாம் எண்ணெய் | $MT | 639.8 | 635.8 | 608.1 | 612.3 | 600.9 | 596.7 |
| சோயா அவரை உணவு | $MT | 350.2 | 362.0 | 380.5 | 380.3 | 381.1 | 377.1 |
| சோயா அவரைகள் | $MT | 362.7 | 368.8 | 383.1 | 384.3 | 384.1 | 377.4 |
| **தானியங்கள்** | | | | | | | |
| சோளம் | $MT | 159.2 | 161.9 | 173.3 | 175.4 | 176.0 | 177.3 |
| அரிசி | $MT | 388.3 | 425.2 | 480.4 | 483.9 | 484.1 | 484.1 |
| கோதுமை | $MT | 143.2 | 169.1 | 204.5 | 207.7 | 209.7 | 213.7 |
| **ஏனைய உணவுகள்** | | | | | | | |
| சீனி, சுதந்திர சந்தை | cts/lb | 18.5 | 15.5 | 14.3 | 14.3 | 14.4 | 14.6 |
| **மூலப் பொருட்கள்** | | | | | | | |
| பருத்தி | cts/lb | 74.2 | 83.4 | 77.6 | 78.1 | 78.7 | 77.5 |
| இறப்பர் | cts/lb | 74.5 | 91.0 | 79.0 | 80.7 | 81.9 | 81.9 |
| சோ்ன்வூட், ஹார்ட் வூட் | $/M3 | 738.9 | 2,766.6 | 697.4 | 697.4 | 697.4 | 697.4 |
| **உலோகங்கள் கனியுப்புக்கள்** | | | | | | | |
| அலுமினியம் | $MT | 1,604.2 | 1,883.5 | 1,902.6 | 1,911.2 | 1,917.3 | 1,922.3 |
| செப்பு | $MT | 4,867.9 | 5,827.0 | 5,935.4 | 5,952.2 | 5,966.0 | 5,975.0 |
| நிக்கல் | $MT | 9,595.2 | 9,474.6 | 9,281.8 | 9,335.0 | 9,387.0 | 9,438.0 |

*மூலம்: விலை எதிர்வுகூறலினைத் தழுவியது (13.07.2017) சர்வதேச நாணய நிதிய இணையதளம்:*
*www.imf.org/external/np/res/commodi/index.aspx*
** ஐக்கிய .இராச்சியம், பிரன்ட், டுபாய் மற்றும் மேற்கு லெக்சாஸ்(றுவுஐ) என்பனவற்றின் சராசரி விலைகள*

விவசாய உற்பத்திகளின் விலைகள் 2018 ஆம் ஆண்டில் 2.2 சதவீத்தினாலும், 2019 ஆம் ஆண்டில் 1.3 சதவீத்தினாலும் அதிகரிக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு விவசாய உற்பத்திகளில் ஏற்படும்வீழ்ச்சி காரணமாக அமையுமெனவும் எதிர்பார்க்கப படுகிறது. தானியங்களின் விலைகளும் 2018 ஆம் ஆண்டில் 7.5 சதவீத்தினாலும் 2019 ஆம் ஆண்டில் இதற்கு மேலதிகமாக 1.8 சதவீத்தினாலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எண்ணெய்கள் மற்றும் கால்நடை உணவுகளின் விலைகள் என்பன சோயா போஞ்சி உற்பத்தி நிரம்பலானது வரையறையினைப் பிரதிபலித்து 4 சதவீத்தினால் அதிகரிக்குமெனவும் எதிர்பார்க்கப் படுகிறது. 2018ஆம் ஆண்டில் குடிபான வகைகளின் விலைகளும் நிலையாக இருக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன், மூலப்பொருட்களின் விலைகள் 2018 ஆம் ஆண்டில் 2.5 சதவீத்தினால் அதிகரிக்கப்படுமெனவும் அது 2019 ஆம் ஆண்டில் மேலும் அதிகரிக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. பசளைகளின் விலைகளும் 2018 ஆம் ஆண்டில் 2 சதவீதத்தினால் அதிகரிக்கும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளதோடு இதற்காக ஒப்பீட்டளவில் குறிப்பிடத்தக்களவு கேள்வி மற்றும் அதனை ஈடுசெய்வதற்கான போதியளவு நிரம்பல் என்பன காணப்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. உலோகங்களின் விலைகளும் 2018 ஆம் ஆண்டில் 9 சதவீத்தினால் அதிகரிக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

# அத்தியாயம் 3

# அரசிறை அபிவிருத்திகள்

## 3.1 மேன்நோக்கு

அதிகரிக்கப்பட்ட வரி வருமானம் மற்றும் மேம்படுத்தப்பட்ட அரசாங்கச் செலவினத்தின் முகாமைத்துவம் ஆகியவற்றுடன் 2018 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் அரசாங்கமானது வருமான அடிப்படையிலான அரசிறைத் திரட்சி செயற்பாட்டில் மேலும் வலுப்படுத்தியுள்ளது. அரசாங்கத்தின் வருமானமானது வருடாந்த மதிப்பீட்டின் 28.1 சதவீதத்தை உண்மைப்படுத்தும் வகையில் 2017 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா. 589,438 மில்லியனுடன் ஒப்பிடும்போது 2018 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் ரூபா 622,378 மில்லியன் வரை 5.6 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. 2017 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது மீளாய்வுக் காலப்பகுதியில் வரி வருமானம் ரூபா 570,471 மில்லியன் வரை 2.8 சதவீதத்தினால் ஓரளவு அதிகரித்துள்ள அதேவேளையில் வரியல்லாத வருமானம் ரூபா 51,907 மில்லியன் வரை 49.5 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளது. வரியல்லாத வருமானத்தின் அத்தகைய அதிகரிப்பானது பிரதானமாக திரட்டிய நிதியத்துக்கான இலங்கை மத்திய வங்கியின் இலாபத்தை மாற்றுவதற்கு காரணமாக அமைய முடியும். அதேவேளையில் அரசாங்கத்தின் செலவினமானது 2017 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா.823,260 மில்லியனுடன் ஒப்பிடும்போது 2018 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் ரூபா 873,350 மில்லியன் வரை 6.1 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

வரி அடிப்படையை விரிவுபடுத்துதல், வரி முறையினை இலகுபடுத்துதல், வரி விலக்குகளைக் குறைத்தல் மற்றும் வரி நிருவாக செயல் முறையை வலுவூட்டுதல் ஆகியவற்றின் மூலம் பல்வேறு வரி சீரமைப்புக்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. நேரடியான வரி சேகரிப்பினை அதிகரிப்பதற்கு 2018 ஏப்பிரல் 01 ஆந் திகதி முதல் செயல்வலுப் பெறும் விதமாக புதிய உள்நாட்டு இறைவரிச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் மூன்று அடுக்கு வருமான வரிவீதக் கட்டமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டது. அவை (i) 28 சதவீத நிலையான வீதம், (ii) 14 சதவீத சலுகை வீதம் மற்றும் (iii) 40 சதவீத உயர் வட்டி வீதம் என்பனவாகும். வேலைவாய்ப்பு வருமானம் 24 சதவீதம் வரை அதிகரித்துவரும் வீதத்தின் கீழ் வரி விதிக்கப்படுகின்ற அதேவேளையில் தனி நபர் ஒருவரின் வரி விதிக்கத்தக்க வருமானத்திற்கு ஏற்புடையதாகும் மட்டங்கள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. மூலதன சம்பாத்தியங்கள் மீதான வருமான வரியானது காணி, கட்டடங்கள் மற்றும் கோரப்பட்ட பங்குகள் தவிர்ந்த ஏனைய முதலீடுகள் ஆகியவற்றின் மீது ஏற்புடையதாகும் 10 சதவீத வரி வீதமொன்றும் அறிமுகப்படுத்தப்பட்டது. அதேவேளையில் வாகனங்களுக்கான இறக்குமதிகளின்போது பொருளாதார சேவைக் கட்டணம் விதிக்கப்பட்டது. 2017 ஏப்பிரல் 01 ஆந் திகதி முதல் செயல்வலுப் பெறும் விதமாக ஒவ்வொரு காலாண்டுக்கும் ரூபா 50 மில்லியனிலிருந்து ஒவ்வொரு காலாண்டுக்கும் ரூபா 12.5 மில்லியன் வரை பொருளாதார சேவைக் கட்டண முதல்நிலை குறைக்கப்பட்டது. உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இலங்கை சுங்கத் திணைக்களம் மற்றும் பொதுத் திறைசேரி ஆகியவற்றில் மேம்படுத்தப்பட்ட வரி நிர்வாகத்துடன் இணைந்து மேற்குறிப்பிட்ட வரிச் சீரமைப்பிலிருந்து நன்மைகளைப் பெறும் அதேவேளையில் வருமான வரியிலிருந்து உருவாக்கப்படும் வருமானம் 2017 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவாகிய ரூபா 84,721 மில்லியனுடன் ஒப்பிடும்போது 2018 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் ரூபா 95,128 மில்லியன் வரை 12.3 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

**அட்டவணை 3.1| அரசாங்கத்தின் அரசிறைச் செயற்பாடுகள்: சனவரி - ஏப்ரல்**

ரூபா. மில்

| விடயம் | 2017 | 2018 தற்காலிக |
|---|---|---|
| **வருமானம் மற்றும் மானியங்கள்** | **590,089** | **622,712** |
| வருமானம் | **589,439** | **622,379** |
| வரி வருமானம் | 554,715 | 570,471 |
| வரியல்லா வருமானம் | 34,724 | 51,908 |
| மானியங்கள் | 650 | 333 |
| **செலவினம்** | **823,260** | **873,350** |
| நடைமுறை | **626,469** | **685,966** |
| வட்டிக் கொடுப்பனவுகள் | 243,499 | 271,545 |
| ஏனையவை | 382,970 | 414,421 |
| பொதுமுதலீடு | 201,012 | 181,998 |
| ஏனையவை | **-4,221** | 5,386 |
| **வருமானப் பற்றாக்குறை (-)/மிகை (+)** | **-37,030** | **-63,587** |
| **மொத்த வருமானப் பற்றாக்குறை (-)/மிகை (+)** | **-233,171** | **-250,638** |
| **நிதியீட்டம்** | **233,171** | **250,638** |
| வெளிநாட்டு நிதியீட்டம் | **14,342** | **7,235** |
| கடன் பெறுகை | 75,000 | 78,992 |
| மீள் கொடுப்பனவு | -60,658 | -71,757 |
| உள்நாட்டு நிதியீட்டம் | **218,829** | **243,403** |
| கடன் பெறுகை | 613,456 | 686,882 |
| மீள் கொடுப்பனவு | -394,627 | -443,479.0 |

*மூலம்: அரசிறை கொள்கைத் திணைக்களம்*

2018 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் மறைமுகமான வரிகளில் இருந்து கிடைக்கும் வருமானத்தை அதிகரிப்பதற்கு அரசாங்கத்தினால் பல்வேறு கொள்கை ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பெறுமதியைக் குறைத்துக் காட்டுவதன் காரணமாக வருமான இழப்புகளைத் தவிர்ப்பதற்கு அலகுப் பெறுமதியினை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தி வரியொன்றை மோட்டார் வாகனங்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட அதேவேளையில் உள்நாட்டுக் கைத்தொழிலை பாதுகாப்பதற்கு விசேட வர்த்தகப் பண்ட அறவீட்டு வீதம் திருத்தப்பட்டுள்ளது. மேலும் தேச நிர்மாண வரிக்காக அறிமுகப்படுத்தப்பட்டிருந்த வரி விலக்குகள் நீக்கப்பட்டுள்ளன.

உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளை அதிகரித்தல் மற்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு வருமான வரியை அதிகரிப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் உதவியுடன் உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்ட வருமான வரி ரூபா 193,394 மில்லியன் வரை நூற்றுக்கு 9.1 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

எவ்வாறாயினும் இறக்குமதி அடிப்படையிலான வரிகளிலிருந்து பெறப்பட்ட வருமானம், 2017 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது 2018 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் ரூபா 268,007 மில்லியன் வரை 3.6 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது. 2018 சனவரி முதல் ஏப்ரல் வரையான காலப்பகுதியில் உள்நாட்டு நடவடிக்கைகள் மீதான பெறுமதி சேர் வரியிலிருந்து கிடைத்த வருமானம் ரூபா 102,220 மில்லியன் வரை 5.6 சதவீதத்தினால் அதிகரித்துள்ள அதேவேளையில் இறக்குமதி மீதான பெறுமதி சேர் வரியிலிருந்து பெறப்பட்ட வருமானம் ரூபா 57,029 மில்லியன் வரை 2.5 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. பெறுமதி சேர் வரி வருமானத்தின் அத்தகைய அதிகரிப்புக்கு வரி அடிப்படை விரிவுபடுத்தப்பட்டமை மற்றும் 2016 ஆம் ஆண்டின் இறுதியில் பெறுமதிசேர் வரி வீதம் நூற்றுக்கு 15 சதவீதத்தினால் அதிகரிப்பதற்குக் காரணமாக அமைந்தது. 2018 சனவரி முதல் ஏப்ரல் வரையான காலப்பகுதியில் உள்நாட்டு நடவடிக்கைகள் மீதான தேச நிர்மாண வரியின் மூலம் உருவாக்கப்பட்ட வருமானம் ரூபா 18,289 மில்லியன்வரை நூற்றுக்கு 8.7 சதவீதத்தினால் அதிகரித்துள்ள

அதேவேளையில் இறக்குமதிகள் மீதான தேச நிர்மாண வரியின் மூலம் உருவாக்கப்பட்டவருமானம் ரூபா 6,424 மில்லியன் வரை நூற்றுக்கு 3.1 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. 2016 ஆம் ஆண்டின் இறுதியில் தேச நிர்மான வரியின் கீழ் வரையறுக்கப்பட்ட வரிக் குறைத்தலின் காரணமாக வரி அடிப்படை விரிவடைந்தமை மற்றும் சேவைத் துறை மீதான ஒரு சில வரி விலக்குகள் நீக்கப்பட்டமை இந்த வளர்ச்சிக்குப் பிரதான காரணமாக அமைந்தது.

**அட்டவணை 3.2| மதிப்பிடப்பட்ட, மெய் வருமானம் மற்றும் செலவினம் : சனவரி – ஏப்பிரல் 2018**

ரூபா.மில

| விடயம் | மதிப்பீடு | உண்மை | எதிர்வுகூறல் |
|---|---|---|---|
| **மொத்த வருமானம்** | **690,200** | **622,379** | **(67,821)** |
| வரி வருமானம | 636,700 | 570,471 | (66,229) |
| வரியல்லாத வருமானம | 53,500 | 51,908 | (1,592) |
| | | | |
| **மொத்தச் செலவினம்** | **900,000** | **873,350** | **(26,650)** |
| மீண்டு வரும் செலவினம் | 670,000 | 685,966 | 15,966 |
| மூலதனச் செலவினமும் தேறிய பெறுகைகளும் | 230,000 | 187,384 | (42,616) |

*மூலம் : தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களம், திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களம், மற்றும் அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

2018 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் மதுவரியின் மூலம் உருவாக்கப்பட்ட வருமானம் ரூபா 170,839 மில்லியன் வரை நூற்றுக்கு 9.7 சதவீதத்தினால் அதிகரித்துள்ள அதேவேளையில் அது 2018 ஆம் ஆண்டின் வருடாந்த மதிப்பீட்டின் நூற்றுக்கு 31.9 சதவீதமாகும். மோட்டார் வாகன இறக்குமதியில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக ரூபா 73,774 மில்லியன் வரை நூற்றுக்கு 15.3 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு பிரதான காரணமாக அமைந்தது. மது வரிக்கான வரி வீதங்கள் மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணங்களை அதிகரித்து மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் காரணமாக மதுபான உற்பத்தி மீதான வருமானம் 2018 ஆம் ஆண்டில் தொடர்புடைய காலப்பகுதியில் ரூபா 170,839 மில்லியன் வரை நூற்றுக்கு 9.7 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. அதேவேளையில் சிகரெட் மற்றும் புகையிலை ஆகியவற்றின் மூலம் திரட்டப்பட்ட வருமானம் ரூபா 29,843 மில்லியன் வரை நூற்றுக்கு 25.2 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்துள்ள அதேவேளையில் அதற்காக 2018 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் சிகரெட் உற்பத்தி நூற்றுக்கு 9.7 சதவீதத்தினால் சிகரெட் 1,101 மில்லியன் வரை அதிகரித்தமை காரணமாக அமைந்தது. எவ்வாறாயினும் பெற்றோலிய உற்பத்தியின் மூலமான வருமானம் முன்னைய வருடத்துடன் ஒப்பிடும்போது இந்த வருடத்தில் முதல் நான்கு மாத காலப்பகுதியில் நூற்றுக்கு 13.6 சதவீதத்தினால் சுருங்கியுள்ளது. 2018 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் பெற்றோலிய இறக்குமதி நூற்றுக்கு 8 சதவீதத்தினால் அதிகரித்துள்ள போதிலும் டீசல்.·. எரிவாயு எண்ணெய் இறக்குமதி நூற்றுக்கு 13.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைவதற்கு காரணமாக அமைந்தது. அதேவேளையில் பிளாஸ்றிக் ரேசிங் மற்றும் சீனி சார்ந்த கார்பனேட் குடிபானங்களுக்கான உற்பத்தி வரி அறிமுகப்படுத்தப்பட்டமை உற்பத்தி வரி வருமானம் அதிகரிப்பதற்குக் காரணமாக அமைந்தது.

சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளுக்கு வசதியளிப்பதனை நோக்காகக் கொண்டு 2018 ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தின் ஊடாக அண்ணளவாக சுங்கவரியல்லாத ஏனைய சுமார் 1,200 இறக்குமதிப் பொருட்களின் வரிகள் நீக்கப்பட்டன. அதில் சுமார் 900 பொருட்கள் துறைமுகம் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி வரியின் கீழும் எஞ்சியவை செஸ் வரியின் கீழும் நீக்கப்பட்டுள்ளன. துறைமுகம் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி வரியின் கீழ் 2018 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் திரட்டப்பட்ட வருமானம் ரூபா 36,080 மில்லியனாகக் காணப்பட்ட அதேவேளையில் அது. நூற்றுக்கு 11.5 சதவீத வளர்ச்சியாகும். எவ்வாறாயினும் 2018 ஆம் ஆண்டின் முதல்

நான்கு மாத காலப்பகுதியில் செஸ் வரி வருமானம் ரூபா 17,220 மில்லியன் வரை நூற்றுக்கு 14.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. கோதுமை மா மற்றும் தரச்சின்னம் அல்லாத புதிய டயர் உறை மீதான செஸ் வரியை நீக்கியமை இதற்குத் தாக்கம் செலுத்தியுள்ளது.

உள்நாட்டு உற்பத்திகளுக்கு ஆதரவளிப்பதற்காக தெரிவுசெய்யப்பட்ட பொருட்களுக்கான வட்டி வீதங்கள் மாற்றப்பட்டதன் காரணமாக மீளாய்வுக் காலப்பகுதியில் விசேட வர்த்தகப் பண்டவரியின் மூலம் கிடைத்த வருமானம் ரூபா 23,961 மில்லியன் வரை நூற்றுக்கு 0.5 சதவீதத்தினால் ஓரளவு வீழ்ச்சியடைந்துள்ளது. அதேபோன்று 2017 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது 2018 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் இறக்குமதி வரிகளின் மூலம் திரட்டப்பட்ட வருமானம் ரூபா 29,340 மில்லியன் வரை நூற்றுக்கு 38.1 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தமையினைக் காணக்கூடியதாக உள்ளது. ஒரு சில பொருட்களுக்காக தீர்வை வரி விலக்குகள் வழங்கியமை மற்றும் இறக்குமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப் பத்திரம் திருத்தப்பட்டமை போன்றவை இதற்குப் பிரதான காரனமாக அமைந்துள்ளன.

செலவினம் குறித்து கவனஞ் செலுத்தும்போது 2018 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் செலவினத்தை குறைத்தமை மற்றும் செலவின மேற்பார்வை செயற்பாட்டை வலுவூட்டுவதற்காக அரசாங்கத்தினால் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 2017 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் ரூபா 823,260 மில்லியனாகக் காணப்பட்ட மொத்த அரச செலவினம் 2018 ஆம் ஆண்டின் தொடர்புடைய காலப்பகுதியில் ரூபா 873,350 மில்லியன்வரை நூற்றுக்கு 6.1 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. மீளாய்வுக் காலப்பகுதியில் மீண்டுவரும் செலவினம் ரூபா 685,966 மில்லியன்வரை நூற்றுக்கு 9.5 சதவீதத்தினால் அதிகரித்துள்ள அதேவேளையில் மூலதனச் செலவினம் ரூபா 187,384 மில்லியன் வரை நூற்றுக்கு 4.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. 2017 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் ரூபா 233,171 மில்லியனாகக் காணப்பட்ட அரசாங்க வரவுசெலவுப் பற்றாக்குறை 2018 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் ரூபா 250,638 மில்லியன்வரை அதிகரித்துள்ளது.

## 3.2 அரசாங்க வருமானம்

மொத்த அரசாங்கத்தின் வருமானமானது 2017 ஆம் ஆண்டின் இதேகாலப் பகுதியில் காணப்பட்ட ரூபா 589,440 மில்லியனுடன் ஒப்பிடும்போது 2018 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் ரூபா 622,379 மில்லியன் வரை 5.6 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. வரி வருமானமானது வருமான வரி, உள்நாட்டு நுகர்வுகள் மற்றும் இறக்குமதியை அடிப்படையாகக் கொண்ட வரிகள் ஆகியவற்றின்மூலம் உருவாக்கப்பட்ட வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பை பிரதிபலிக்கும் வகையில் 2017 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் காணப்பட்ட 554,716 மில்லியனிலிருந்து 2018 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் 570,472 மில்லியன் வரை 2.8 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

மொத்த வருமானத்தின் அதிகரிப்பானது பிரதானமாக வருமான வரியிலிருந்தும் (12.3 சதவீதம்) மது வரியிலிருந்தும் (9.7 சதவீதம்) திரட்டப்பட்ட அதிகூடிய வருமானத்தின் காரணமாக ஏற்பட்டதாகும். 2018 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் ரூபா 14,711 மில்லியன் வரை 20.3 சதவீதத்தினால் உழைக்கும்போது செலுத்தும் வரி அதிகரித்ததன் காரணமாக வரி வருமானம் அதிகரித்தது. அத்துடன் மீளாய்வுக் காலப்பகுதியில் பொருளாதார சேவைக் கட்டணம் ரூ.24,320 மில்லியன் வரை 25.0 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்துள்ளது. புகையிலை உட்பட சிகரெட் மீதான மது வரியின் மூலமான வருமானம் ரூபா 29,843 மில்லியன் வரை 25.2 சதவீதத்தினால் அதிகரித்துள்ள அதேவேளையில் மோட்டார் வாகனங்களின் மீதான மது வரி மீளாய்வுக் காலப்பகுதியில் ரூபா 73,774 மில்லியன்வரை 15.3 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

## அட்டவணை 3.3 மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மையான வரி வருமானம் : சனவரி – ஏப்ரல் 2018

ரூபா மில்.

| விடயம் | மதிப்பிடப் பட்ட | உண்மையான |
|---|---|---|
| **உள்நாட்டு இறைவரித் திணைக்களம்** | | |
| வருமானம் மற்றும் இலாபங்கள் மீதான வரி | 93.7 | 95.1 |
| பெறுமதிசேர் வரி – உள்நாட்டு | 107.2 | 102.2 |
| தேசக்கட்டுமான வரி – உள்நாட்டு | 19.4 | 18.3 |
| **உப மொத்தம்** | **220.3** | **215.6** |
| **சுங்கத் திணைக்களம்** | | |
| இறக்குமதித் தீர்வைகள் | 60.8 | 29.3 |
| பெறுமதிசேர் வரி – இறக்குமதிகள் | 64.5 | 57.0 |
| தேசக்கட்டுமான வரி – இறக்குமதிகள் | 7.6 | 6.4 |
| துறைமுக, விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீடு | 37.5 | 36.1 |
| இறக்குமதி /ஏற்றுமதி செஸ் வரி | 15.9 | 17.2 |
| விசேட நுகர்வுப் பொருள் அறவீடு மற்றும் ஏனையவை | 26.6 | 24.0 |
| உற்பத்தி வரி ஏற்பாடுகள் | 134.9 | 129.6 |
| சிகரெட் * | 30.0 | 29.8 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 30.1 | 24.2 |
| மமோட்டார் வாகனங்கள் மற்றும் ஏனையவை | 74.8 | 75.6 |
| **உப மொத்தம்** | **347.8** | **299.6** |
| **மதுவரித் திணைக்களம்** | | |
| புகையிலை/சிகரெட் | 41.7 | 41.3 |
| **உப மொத்தம்** | **41.7** | **41.3** |
| **ஏனையவ** | | |
| தொலைத்தொடர்பு அறவீடு | 13.4 | 9.7 |
| அனுமதிப்பத்திர வரி மற்றும் ஏனையவை | 13.5 | 4.2 |
| **உப மொத்தம்** | **26.9** | **13.9** |
| **மொத்த வரி வருமானம்** | **636.7** | **570.4** |

*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

* புகையிலை உட்பட

வரியல்லாத வருமானமானது இலங்கை மத்திய வங்கியிலிருந்தான இலாப மாற்றல்கள், அதிகரித்த வருமானம் மற்றும் சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு என்பனவற்றிலிருந்து பயனடைந்து 2017இன் முதல் நான்கு மாதங்களில் பதிவாகிய ரூபா 34,724 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 51,907 மில்லியனுக்கு 49.5 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. எவ்வாறாயினும் வாடகை, இலாபங்கள் மற்றும் பங்கிலாபங்கள் என்பனவற்றிலிருந்து திரட்டப்பட்ட வருமானமானது 2018 இன் முதல் நான்கு மாதங்களில் சுருக்கமடைந்துள்ளது.


அட்டவணை 3.4 அரசாங்க வருமானச் செயலாற்றுகைச் சுருக்கம் : (சனவரி – ஏப்ரல் 2018)

ரூபா மில்

| விடயம் | 2017 | 2018 தற்காலிக | வளர்ச்சி மூ |
|---|---|---|---|
| **வரி வருமானம்** | **554,716** | **570,472** | 2.8 |
| வருமான வரி | 84,721 | 95,128 | 12.3 |
| உள்நாட்டு நுகர்வின் அடிப்படை வரி | 177,330 | 193,394 | 9.1 |
| பெறுமதிசேர் வரி | 96,806 | 102,220 | 5.6 |
| மதுவரி | 63,698 | 72,885 | 14.4 |
| தேசக் கட்டுமான வரி | 16,826 | 18,289 | 8.7 |
| இறக்குமதி அடிப்படையிலான வரி | 277,925 | 268,007 | -3.6 |
| சுங்கத் தீர்வை | 47,392 | 29,340 | -38.1 |
| பெறுமதிசேர் வரி | 55,646 | 57,029 | 2.5 |
| தேசக் கட்டுமான வரி | 6,230 | 6,424 | 3.1 |
| து.வி.நி. அறவீடு | 32,353 | 36,080 | 11.5 |
| வி.நு.பொ. அறவீடு | 24,091 | 23,961 | -0.5 |
| மதுவரி | 91,999 | 97,953 | 6.5 |
| செஸ் வரி | 20,214 | 17,220 | -14.8 |
| அனுமதிப்பத்திர வரிகள் ஏனையவை | 14,740 | 13,943 | -5.4 |
| **வரியல்லா வருமானம்** | 34,724 | 51,907 | 49.5 |
| **மொத்த வருமானம்** | **589,440** | **622,379** | **5.6** |

*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

வரைபு **3.1** | அரசாங்க வருமானத்தின் வகுதி (சனவரி - ஏப்ரல்இ 2018)



### 3.2.1 வரி வருமானம்

#### வருமான வரி

நிறுவன மற்றும் நிறுவனமல்லாத வருமான வரி என்பனவற்றிலிருந்து திரட்டப்பட்ட வரி வருமானமானது 2017 இன் முதல் நான்கு மாதங்களில் பதிவாகிய ரூபா 34,681 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018 இன் மீளாய்வுக் காலப்பகுதியில் ரூபா 38,620 மில்லியனுக்கு 11.4 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. உழைக்கும்போது செலுத்தும் வரியிலிருந்தான வருமானமானது 2017 இன் மீளாய்வுக் காலப்பகுதியில் ரூபா 12,230 மில்லியனிலிருந்து 2018 இன் முதல் நான்கு மாதங்களின்போது ரூபா 14,711 மில்லியனுக்கு 20.3 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

பொருளாதாரர சேவைக் கட்டணம் மீதான வரியானது வாகன இறக்குமதிப் புள்ளியில் பொருளாதார சேவைக் கட்டணம் அறிமுகப்படுத்தப்பட்டதன் காரணமாக 2017 இன் முதல் நான்கு மாதங்களுடன் ஒப்பிடுகையில் 2018 இன் முதல் நான்கு மாதங்களில் ரூபா 24,320 மில்லியனுக்கு 25.0 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளது. எவ்வாறாயினும் வட்டி மீதான வரியிலிருந்தான வருமானமானது ஒப்பீட்டளவில் குறைந்த அரசாங்க பிணையங்களின் விநியோகம் காரணமாக ரூபா 17,477 மில்லியனுக்கு 4.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.

**அட்டவணை 3.5 வருமான வரி மூலமான வருமானம் செயலாற்றுகை : (சனவரி –ஏப்ரல்)**

ரூபா .மில்

| வரி அடிப்படை | 2017 | 2018 தற்காலிக | மாற்றம் % |
|---|---|---|---|
| நிறுவன மற்றும் நிறுவனமல்லா | 34,681 | 38,620 | 11.4 |
| உ.பொ.செ.வரி | 12,230 | 14,711 | 20.3 |
| வட்டி வருமானம் மீதான வரி | 18,359 | 17,477 | -4.8 |
| பொருளாதார சேவைகள் கட்டணம் | 19,451 | 24,320 | 25.0 |
| **மொத்தம்** | **84,721** | **95,128** | **12.3** |

*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

#### பெறுமதிசேர் வரி

மொத்த பெறுமதிசேர் வரி வருமானமானது அதிகரித்த உள்நாட்டு பொருளாதார செயற்பாடுகள் மூலம் தூண்டப்பட்டு 2017 இன் முதல் நான்கு மாதங்களில் பதிவாகிய ரூபா 152,451 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018 இன் முதல் நான்கு மாதங்களின்போது ரூபா 159,249 மில்லியனுக்கு 4.5 சதவீதத்தினால் அதிகரித்துக் காணப்பட்டது. உள்நாட்டுச் செயற்பாடுகள் மீதான பெறுமதிசேர் வரியிலிருந்தான வருமானமானது 2017 இன் முதல் நான்கு மாதங்களில் பதிவாகிய ரூபா 96,806 மில்லியனுடன் ஒப்பிடுகையில் மீயாய்வுக் காலப் பகுதியில் ரூபா 102,220 மில்லியனுக்கு 5.6 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இதேவேளை இறக்குமதி மீதான பெறுமதிசேர் வரியிலிருந்தான வருமானமானது பால்மா, சீமேந்து, உராய்வு நீக்கிகள் மற்றும் நிலக்கரி போன்ற பொருட்களிலிருந்தான அதிகரித்த பெறுமதிசேர் வருமானம் காரணமாக 2017 இன் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2018 இன் முதல் நான்கு மாதங்களின்போது ரூபா 57,029 மில்லியனுக்கு 2.5 சதவீதத்தினால் சற்று அதிகரித்துள்ளது.

**அட்டவணை 3.6| பெறுமதிசேர் வரி வருமானத்தின் செயலாற்றுகை :(2018 சனவரி –ஏப்ரல்)**

ரூபா மில்.

| வரி அடிப்படை | 2017 | 2018 தற்காலிக | வளர்ச்சி % |
|---|---|---|---|
| உள்நாட்டு | 96,845 | 102,249 | 5.6 |
| இறக்குமதிகள் | 55,805 | 57,143 | 2.4 |
| **மொத்த வருமானம்** | **152,650** | **159,392** | 4.4 |
| மீளளிப்புகள் | 199 | 143 | -28.0 |
| **தேறிய வருமானம்** | **152,451** | **159,249** | **4.5** |
| மொத்த வருமான மீளளிப்பு சதவீதம் மூ | **0.1** | **0.1** | |

*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

## உற்பத்தி தீர்வை

உற்பத்தி வரியிலிருந்து திரட்டப்பட்ட வருமானமானது மதுபானம், சிகரெட், புகையிலை, பெற்றோலிய உற்பத்திகள் தவிர்ந்த மோட்டார் வாகனங்கள் போன்ற பிரதான பொருட்களிலிருந்தான வருமான திரட்டில் ஏற்பட்ட அதிகரிப்புக் காரணமாக 2017 இன் இதே காலப்பகுதியில் பதிவாக்கிய ரூபா 155,696 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018 இன் முதல் நான்கு மாதங்களில் ரூபா 170,839 மில்லியனுக்கு 9.7 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இது வருடாந்த மதிப்பீட்டிற்கு எதிராக 31.9 சதவீத அடைவொன்றாகக் காணப்பட்டது. உற்பத்தி வரியிலிருந்தான வருமானமானது மீளாய்வுக் காலப்பகுதியில் மொத் வரி வருமானத்திற்கு 29.9 சதவீதத்திற்கு வகை கூறுகின்ற பாரிய ஒற்றைப் பங்காளியாக நிலைத்திருந்தது.

**அட்டவணை 3.7| உற்பத்தி வரி செயலாற்றுகை : (2018 சனவரி–ஏப்ரல்)**

ரூபா மில்.

| வரி அடிப்படை | 2017 | 2018 தற்காலிக | வளர்ச்சி % |
|---|---|---|---|
| மதுபானம் | 38,262 | 41,322 | 8.0 |
| சிகரட் மற்றும் புகையிலை | 23,840 | 29,843 | 25.2 |
| மோட்டார் வாகனங்கள் | 64,004 | 73,774 | 15.3 |
| பெற்றோலியம் | 27,995 | 24,179 | -13.6 |
| ஏனையவை | 1,596 | 1,720 | 7.8 |
| **மொத்தம்** | **155,696** | **170,839** | **9.7** |


*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

மதுபானத்திலிருந்து திரட்டப்பட்ட வருமானமானது 2017 இன் இதே காலப்பகுதியில் பதிவாக்கிய ரூபா 38,262 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018 இன் சனவரி – ஏப்பிரல் வரையான காலப்பகுதியில் ரூபா 41,322 மில்லியனுக்கு 8.0 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இதற்கு இலங்கையில் மதுபான நுகர்வினை கட்டுப்படுத்துவதன்பால் அரசாங்கக் கொள்கையோடு இணைந்த வகையில் 2018 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தோடு இணைந்த வகையில் வன் மதுபானங்கள் மீதான உற்பத்தி வரி விகிதங்களை அதிகரித்தமையே காரணமாக அமைந்தது. அதன் விளைவாக வன் மதுபான உற்பத்தியானது 8.9 மில்லியன் லீற்றர்களுக்கு 47.4 சதவீதத்தினால் மீளாய்வுக் காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்துள்ளது.

மோட்டார் வாகனங்கன் மீதான உற்பத்தி வரியிலிருந்தான வருமானமானது 2017 இன் முதல் நான்கு மாதங்களில் பதிவாக்கிய ரூபா 64,004 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018 இன் சனவரி – ஏப்ரல் வரையான காலப்பகுதியில் ரூபா 73,744 மில்லியனுக்கு 15.3 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. வரி திரட்டுவதற்காக அலகு வீத அடிப்படை அறிமுகப்படுத்தப்பட்டமை 1000 சிசிக்கு மேற்படாத மோட்டார் வாகனங்கள்மீது உற்பத்தி வரியினைக் குறைத்ததன் காரணமாக

2017 இல் முதல் நான்கு மாதங்களில் பதிவாகிய 13,313 மில்லியனுடன் ஒப்பிடுகையில் இது மீளாய்வுக் காலப்பகுதியில் 30,236க்கு 127.1 சதவீதத்தினால் மோட்டார் கார்களின் இறக்குமதியில் ஏற்பட்ட அதிகரிப்பு பிரதான பங்களிப்பாற்றியுள்ளது. மேலும் மோட்டார் வாகனங்கள் முச்சக்கர வண்டிகள் என்பனவற்றிற்கான தீர்வை வீதங்கள் அதிகரிக்கப்பட்டதன் காரணமாக உற்பத்தித் தீர்வை வருமானமும் அதிகரிப்பதற்கு உதவியுள்ளது. எவ்வாறாயினும் மோட்டார் சைக்கிள்களின் இறக்குமதியானது தீர்வைக் கட்டமைப்பினை மேலே நோக்கி திருத்தியமைத்ததன் காரணமாக 2017 இல் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2018 இன்முதல் நான்கு மாதங்களில் மோட்டார் சைக்கிள்களின் இறக்குமதியானது 8.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.

வரைபு 3.2|உற்பத்தித் தீர்வையின் செயலாற்றுகை (சன - ஏப்ர 2017 மற்றும் 2018)




அட்டவணை 3.8 மோட்டார் வாகன இறக்குமதிகள் மற்றும் புதிய வாகனப் பதிவுகள் (2018 சனவரி–ஏப்ரல்)

அலகு: எண்ணிக்கை

| விடயம | இறக்குமதி | | | | புதிய பதிவுகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2017 | 2018 | மாற்றம் | மாற்றம் % | 2017 | 2018 | மாற்றம் | மாற்றம் % |
| மோட்டார் கார்கள் | 3,313 | 30,236 | 16,923 | 127.1 | 12,760 | 25,363 | 12,603 | 98.8 |
| முச்சக்கர வண்டிகள் | 4,112 | 5,144 | 1,032 | 25.1 | 7,546 | 6,424 | -1,122 | -14.9 |
| மோட்டார் சைக்கிள்கள் | 123,999 | 13,346 | -10,653 | -8.6 | 113,225 | 119,612 | 6,387 | 5.6 |
| பயணிகள் வாகனங்கள் | 955 | 1,077 | 122 | 12.8 | 999 | 1,171 | 172 | 17.2 |
| பொருள் போக்குவரத்து வாகனங்கள (அ) | 9,605 | 9,056 | -549 | -5.7 | 9,507 | 9,541 | 34 | 0.4 |
| தரை வாகனங்கள் (ஆ) | 3,958 | 3,427 | -531 | -13.4 | 4,398 | 3,440 | -958 | -21.8 |
| **மொத்தம்** | **55,942** | **162,286** | **6,344** | **4.1** | **148,435** | **165,551** | **17,116** | **11.5** |

மூலம் : சுங்கத் திணைக்களம் மற்றும் மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்

(அ) லொறிகள் மற்றும் ஏனைய பொருள் போக்குவரத்து வாகனங்கள்

(ஆ) ட்ராக்டர்கள், கை ட்ராக்டர்கள் மற்றும் ஏனைய நில வாகனங்கள்

புகையிலை மற்றும் சிகரெட்டிலிருந்து திரட்டப்பட்ட வரி வருமானமானது 2017 இன் இதே காலப்பகுதியில் பதிவாக்கிய ரூபா 23,840 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018 இன் சனவரி - ஏப்ரல் வரையான காலப்பகுதியில் ரூபா 29,843 மில்லியனுக்கு 25.2 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இது 2018 ஆம் ஆண்டுக்கான வருடாந்த மதிப்பீட்டினை விடவும் 33.1 சதவீத அதிகரிப்பாகும். இதற்கு மீளாய்வுக் காலப்பகுதியில் சிகரெட் கூறுகள் 1,101 மில்லியனுக்கு அதிகரித்தமையே பிரதான காரணியாகும்.

எவ்வாறாயினும், பெற்றோலிய உற்பத்திகளிலிருந்து திரட்டப்பட்ட வருமானமானது டீசல்.'.எரிவாயு எண்ணெய் என்பன மீளாய்வுக் காலப்பகுதியில் 13.1 சதவீத வீழ்ச்சியொன்றினை பிரதிபலித்து 2017 இன் இதே காலப்பகுதியில் ரூபா 27,995 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018 இன் முதல் நான்கு மாதங்களில் ரூபா 24,179 மில்லியனுக்கு 13.6 சதவீதத்தினால் வீழ்ச்சி கண்டுள்ளது.

## இறக்குமதித் தீர்வை

இறக்குமதித் தீர்வையிலிருந்து திரட்டப்பட்ட வரி வருமானமானது 2017 இன் இதே காலப்பகுதியில் பதிவாக்கிய ரூபா 47,392 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018 இன் முதல் நான்கு மாதங்களில் 29,340 மில்லியனுக்கு 38.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. இது மொத்த வரி வருமானத்தின் 5.1 சதவீதமாகும். இதற்கு இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமத் தேவைப்பாடுகள், பெற்றோல், டீசல், கோதுமை மற்றும் பால் மா என்பனவறளுக்கான இறக்குமதி தீர்வை வரி விலக்கு அளிக்கப்பட்டமை மற்றும் அனுமதிக்கப்பட்ட வேலைத் திட்டங்களின்கீழ் நிபந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களை அகற்றுவதற்கான சுங்கப் பெறுமதியைத் தீர்மானிக்கும் புதிய பரிந்துரை செய்யப்பட்ட முறைமை இதற்கு பிரதான காரணமாக அமைந்தது. மேலும், பசளை, மருந்து உற்பத்தி உபகரணமும் இயந்திர சாதனமும் மற்றும் அடையாளம் காணப்பட்ட விசேட கருத்திட்டங்களுக்கான இறக்குமதித் தீர்வை விலக்களிக்கப்பட்டுள்ள பொருட்களை இறக்குமதி செய்வதற்கும் இறக்குமதித் தீர்வை வருமானத்தின் செயலாற்றுகைக்கும் பாதகமான தாக்கத்தைச் செலுத்தியுள்ளது. மேலும் இருதரப்பு மற்றும் பிராந்திய வர்த்தக ஒத்துழைப்பை வலுப்படுத்துவதகை நோக்காகக் கொண்டு செய்துகொள்ளப்பட்ட சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் வரி விலக்கு அல்லது சாதாரண வரி வீதத்தின் கீழ் பல உற்பத்திகளின் இறக்குமதி நடவடிக்கைகள் தொடரந்தும் மேற்கொள்ளப்பட்டது.

## விசேட வியாபாரப் பண்ட அறவீடு

விசேட வியாபாரப் பண்ட அறவீட்டிலிருந்தான மொத்த வருமானமானது 2017 இன் மீளாய்வுக் காலத்தில் பதிவாகிய ரூபா 24,091 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018 இன் முதல் நான்கு மாதங்களின்போது ரூபா 23,961 மில்லியனுக்கு 0.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. இந்த அண்ணளவான செயலாற்றுகையானது அரிசி வகைகள், சோளம், நெத்தலி, கருவாடு, உருளைக் கிழங்கு, பெரிய வெங்காயம், உளுந்து மற்றும் குரக்கன், கடலை, நிலக்கடலை, மாசி கருவாடு, தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் மற்றும் பருப்பு என்பனவற்றுக்கு வழங்கப்பட்ட தீர்வை நீடிப்பு காரணமாக விசேட வியாபாரப்பண்ட அறவீட்டு வீதங்களின் கீழே நோக்கிய திருத்தங்கள் காரணமாக இச்செயலாற்றுகைக்கு பங்களித்துள்ளது.

## தேசக் கட்டுமான வரி

தேசக்கட்டுமான வரியிலிருந்து திரட்டப்பட்ட வருமானமானது 2017 இன் முதல் நான்கு மாதங்களில் பதிவாகிய ரூபா 23,056 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018 இன் முதல் நான்கு மாதங்களில் ரூபா 24,713 மில்லியனுக்கு 7.2 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. உள்நாட்டுச் செயற்பாடுகள் மீதான தேசக் கட்டுமான வரியிலிருந்து திரட்டப்பட்ட வருமானமானது ரூபா 18,259 மில்லியனுக்கு 8.7 சதவீதத்தினால் அதிகரித்துக் காணப்பட்ட வேளையில் இறக்குமதிகள் மீதான தேசக் கட்டுமான வரியிலிருந்தான வருமானமானது 2018 இன் முதல் நான்கு மாதங்களில் ரூபா 6,424 மில்லியனுக்கு 3.1 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. கட்டுமான ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டிருந்த விலக்களிப்புகளை நீக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட கொள்கை ரீதியான நடவடிக்கைகள் மற்றும் அடுக்குமாடிக் கட்டிடங்களை விற்பனை செய்வதற்கும், கட்டுமான ஒப்பந்தக்காரர்களுக்கு

வழங்கப்பட்டிருந்த விலக்களிப்புக்களை நீக்குவதற்கும் மேற்கொள்ளப்பட்ட கொள்கைசார் நடவடிக்கைகள் காரணமாக தேசக்கட்டுமான வரியிலிருந்தான வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு இதற்கு பங்களிப்புச் செய்துள்ளது.

2018 இன் முதல் நான்கு மாதங்களின்போது வருமானப் பகிர்வு முறைமையின் கீழ் மாகாண சபைகளுக்கு ரூபா 12,357 மில்லியன் மாற்றல் செய்யப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.9 மாகாண சபைகளுக்கு மாற்றப்பட்ட வருமானங்கள் (2018 சனவரி–ஏப்ரல்)**

ரூபா மில்

| மாதம் | தே.க.வ. | | மோட்டார் வாகனப் பதிவுக் கட்டணங்கள் | முத்திரைத் தீர்வை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | உள்நாட்டு இறைவரி திணைக்களம் | சுங்கத் திணைக்களம் | | | |
| சனவரி | 2,626 | 843 | 184 | 1,596 | 5,249 |
| பெப்ரவரி | 1,845 | 825 | 200 | 176 | 3,046 |
| மார்ச்சு | 2,009 | 798 | 206 | 207 | 3,220 |
| ஏப்பிரல் | 2,665 | 746 | 192 | 1,756 | 5,359 |
| **மொத்தம்** | **9,145** | **3,212** | **782** | **3,735** | **16,874** |

*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

### ஏனைய வரிகள்

துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டிலிருந்து திரட்டப்பட்ட வருமானமானது 2017 இன் முதல் நான்கு மாதங்களில் பதிவாக்கிய ரூபா 32,353 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018 இன் மீளாய்வுக் காலப் பகுதியில் ரூபா 36,080 மில்லியனுக்கு 11.5 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இது, 2018 இன் முதல் நான்கு மாதங்களில் மொத்த வரி வருமானத்தின் ஏறக்குறைய 5.8 சதவீதமாக காணப்பட்டது. ஏற்றுமதி மற்றும் இறக்குமதிகள் மீதான செஸ் வரியிலிருந்து திரட்டப்பட்ட மொத்த வருமானமானது 2017 இன் இதே காலப் பகுதியோடு ஒப்பிடுகையில் ரூபா 17,220 மில்லியனுக்கு 14.8 சதவீத வீழ்ச்சியொன்றினைப் பதிவாக்கியது. இறைச்சி வகைகள், பண்ணைப் பொருட்கள், பேரீச்சம்பழம், திராட்சை, பெயார்ஸ். பியர் மற்றும் வைன் போன்ற அடையாளம் காணப்பட்ட 253 பொருட்கள் மீது ஏற்புடையதான செஸ் வரி வீதங்கள் நீக்கப்பட்டமையே இச்செயலாற்றுகைக்கு பிரதான காரணமாக அமைந்தன. இதேவேளை தொலைத் தொடர்பு அறவீட்டிலிருந்து திரட்டப்பட்ட வருமானமும் 2018 இன் முதல் நான்கு மாதங்களின்போது ரூபா 9,705 மில்லியனுக்கு 16.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. இதேவேளை 2017 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இது ரூபா 11,616 மில்லியனைப் பதிவாக்கியிருந்தது.

### 3.2.2 வரியல்லாத வருமானம்

2018 இன் முதல் நான்கு மாதங்களின்போது மொத்த வருமானத்தின் 8.3 சதவீதத்திற்கு வகை கூறிய மொத்த வரியல்லாத வருமானமானது 2017 இன் முதல் நான்கு மாதங்களில் பதிவாக்கிய ரூபா 34,724 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 51,907 மில்லியனுக்கு 49.5 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இதற்கு மீளாய்வுக் காலத்தின்போது ரூபா 14,227 மில்லியன் மத்திய வங்கியின் இலாப மாற்றல் காரணமாக இவ்வதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. மேலும் விற்பனைகள் மற்றும் அறவீடுகள் என்பன ரூபா 23,268 மில்லியனுக்கு 20.7 சத வீதத்தினாலும் வட்டி வருமானம் ரூபா 1,813 மில்லியனுக்கு 5.9 சத வீதத்தினாலும் சமூகப் பாதுகாப்பு பங்களிப்புக்கள் ரூபா 7,679 மில்லியனுக்கு 2.4 சதவீதத்தினாலும் மற்றும் ஏனைய வருமானங்கள் ரூபா 1,054 மில்லியனுக்கு 80.9 சதவீதத்தினாலும் சாதகமாக இச் செயலாற்றுகைகள் வரியல்லாத வருமானம் அதிகரிப்பதற்குப் பங்களிப்புச் செய்துள்ளன. எவ்வாறாயினும், இலாபம் மற்றும் பங்கிலாபங்களிலிருந்தான வரியல்லா வருமானமானது முன்னைய வருடத்தின் முதல் நான்கு மாதங்களுடன் ஒப்பிடுகையில் 2018 இன் முதல் நான்கு மாதங்களின்போது ரூபா 2,814 மில்லியனுக்கு 35.6 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்துள்ளது. இந்த வருமான வேறுபாடானது அரசுடைமை தொழில்முயற்சிகளின் பலவீனமான நிதிச் செயலாற்றுகையின் காரணமாக அமைந்துள்ளது.

அட்டவணை 3.10 அரசாங்க வருமானத்தின் மாற்றல் பகுப்பாய்வு (சனவரி - ஏப்ரல்)

ரூபா மில்

| விடயம் | 2017 | 2018 மதிப். | 2018 | காரணம் |
|---|---|---|---|---|
| வருமான வரி | 84,721 | 93,700 | 95,128 | 2018 ஏப்பிரல் 01 முதல் பயன்பெறும் வபையில் புதிய உள்நாட்டு இறைவரிச் சட்டம் அமுல்படுத்தப்பட்டமை மற்றும் உள்நாட:டு இறைவரித் திணைக்களத்தில் RAMIS கருத்திட்டத்தின் மூலம் வரி நிருவாக செயன்முறையானது வலுப்படுத்தப்பட்டமை என்பன வருமான வரியிலிருந்து திரட்டப்பட்ட வருமானத்தினை அதிகரிப்பதற்கு உதவின. குறிப்பாக பொருளாதார சேவைக் கட்டண வருமானமானது பொருளாதார சேவைக் கட்டணத்தினைக் குறைத்தமை மோட்டார் வாகனங்களின் இறக்குமதியின்போது பொருளாதார சேவைக் கட்டணம் அமுல்படுத்தப்பட்டமை என்பன பொருளாதார சேவைக் கட்டண வருமானம் அதிகரிப்பதற்கு குறிப்பிடத்தக்களவு பங்களிப்புச் செய்தன. தனியாள் வரிவிதிக்கத் தக்க வருமானத்தினை கணிப்பீடு செய்வதற்கான ஏற்புடையதான அடுக்குகள் விரிவுபடுத்தப்பட்டமை மற்றும் ஊழிய வருமானத்திற்காக 24 சதவீதம் வரை தற்போதைய வரி வீதம் விரிவுபடுத்தப்பட்டமை என்பன உழைக்கும்போத செலுத்தும் வரி வருமானம் அதிகரிப்பதற்கு காரணமாக அமைந்தது. எவ்வாறாயினும் அரசாங்க பிணையங்கள்மீதான வட்டிமீது வழங்கப்பட்ட வரி விலக்களிப்புக்கள் நீக்கப்பட்டமை பிடி வரி வருமானத்தில் எதிர்மறையான தாக்கத்தினை ஏற்படுத்தியது. |
| பெறுமதி சேர் வரி | 152,452 | 171,700 | 159,249 | உள்நாட்டுச் செயற்பாடுகளில் ஏற்பட்ட விரிவாக்கம் மற்றும் இறக்குமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பன பெறுமதிசேர் வரி வருமானத்தினை அதிகரிப்பதற்கு பங்களிப்புச் செய்துள்ளன. நிலக்கரி, பால்மா, சீமேந்து மற்றும் உராய்வு நீக்கிகள் போன்ற இறக்குமதிப் பொருட்களில் ஏற்பட்ட அதிகரிப்பானது இறக்குமதி பெறுமதிசேர் வரி வருமானம் அதிகரிப்பதற்கும் ஒத்துழைத்தன. மேலும் சுயுஆஐஎ கருத்திட்டத்தினை அமுல்படுத்துவதன்மூலம் கொடுப்பனவுகள் மற்றும் பெறுகைகள் என்பன கண்காணிக்கப்பட்டமை, வரி கணக்காய்வுகள் அதிகரிக்கப்பட்டமை மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் வரி நிருவாகச் செயற்பாடுகள் பலப்படுத்தப்பட்டமை என்பன இவ்வதிகரிப்புக்கு சாதகமாக பங்களிப்புச் செய்தன. |
| உற்பத்தி வரி | 155,696 | 176,600 | 170,839 | சிகரெட், புகையிலை, மோட்டார் வாகனங்கள் மற்றும் மதுபானம் என்பனவற்றிலிருந்தான வரி திரட்டில் ஏற்பட்ட அதிகரித்த செயலாற்றுகை மூலம் உற்பத்தி வரியிலிருந்து திரட்டப்பட்ட வருமானமானது அதிகரித்துக் காணப்பட்டது. 1000 சிசிக்கு குறைவான மோட்டார் கார்கள் இறக்குமதியானது 127.1 சதவீதத்தினால் அதிகரித்ததன் காரணமாக மோட்டார் வாகனங்களிலிருந்தான உற்பத்தி வரி வருமானமானது அதிகரித்துக் காணப்பட்டது மீளாய்வுக் காலத்தில் சிகரெட்டிலிருந்தான உற்பத்தி வரி வருமானமானது சிகரெட்டுக்களின் உற்பத்தியானது 1,101 மில்லியன் கூறுகளுக்கு அதிகரித்ததன் காரணமாக அதிகரித்துள்ளது. எவ்வாறாயினும் பெற்றோலியத்திலிருந்தான வருமானமானது மீளாய்வுக் காலத்தில் டீசல் இறக்குமதியில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாகக் குறைவடைந்துள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| இறக்குமதி தீர்வை | 47,392 | 60,800 | 29,340 | பெற்றோல், டீசல், கோதுமை மற்றும் பால்மா போன்ற பிரதான இறக்குமதிப் பொருட்கள்மீது வரி பிற்போடல் வழங்கப்பட்டமையின் மோசமான தாக்கத்தின் காரணமாகவும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் வழங்கப்பட்ட பொருட்களின் இறக்குமதி என்பனவும் இந்த வீழ்ச்சிக்குப் பங்களிப்புச் செய்துள்ளன. |
| துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு | 32,353 | 37,500 | 36,080 | துறைமுகங்கள் மற்றம் விமான நிலைய வருமானத்தை அதிகரிப்பதற்காக பெற்றோலியம், பசளை, தங்கம் போன்ற இடைநிலைப் பொருட்களின் இறக்குமதி அதிகரிப்பதற்கு காரணமாக அமைந்தது. எவ்வாறாயினும் அதியுயர் தொழில்நுட்ப இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்கள்மீது நூற்றுக்கு 2.5 சதவீத சலுகை வரி வீதமொன்றை வழங்கியமை உண்மை வருமானம் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்திலிருந்து வேறுபடுவதற்கு தாக்கம் செலுத்தியுள்ளது. |
| தேசக் கட்டுமான வரி | 23,056 | 27,000 | 24,712 | தேசக்கட்டுமான வரி வருமானத்தினை அதிகரிப்பதற்கு நிர்மானச் சேவையினை வழங்குகின்ற ஒப்பந்தக்காரர்கள், வீட்டுத் தொகுதிகளின் விற்பனை மற்றும் வெளி நாட்டு நாணயங்களில் பெற்றுக் கொள்ளப்படுகின்ற சுற்றுலா முகவர் சேவைகள் போன்றவற்றின்மீது விதிக்கப்பட்டிருந்த தேசக்கட்டுமான வரி சலுகைகளை நீக்கியமை போன்ற கொள்கை ரீதியான நடவடிக்கைகள் காரணமாக அமைந்துள்ளன. |
| ஏனைய வரிகள் | 59,045 | 69,400 | 55,124 | இறக்குதியின்மீது அறவிடப்படுகின்ற செஸ் வரி வருமானம் நூற்றுக்கு 15.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ள அதேவேளையில் கோதுமை மா மீது அறவிடப்பட்ட செஸ்வரி குறைக்கப்பட்டமை மற்றும் அடையாளங் காணப்பட்ட 253 பொருட்கள்மீது அறவிடப்பட்ட செஸ் வரியை நீக்கியமை இதற்குக் காரணமாக அமைந்துள்ளன. எவ்வாறாயினும் ஏற்றுமதியின்மீது அறவிடப்படுகின்ற செஸ்வரி வருமானம் நூற்றுக்கு 1.7 சதவீதத்தினால் அதிகரித்துள்ள அதேவேளையில் தேயிலை, இறப்பர் மற்றும் கனிப்பொருள் உற்பத்திகள் போன்ற துறைகளில் உலகளாவிய கேள்வி அதிகரித்தமை இதற்குக் காரணமாக அமைந்துள்ளன. வலையமைப்பு சேவைகளுக்காக விதிக்கப்பட்டிருந்த தொலைத்தொடர்பு அறவீட்டு வரி நீக்கப்பட்டதன் காரணமாக தொலைத்தொடர்பு வரி வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளது. அதேபோன்று மீளாய்வுக் காலப்பகுதியில் சர்வதேச மற்றும் தேசிய ரீதியில் தொலைபேசி மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட அழைப்புக் காலம் முன்னைய வருடத்துடன் ஒப்பிடும்போது குறைவடைந்தமை தொலைத்தொடர்பு வரி வருமானம் வீழ்ச்சியடைவதற்குத் தாக்கம் செலுத்தியுள்ளது. |
| வரியல்லா வருமானம் | 34,724 | 53,500 | 51,907 | முன்னைய வருடத்திற்குரிய இலங்கை மத்திய வங்கியிடமிருந்தான இலாபத்தின் மாற்றல்கள் வரியல்லாத வருமானம் அதிகரிப்பதற்குப் பிரதான காரணமாக அமைந்துள்ளன. அரசாங்கத்துறையிலுள்ள ஊழியர்களின் அடிப்படைச் சம்பளம் அதிகரித்ததன் காரணமாக சமூகப் பாதுகாப்பு பங்களிப்புத் தொகை அதிகரித்தமை விற்பனை மற்றும் அறவீடுகளின் மூலம் பெறப்பட்ட வருமானம் அதிகரித்தமை மற்றும் ஐக்கிய நாடுகளின் சமாதான செயற்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானம் திரண்ட நிதியத்திற்கு வரவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமை ஆகியனவும் வரியல்லாத |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | வருமானம் அதிகரிப்பதற்கு சாதகமான தாக்கத்தைச் செலுத்தியுள்ளது. எவ்வாறாயினும் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் மூலம் எதிர்பார்க்கப்பட்டவாறு இலாபம் மற்றும் இலாபப் பங்குகளைச் செலுத்துவது குறைவடைந்தமை மற்றும் வாடகை வருமானம் வீழ்ச்சியடைந்தமை உண்மையான வருமானம் எதிர்பார்க்கப்பட்ட வருமானத்திலிருந்து வேறுபடுவதற்குத் தாக்கம் செலுத்தியுள்ளது. |
| மொத்தம் | **589,438** | **690,200** | **622,378** | |

## கட்டம் 3.1|பிரதான அரசிறை முன்னெடுப்புகள் : 2018 சனவரி - 2018 ஜுன்

| பயன்வலுப் பெறும் திகதி | நடவடிக்கை |
|---|---|
| | **உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) தீர்வை** |
| 16.02.2018 | 1989 ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (2018.02.15 ஆம் திகதிய 2058/33 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- 22/99 ஆம் இலக்க அரச முகாமைத்துவ சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு I,ii மற்றும் iii வகுதிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ள நன்மை பெறும் நபர்களுக்கான உற்பத்தி வரியும் அதிகபட்ச வரிவிலக்கு எல்லையை ரூபா 22.0 மில்லியன், ரூபா. 16.00 மில்லியன் மற்றும் ரூபா 12.00 மில்லியன் என அதிகரித்தல். |
| 16.02.2018 | 1989 ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (2018.02.15 ஆம் திகதிய 2058/34 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- 1/2018 ஆம் இலக்க வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கையின் கீழ் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு நன்மை பெறுநர்களுக்கான அதிகபட்ச உற்பத்தி வரி எல்லையை ரூபா 5.0 மில்லியன் வரை அதிகரித்தல். |
| 12.04.2018 | 1989 ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (2018.04.12 ஆம் திகதிய 2066/40 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- 01/2017 ஆம் இலக்க வாகன இறக்குமதிக்கான உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை சுற்றறிக்கையின் (2017.04.21 ஆம் திகதிய) கீழ் வாகன இறக்குமதிக்கு தகமை பெறுகின்ற 2017 நவம்பர் 09 ஆந் திகதிக்கு முன்னர் கடன் கடிதம் திறக்கப்பட்டவர்களுக்கான வரிச்சலுகை வழங்குதல். |
| 24.04.2018 | 1989 ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (2018.04.24 ஆம் திகதிய 2068/9 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் திரு.ஹமில்டன் வீரசிங்க அவர்கட்கு வாகன இறக்குமதக்கான அனுமதிப் பத்திரமொன்றை வழங்குதல். |
| 15.05.2018 | 1989 ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (2018.05.15 ஆம் திகதிய 2071/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- வெளிநாட்டு தூதரகங்கள் மற்றும் தூதரக அமைப்புக்களினால் 100 சதவீத வரி விலக்கின்கீழ் இறக்குமதி செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ள மோட்டார் வாகனங்களை விற்பனை செய்தல் மற்றும் ஆற்றலுக்காக வருடாந்தம் குறைவடையும் வீரம் ஒன்று அறிமுகப்படுத்துதல். |
| 01.06.2018 | 1989 ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (2018.05.31 ஆம் திகதிய 2073/41 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- மண்ணெண்ணெயின் மீது லீற்.ஒன்றுக்கு ரூபா 7/- தீர்வை வரியை விதித்தல் |
| 31.05.2018 | 1989 ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (2018.06.08 ஆம் திகதிய 2074/39 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- திருத்தப்பட்டவாறான 01/2018 ஆம் இலக்க வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கையின் கீழ் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு உரிமை பெறுநர்களுக்கான அதிகபட்ச உற்பத்தி வரி எல்லையை ரூபா 5.0 மில்லியனிலிருந்து ரூபா 3.6 மில்லியன் வரை குறைக்கப்பட்டது. |
| 09.06.2018 | 1989 ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (2018.06.14 ஆம் திகதிய 2075/51 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- மண்ணெண்ணெய் மீதான உற்பத்தி வரி அறவீட்டை நீக்குதல். |

| பயன்வலுப் பெறும் திகதி | நடவடிக்கை |
|---|---|
| | **மதுவரி (கட்டளைச்) சட்டம்** |
| 11.01.2018 | 01/2018 ஆம் இலக்க மதுவரி அறவித்தல் (2018.01.10 ஆந் திகதிய 2053/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்.)<br>- மதுபான அனுமதிப் பத்திரம் பெற்ற நிறுவனங்களின் வியாபார நடவடிக்கைகளுக்காக திறக்கப்படுகின்ற மற்றும் மூடப்படுகின்ற நேரங்களை திருத்துதல். |
| 10.01.2018 | 02/2018 ஆம் இலக்க மதுவரி அறவித்தல் (2018.01.10 ஆந் திகதிய 2053/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்.)<br>– 666 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளைத் திருத்துதல். |
| 18.01.2018 | 03/2018 ஆம் இலக்க மதுவரி அறவித்தல் (2018.01.10 ஆந் திகதிய 2054/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்.)<br>– 2018.01.16 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தை அடிப்படையாயக் கொண்டு “மதுபான அனுமதிப் பத்திரம் பெற்ற நிறுவனங்களின் வியாபார நடவடிக்கைகளுக்காக திறக்கப்படுகின்ற மற்றும் மூடப்படுகின்ற நேரங்கள் தொடர்பான 01.∵2018 ஆம் இலக்க மதுவரி அறவித்தலை” திருத்துதல். |
| 18.01.2018 | 04/2018 ஆம் இலக்க மதுவரி அறவித்தல் (2018.01.18 ஆந் திகதிய 2054/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்.)<br>– 2018.01.16 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தை அடிப்படையாயக் கொண்டு “666 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளைத் திருத்துதல்”. தொடர்பான 02/2018 ஆம் இலக்க மதுவரி அறவித்தலைத் திருத்துதல். |
| 22.01.2018 | 05/2018 மற்றும் 06/2018 ஆம் இலக்க மதுவரி அறவித்தல்கள் (2018.01.23 ஆந் திகதிய 2055/09 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்.)<br>- 1001 மற்றும் 1002 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள “கூழ்” என்ற பதத்தை நீக்குதல். |
| 21.02.2018 | 07/2018 ஆம் இலக்க மதுவரி அறவித்தல் (2018.02.21 ஆந் திகதிய 2059/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்.)<br>- குடிபானம் அல்லாத ஸ்பிறிற்றினை இறக்குமதி செய்யும்போது மொத்த கிலொ கிராம் ஒன்றுக்காக அறவிடப்பட்ட மதுவரியை ரூபா 9.00 இனால் குறைத்தல். |
| 16.04.2018 | 08/2018 ஆம் இலக்க மதுவரி அறவித்தல் (2018.04.09 ஆந் திகதிய 2066/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்.)<br>- மதுவரி கட்டளைச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு அமைவாக கள் இறக்குதல் மற்றும் கள் தறித்தல் ஆகியவற்றுக்கான அனுமதிப்பத்திரக் கட்டணம் ஒன்றை அறிமுகப்படுத்துதல். |
| 01.04.2018 | 09/2018 ஆம் இலக்க மதுவரி அறவித்தல் (2018.06.04 ஆந் திகதிய 2065/57 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்.)<br>- கள்ளினை போத்தலில் அடைப்பதற்கான அனுமதிப்பத்திர கட்டணத்தை ரூபா 500,000 இனால் குறைத்தல். |
| 13.06.2018 | 10/2018 ஆம் இலக்க மதுவரி அறவித்தல் (2018.06.13 ஆந் திகதிய 2075/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்.)<br>- 07/2018 ஆம் இலக்க மதுவரி அறவித்தலைத் திருத்துதல். |
| 13.06.2018 | 11/2018 ஆம் இலக்க மதுவரி அறவித்தல் (2018.06.13 ஆந் திகதிய 2075/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்.)<br>- கள்ளு விற்பனை செய்யும் விடுதிகளை திறக்கக் கூடிய மற்றும் மூடக்கூடிய நேரங்களை திருத்துதல். |
| | **துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீடு** |
| 05.04.2018 | 2011 ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீடுச் சட்டம் (2018.04.06 ஆம் திகதிய 2065/42 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- அடையாளங்காணப்பட்ட உயர் தொழில்நுட்ப இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்களின் இறக்குமதிக்காக 2.5 சதவீத சலுகைரீதியான துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீட்டை வழங்குதல். |
| | **வருமான வரி** |
| | **நிறுவன வருமான வரி** |

| பயன்வலுப் பெறும் திகதி | நடவடிக்கை |
| --- | --- |
| 01.04.2018 | மூன்றடுக்கு வருமான வரி வீதக் கட்டமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டது.:<br>- ***நிலையான வீதம் 28%-*** நிதிச் சேவைகள், காப்புறுதி, வர்த்தகம், உற்பத்தி மற்றும் சலுகை.: உயர் வட்டி வகுதியின் கீழ் வராத ஏனையவை.<br>- ***சலுகை வீதம் 14%-*** சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில் முயற்சிகள், ஏற்றுமதியாளர்கள், விவசாய, கல்விச் சேவைகள், சுற்றுலாத்துறை மேம்பாடு, தகவல் தொழில்நுட்ப சேவைகள், அறக்கட்டளை நிறுவனங்கள், ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் ஓய்வூதிய நிதியம்.<br>- ***உயர் வீதம் 40%-*** பந்தயம் மற்றும் சூதாட்டம், புகையிலை, மதுபானம். |
| | **தனியாள் வருமான வரி** |
| 01.04.2018 | **வரி அறவிடக்கூடிய வருமானம் (ரூபா) — வரி விதம்**<br>முதல் 600,000 — 4%<br>600,000-1,200,000 — 8%<br>1,200,000-1,800,000 — 12%<br>1,800,000-2,400,000 — 16%<br>2,400,000-3,000,000 — 20%<br>3,000,000 இற்கு மேல் — 24% |
| | **ஊழிய வருமானம்** |
| 01.04.2018 | ஊழியத்தின் வருமானத்தின்மீது 24% வரை தொடராக அதிகரிக்கின்ற பெறுமதியின் அடிப்படையில் வரி அறவிடப்படுகின்ற அதேவேளையில் தனியாளுக்கு அறவிடக்கூடிய வருமான வரி மட்டம் விரைவுபடுத்தப்பட்டது.<br>தகைமை பெறும் கொடுப்பனவு நிவாரணம் ரூபா 250,000/- முதல் 700,000/- வரை அதிகரிக்கப்பட்டது.<br>ஓய்வூதிய நன்மைகள் மீதான வரி வரியிடலில் எத்தகைய மாற்றமும் ஏற்படுத்தப்படவில்லை.<br>இரண்டாந்தர வருமானம்<br>முதலில் ரூபா 50,000/- மாதாந்தம் : 10%<br>மீதி : 20% |
| | **நிறுத்தி வைத்தல் வரி** |
| 01.04.2018 | **வகுதி — வீதம்**<br>வங்கி வைப்புக்களின் மூலமான வட்டி வருமானம்<br>சிரேட்ட பிரசைகள் 5% (வருடாந்தம் ரூபா 1.5 மில்லியனை தாண்டும் போது)<br>ஏனையவர்கள் — 5%<br>நிருவனக் கடன் பாதுகாப்புமீதான வட்டி — 5%<br>அரசாங்க பிணையங்கள்மீதான வட்டி — இல்லை<br>வாடகை — 10%<br>விசேட கட்டணம் – ரூபா. 50,000/- இனை தாண்டும்போது — 5%<br>ஒவ்வொரு பங்காளரின் பங்கிற்கு — 8%<br>தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகார சபையின் இரத்தினக்கல் ஏலவிற்பனை. — 2.5%<br>ஏனைய அனைத்தும் (பங்கிலாபங்கள்,உரிமத்தொகை) — 14% |
| | **மூலதனக் கொடுப்பனவுக் கட்டமைப்பு** |
| 01.04.2018 | **விபரம் — புதிய வீதம்**<br>கணனிகள் மற்றும் தரவு கையாடல் உபகரணம் — 20%<br>வாகனங்கள் — 20%<br>பொறித்தொகுதி மற்றும் இயந்திரங்கள் — 20%<br>கட்டிடங்கள் — 5%<br>நற்பெயர் உள்ளடங்கலாக ஆதனங்கள் உண்மையான பயன்பாட்டுக்காலம் அல்லது 5% |
| | **மூலதன பெறுகை வரி** |
| 01.04.2018 | காணி மற்றும் கட்டிடங்கள் மீதான வரி மற்றும் குறிப்பிப்பட்ட பங்குகள் நீங்கலாக ஏனைய முதலீடுகள் 10% |
| | **முதலீட்டு ஊக்குவிப்புத் திட்டம்** |
| 01.04.2018 | அதிகரித்த தேய்வுப் பெறுமானம் கொடுப்பனவுடன் புதிய முதலீட்டு ஊக்குவிப்புத் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளதுடன் குறித்த மதிப்பீட்டு ஆண்டின்போது முதலீட்டுத்தொகை மற்றும் புவியியல் அமைவிடத்தினை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு வருமானத்தின்போது தேய்வுப் பெறுமான அடிப்படையில் கணக்கிடப்பட்டது. |
| | **அரசிறைப் பாதுகாப்புச் சட்டம்** |
| 17.03.2018 | 1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இறைவரிப் பாதுகாப்புச் சட்டம் (2018.03.16 ஆம் திகதிய 2062/45 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- தெரிவு செய்யப்பட்ட பண்டங்களின் இறக்குமதித் தீர்வையை திருத்துதல் (54 இ.மு |

| பயன்வலுப் பெறும் திகதி | நடவடிக்கை |
|---|---|
| | குறியீடுகளுக்காக)<br>- அலங்கார மீன் கைத்தொழிலுக்காக பயன்படுத்தப்படுகின்ற பனல் மற்றும் மீன் உணவுகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற சிறிய மீன்கள் மற்றும் உயிரினங்களின்மூலம் அழிவுக்குள்ளாகின்ற மற்றும் உரமாக நீக்கக்கூடிய பிளாஸ்றிக் பொருட்களுக்காக புதிய இயைபுமுறைக் குறியீடுகளை உருவாக்குதல்.<br>- கறவை மாடுகளுககு உணவாகப் பயன்படுத்துகின்ற புற்களுக்கான 15 சதவீத வரியை நீக்குதல்.<br>- இறக்குமதி செய்யப்படுகின்ற லொத்தர் டிக்கற் மற்றும் தொலைபேசி அட்டைகளுக்காக 30 சதவீதத்துக்குப் பதிலாக அல்லது கி.கி.ஒன்றுக்கு ரூ.350/= ஆகிய இறக்குமதிமீது விதிக்கப்பட்டிருந்த வரியை திருத்துதல். |
| 18.04.2018 | 1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இறைவரிப் பாதுகாப்புச் சட்டம் (2018.04.17 ஆம் திகதிய 2067/2 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- தங்கத்தை இறக்குமதி செய்யும்போது அறவிடப்படுகின்ற வரிவீதத்தை 15% வரை அதிகரித்தல். |
| 01.05.2018 | 1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இறைவரிப் பாதுகாப்புச் சட்டம் (2018.05.01 ஆம் திகதிய 2069/2 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- சிங்கப்பூர் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின்கீழ் 3,539 இயைபுமுறைக் குறியீடுகளின் இறக்குமதித் தீர்வையை நீக்குதல். |
| 03.05.2018 | 1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இறைவரிப் பாதுகாப்புச் சட்டம் (2018.05.02 ஆம் திகதிய 2069/19 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- பீடி இலை மற்றும் பீடி புகையிலை மீது நிறையின் அடிப்படையில் 2018 மே 03 ஆந் திகதி முதல் செயல் வலுப்பெறும் விதமாக சுங்கவரித் தீர்வை அறவிட தீர்மானிக்கப்பட்டது. |
| 16.05.2018 | 1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இறைவரிப் பாதுகாப்புச் சட்டம் (2018.05.15 ஆம் திகதிய 2071/15 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- உள்நாட்டுச் சந்தைக்காக எரிபொருள் விலைக்கான சூத்திரம் ஒன்றை அறிமுகப்படுத்துதல். |
| | **விசேட வியாபாரப் பண்ட அறவீடு** |
| 19.01.2018 | 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம் (2018.01.18 ஆம் திகதிய 2054/40 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- இனிமையான மற்றும் மாவாக்கப்பட்ட பாற்கட்டிகள்மீது சலுகை ரீதியான அறவீட்டு வீதமொன்றை அறிமுகப்படுத்துதல்.<br>- இனிமையான மற்றும் மாவாக்கப்பட்ட பாற்கட்டிகள் உட்பட மாசி மற்றும் கௌபி ஆகிய 7 பண்டங்கள்மீது தற்போதுல்ல விசேட வர்த்தக பண்ட அறவீட்டு வரியின் செல்லுபடியாகும் காலத்தை அடுத்த ஆறு மாதங்களுக்காக நீடித்தல். |
| 01.02.2018 | 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம் (2018.01.31 ஆம் திகதிய 2056/33 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- சோளம் இறக்குமதியின்மீது கி.கி.ஒன்றுக்கு ரூ.10/= விசேட வர்த்தகப் பொருள் அறவீட்டு வரியை 6 மாத காலத்திற்கு அறிமுகப்படுத்துதல். |
| 16.02.2018 | 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம் (2018.02.15 ஆம் திகதிய 2058/30 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- சீனிக்காக அறவிடப்பட்ட விசேட வியாபாரப் பண்ட அறவீட்டு வரியின் செல்லுபடியாகும் காலத்தை 06 மாத காலத்திற்கு நீடித்தல். |
| 24.02.2018 | 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம் (2018.02.23 ஆம் திகதிய 2059/52 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- உருளைக் கிழங்கு இறக்குமதி மீதான விசேட வர்த்தகப் பண்ட அறவீட்டு வரியை கி.கி.ஒன்றுக்க ரூபா.30/= வரை அதிகரித்தல். |
| 08.03.2018 | 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம் (2018.03.07 ஆம் திகதிய 2061/22 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- மெகரல் மீன் பட்டாணிக் கடலை, கொண்டைக் கடலை கௌபி மற்றும் குரக்கன் ஆகியவற்றுக்காக அறவிடப்பட்ட விசேட வியாபாரப் பண்ட அறவீட்டு வரியின் செல்லுபடியாகும் காலத்தை 06 மாத காலத்திற்கு நீடித்தல். |
| 20.03.2018 | 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம் (2018.03.19 ஆம் திகதிய 2063/13 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- கொண்டைக் கடலை இறக்குமதிமீது விதிக்கப்பட்டிருந்த கி.கி.ஒன்றுக்கான 100/= விசேட வர்த்தகப் பண்ட அறவீட்டு வரியை நீக்குதல். |
| 01.04.2018 | 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம் (2018.04.01 ஆம் திகதிய 2064∴49 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- உருளைக்கிழங்கு, அரிசி, யோகட், பட்டர், வெள்ளைப்பூடு, தோடம்பழம், திராட்சைப் பழம், அப்பிள், சீரகம், குரக்கன், நிலக்கடலை, கடுகு விதை மற்றும் உப்பு ஆகியவற்றுக்கு தற்போது காணப்படும் விசேட வர்த்தக பண்ட அறவீட்டு வரியை செல்லுபடியாகும் காலத்தை நீடித்தல். |
| 02.05.2018 | 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம் (2018.05.01 ஆம் திகதிய 2069/18 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- உருளைக்கிழங்கு இறக்குமதியின்மீது காணப்பட்ட கி.கி.ஒன்றுக்கு 30/= வரியினை |

| பயன்வலுப் பெறும் திகதி | நடவடிக்கை |
|---|---|
| | 40/= வாக பெரிய வெங்காயம் இறக்குமதிமீது கி.கி.ஒன்றுக்கு ரூ.40/= வரையிலும் அதிகரித்தல். |
| 08.05.2018 | 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம் (2018.05.08 ஆம் திகதிய 2070/2 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- 11 பொருட்கள்மீது தற்போது காணப்படும் விசேட இறக்குமதிப் பண்ட அறவீட்டு வரியின் செல்லுபடியாகும் காலத்தை 06 மாத காலம் வரைக்கும் நீடித்தல். |
| 09.05.2018 | 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம் (2018.05.09 ஆம் திகதிய 2070/6 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- துவரம் பருப்பு இறக்குமதியின்போது கி.கி ஒன்றுக்கு 1/= வாகக் காணப்பட்ட வரியை 7/= வரையிலும் உடைக்கப்பட்ட துபரம் பருப்பு மீதான வரியை கி.கி. ஒன்றுக்கு 12/= வரையிலும் அதிகரித்தல். |
| 21.05.2018 | 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம் (2018.05.20 ஆம் திகதிய 2071/85 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- 6 பண்டங்கள் மீதான விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் வரியின் செல்லுபடியாகும் காலத்தை அடுத்த 6 மாத காலத்துக்கு நீடித்தல். |
| 01.06.2018 | 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம் (2018.05.31 ஆம் திகதிய 2073/37 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- தந்போதிருக்கும் சந்தை விலைகளில் நிலையான தன்மையைக் கருத்திற்கொண்டு கடந்த வருடத்தின் இறுதியுடன் ஒப்பிடும்போது தென்னை மற்றும் தென்னை சார்ந்த உற்பத்திகள் மீதான வரியை கி.கி.ஒன்றுக்கு ரூபா 20/= வரை அதிகரித்தல். |
| | **நிருவாக அறவீடுகள்** |
| 28.04.2018 | 12.5 கி.கி.ஐக்கொண்ட சிலிண்டர் ஒன்றுக்கான உள்நாட்டு எரிவாயு விலை ரூபா 245/= இனால் அதிகரிக்கப்பட்டது. |

## 3.3 அரசாங்க செலவினம்

2018 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியினுள் ரூபா 873,350 மில்லியனாகக் காணப்பட்ட மொத்த அரசாங்கச் செலவினம் 2017 இன் அதே காலப் பகுதியுடன் ஒப்பிடும்போது நூற்றுக்கு 6.1 சதவீத அதிகரிப்பாகும். அதில் ரூபா 685,966 மில்லியன் மீண்டெழும் செலவினமாகக் காணப்பட்ட அதேவேளை, மூலதனச் செலவினம் ரூபா 187,384 மில்லியனாகக் காணப்பட்டது. அரசாங்க ஊழியர்களினதும் ஓய்வூதியதாரர்களினதும் சம்பளம் மற்றும் வேதனங்கள் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளின் அதிகரிப்பொன்றை எடுத்துக்காட்டி மீண்டெழும் செலவினம் 9.5 சதவீதத்தினால் அதிகரித்த அதேவேளையில் மீளாய்வுக் காலப்பகுதியில் அரசாங்க முதலீடு 9.5 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

**அட்டவணை 3.11: அரசாங்க செலவினத்தின் செயவாற்றுகை சனவரி - ஏப்ரல் 2018**

ரூபா மில்

| விடயம் | 2017 | 2018 தற்காலிக |
|---|---|---|
| **மீண்டெழும் செலவினம்** | **626,469** | **685,966** |
| சம்பளம் | 197,518 | 210,234 |
| ஓய்வூதியம் | 59,186 | 62,829 |
| வட்டிக் கொடுப்பனவு | 243,499 | 271,545 |
| பிற | 126,266 | 141,358 |
| **மூலதன செலவினம்** | **196,791** | **187,384** |
| **மொத்தம்** | **823,260** | **873,350** |

*மூலம் : தேசிய வரவு செலவு திணைக்களம், அரச கணக்குகள் திணைக்களம் மற்றும் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்*

### சம்பளம் மற்றும் ஓய்வூதியம்

2017 ஆம் ஆண்டின் இந்தக் காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது மாகாண சபைகள் உட்பட அரசாங்க ஊழியர்களின் சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் 2018 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலத்தினுள் ரூபா 204,334 மில்லியன்கள் வரை நூற்றுக்கு 3 சத வீதத்தினால் ஓரளவு வளர்ச்சியடைந்துள்ளது. 2018 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலத்திற்கான ஓய்வூதியச் சம்பளக் கொடுப்பனவுக்கான செலவினம் ரூபா 62,729 மில்லியனாகக் காணப்பட்ட அதேவேளை அது 2017 ஆம் ஆண்டின் அந்தக் காலப்பகுதியிலும் பார்க்க 3 சதவீத வளர்ச்சியாகும்.

### வட்டிச் செலவினம்

2018 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியினுள் வட்டிக் கொடுப்பனவுச் செலவினம் ரூபா 271,545 மில்லியனாகக் காணப்பட்ட அதேவேளையில் அது 2017 ஆம் ஆண்டின் அந்தக் காலப்பகுதியினுள் செலவிடப்பட்ட ரூபா 243,499 மில்லியனுடன் ஒப்பிடும்போது 8.1 சதவீத அதிகரிப்பாகும். இந்த மொத்தச் செலவினத்தில் ரூபா 217,661 மில்லியன் உள்நாட்டுக் கடனுக்காகவும் எஞ்சிய ரூபா 53,884 மில்லியன் வெளிநாட்டுக் கடனுக்காகவுமான வட்டிக் கொடுப்பனவாகக் காணப்பட்டது.

**அட்டவணை 3.12 : அரசாங்க பிணையங்கள், நாணய வீதங்களின் விளைவு வீதங்களின் போக்கு (2017 - 2018 மே)**

| காலம் | | திறைசேரி உண்டியல்கள் | | | திறைசேரி முறிகள் | | | | நாணய மாற்று வீதம் (ரூபா./ ஐ.அ.டொ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | 2 வருடம் | 3 வருடம் | 4 வருடம் | 5 வருடம் | |
| 2017 | சனவரி | 9.03 | 10.07 | 10.37 | 11.41 | - | - | 12.19 | 150.09 |
| | பெப்ரவரி | 9.32 | 10.19 | 10.58 | 12.10 | - | - | 12.89 | 150.82 |
| | மாரச் | 9.63 | 10.62 | 10.98 | 12.30 | - | - | - | 151.43 |
| | ஏபரல் | 9.73 | 10.70 | 11.02 | 11.21 | - | - | 11.55 | 151.76 |
| | மே | 9.61 | 10.35 | 10.71 | 11.07 | - | - | 11.42 | 152.33 |
| | யூன் | 9.60 | 10.29 | 10.47 | - | - | 11.37 | - | 152.83 |
| | யூலை | 9.44 | 9.71 | 9.99 | - | - | 11.14 | 10.43 | 153.67 |
| | ஓகத்து | 8.87 | 9.30 | 9.67 | 9.83 | - | - | - | 153.19 |
| | செத்தெம்பர் | 8.71 | 9.01 | 9.10 | - | - | - | 10.09 | 152.90 |
| | ஒக்தோபர் | 8.75 | 9.10 | 9.48 | - | 9.92 | - | - | 153.53 |
| | நொவம்பர் | 8.20 | 8.88 | 9.44 | - | - | - | 10.20 | 153.66 |
| | திசெம்பர் | 7.69 | 8.30 | 8.90 | - | 9.55 | - | - | 153.15 |
| 2018 | சனவரி | 7.69 | 7.95 | 8.90 | - | - | - | - | 153.80 |
| | பெப்ரவரி | 8.24 | 8.52 | 9.59 | - | 9.85 | - | - | 154.86 |
| | மாரச் | 8.17 | 8.52 | 9.69 | - | | - | 10.68 | 155.73 |
| | ஏபரல் | 8.10 | 8.52 | 9.59 | - | 9.79 | - | - | 56.14 |
| | மே | 8.34 | 8.93 | 9.62 | 12.30 | - | - | 10.51 | 157.90 |

*மூலம்: திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி*

### நலன்புரிச் செலவினம்

2018 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியின் நலன்புரி மற்றும் நிவாரணக் கொடுப்பனவுக்கான செலவினம் முன்னைய வருடத்தின் அந்தக் காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது ரூபா 468,548 மில்லியனாக 20 சதவீதத்தினால் அதிகரித துள்ளது. கொடுப் பனவுகள் பின்வருவனவற்றை உள்ளடக்கும் :

- சமுர்த்தி நிவாரணம்
- பாடசாலை பாடப்புத்தகங்கள் மற்றும் சீருடைகள்
- முதியோர் கொடுப்பனவு
- உர நிவாரணம்
- கர்ப்பிணி தாய்மாருக்கு போ'க்குணவு நிகழ்ச்சித்திட்டம் (போ'க்குப் பொதி)
- சிறுநிரக நோயாளர்களுக்கான விசேட கொடுப்பனவு
- வெள்ளம் மற்றும் வரட்சி நிவாரணம்

சமுர்த்தி கொடுப்பனவு, முதியோர் கொடுப்பனவு, பாதுகாப்புப் படை உறுப்பினர்களின் பெற்றோர்களுக்கான கொடுப்பனவு மற்றும் வெள்ளத ˙தினாலும் வறட்சியினாலும் பாதிக் கப்பட்ட குடும்பங்களுக்கான கொடுப்பனவுகள் போன்ற நலன்புரி உதவி நிகழ்ச்சித் போ'க்குப் பொதி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக உறப்பட்ட செலவினங்கள் முறையே ரூபா 509 மில்லியன் மற்றும் ரூபா 1,316 மில்லியன்களாகக் காணப்பட்டன.

இந்தக் காலப்பகுதியில் ரூபா 3,375 மில்லியன் செலவில் பாடசாலை மாணவர்களுக்கான இலவசப் பாடப்புத்தகங்கள், சீருடைகள், பருவச்சீட்டுக்கள், இலவச அறநெறிப்பாடசாலைப் புத்தகங்கள் மற்றும் மாணவர்களுக்கான உதவுதொகைகள் என்பன வழங்கப்பட்டுள்ளன. அரசாங்கத்தினால் நோயாளர்களுக்காக திட்டங்களுக்கான செலவினம் ரூபா 27,727 மில்லியன் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதில் ரூபா 9,461 மில்லியன் மரணித்த மற்றும் அங்கவீனமுற்ற இராணுவ வீரர்களின் ஊழியர் நட்ட ஈட்டின் பொருட்டு 2018 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியின் உறப்பட்ட அதேவேளையில் 2017 இன் அந்தக் காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது அது ரூபா 9,032 மில்லியனாகக் காணப்பட்டது.

அரசாங்கத்தினால் 2018 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலத்தில் போ'க்குப் பொதி, திரிபோ'ா நிகழ்ச்சித் திட்டம், திரவப்பால் மற்றும் பாடசாலைப் போ'க்கு நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ரூபா 3,281 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. இதில் திரிபோ'ா மற்றும்

தடையின்றி இலவச மருந்துகளை வழங்குவதற்கு 2018 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலத்தினுள் ரூபா 14,174 மில்லியன் தொகை செலவிடப்பட்டுள்ளன. மீளாய்வு காலப்பகுதியில் அரசாங்கத்தினால் உர நிவாரண நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நெல் உற்பத்தி விவசாயிகள் மற்றும் ஏனைய சிறிய பயிர் செய்கையாளர்கள் ஆகியோருக்கு உரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக நிதி மானியத்தை வழங்கும்பொருட்டு ரூபா 8,009 மில்லியன்கள் செலவு செய்யப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.13 நலன்புரிச் செலவினம் சனவரி – ஏப்ரல் 2018**

ரூபா மில்

| விடயம் | 2017 | 2018 |
|---|---|---|
| **தாய் மற்றும் சேய்** | | |
| திரபோசா நிகழ்ச்சித் திட்டம், குழந்தை பால்மா உணவு மானியம், போசனமல்ல | 1,913 | 1,944 |
| இலவச பாடப்புத்தகங்கள், சீருடைகள் | 2,041 | 1,966 |
| பாடசாலை பருவகாலச் சீட்டுக்கள் | 245 | 1,234 |
| பாடசாலை போசாக்கு உணவுகள் | 1,143 | 1,377 |
| **விவசாயம்** | | |
| உர மானியம் | 7,762 | 8,009 |
| **நலன்புரிக் கொடுப்பனவுகள்** | | |
| சமுர்த்தி நிவாரணம் | 13,311 | 13,142 |
| அங்கவீனமுற்ற படை வீரர்களுக்கான உதவி | 9,032 | 9,461 |
| முதியோருக்கான கொடுப்பனவு | 3,010 | 3,050 |
| மாற்றுத்திறனாளிகளுக்கான உதவி | 356 | 371 |
| உணவு உதவி, வெள்ளம் மற்றும் வரட்சி நிவாரணம் | 163 | 1,328 |

*மூலம்: தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களம்*

## அரசாங்க முதலீட்டுச் செலவினம்

### 1. பாடசாலைக் கல்வி

2018 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலத்தில் பாடசாலை கல்வித்துறை மீதான மொத்தச் செலவினம் ரூபா 67,725 மில்லியன் எனக் கணக்கிடப்பட்டுள்ளன. அதில் ரூபா 57,164 மில்லியன் மீண்டுவரும் செலவினத்திற்காகவும் ரூபா 10,561 மில்லியன் மூலதனச் செலவினத்திற்காகவும் செலவிடப்பட்டுள்ளது. இது 2017 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலத்திலும் பார்க்க 09 சதவீதம் அதிகரிப்பாகும். இதற்கான காரணம் போசாக்குணவுச் செலவினம் நாளொன்றுக்கு மாணவர் ஒருவருக்கு 25 ரூபாவிலிருந்து 30 ரூபாவாக அதிகரித்தமையாகும்.

தரமான கல்விக்கான போதிய உட்கட்டமைப்பின் முக்கியத்துவத்தினைக் கவனத்திற்கொண்டு பொதுக் கல்வி அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கான முதலீடு 2018 ஆண்டின் முதல் நான்கு மாதங்களின் போது ரூபா 8,677 மில்லியனை வழங்குவதன் மூலம் அதிகரித்தது. இது 2017 காலப் பகுதியைவிட 50 சதவீத அதிகரிப்பாகும்.

2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட "அண்மையில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை" (NSBS) நிகழ்ச்சித்திட்ட மீளாய்வு கால எல்லையின்போது தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட்டது. 2018 ஏப்ரல் மாத இறுதியளவில் (NSBS) நிகழ்ச்சித்திட்டத்திற்காக உறப்பட்ட மொத்த முதலீடு ரூபா 7,627 மில்லியனாகக் காணப்பட்டது.

### 2. உயர் கல்வி

2018 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் உயர் கல்வியின் அபிவிருத்திக்காக அரசாங்கத்தினால் 14,609 மில்லியன் செலவிடப்பட்ட அதேவேளையில் ரூபா 9,800 மில்லியன் மற்றும் ரூபா 4,809 மில்லியன் தொகை முறையே மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவினத்திற்காக காணப்பட்டன.

2018 ஏப்ரல் இறுதியில் 10 பல்கலைக்கழகங்களில் தொழில்நுட்ப பீடங்களை தாபிப்பதற்கான புதிய கட்டிட தொகுதிகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 1,253 மில்லியன் செலவிடப்பட்டது. 2018 இன் முதல் 4 மாதங்களின் போது 238 பல்கலைக்கழக மாணவர்கள் மடிகணனி கொள்வனவு செய்வதற்கான கடன்களை பெற்றுக்கொண்டதுடன் ரூபா 71 மில்லியன் 2016 இலிருந்து வழங்கப்பட்ட கடன்களுக்கான வட்டிச் செலவினத்தினை பொறுப்பேற்பதற்கு மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி என்பவற்றுக்கு ரூபா 71 மில்லியன் செலுத்தப்பட்டது.

திறன் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழில்பயிற்சி என்பவற்றுக்கான மொத்த செலவினம் ரூபா 2,481.5 மில்லியனாகக் காணப்பட்டதுடன் 2018 இன் முதல் 4 மாதங்களின்போது மீண்டெழும் செலவினமாக ரூபா 1,978 மில்லியனும் மூலதன கருத்திட்டங்களுக்காக ரூபா 503.5 மில்லியனும் செலவிடப்பட்டது.

விஞ்ஞானம், தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் கீழ் மூலதன கருத்திட்டங்கள் மீதான மொத்தச் செலவினம் 2018 ஏப்ரல் இறுதியில் ரூபா 820.5 மில்லியனாகக் காணப்பட்டது.

### அட்டவணை 3.14: கல்வித்துறையின் முக்கிய செயற்பாடுகளுக்கான செலவினம்

ரூபா மில்.

| விடயம் | சன – ஏப்ர 2017 | சன – ஏப்ர 2018 |
|---|---|---|
| **உயர் கல்வி – மீண்டெழும் செலவினம்** | | |
| பாடசாலை ஆசிரியர்களினதும் ஏனைய உதவி ஊழியர்களினதும் சம்பளங்கள் | 8,004 | 8,400 |
| மஹாபொல மற்றும் மாணவர் உதவுதொகை | 199 | 402 |
| **உயர் கல்வி – மூலதனச் செலவினம்** | | |
| பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய உயர் கல்வி நிறுவனங்களின் அபிவிருத்தி | 1,180 | 2,387 |
| 84 மாணவர் விடுதிகளை நிருமாணித்தல் | 1,272 | 1,350 |
| வயம்ப பல்கலைக் கழகத்தில் அரச மருத்துவ பீடங்களைத் தாபித்தல் | - | 297 |
| பல்கலைக்கழகங்களின் தொழில்நுட்பப் பீடங்களைத் தாபித்தல் | 255 | 1,253 |
| மடிக்கனணிக்கான கடன் வட்டி (பல்கலைக்கழக மாணவர்களுக்கு) | 40 | 71 |
| மீன்பிடி, சமுத்திர அறிவியல் பீடம் - றுஹுணு பல்பலைக்கழகம் | 56 | 20 |
| தென்கிழக்கு பல்கலைக்கழக அபிவிருத்தித் திட்டம் கட்டம் 1 “ஆ” | 45 | 31 |
| **திறன் அபிவிருத்தி** | | |
| திறன் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 205 | 325.79 |
| கொழும்பு வாழ்க்கைத் தொழில் பயிற்சி நிலையம் மற்றும் கம்பஹா தொழில்நுட்பக் கல்லூரி | 41 | 15.14 |
| ஆனமடுவை தொழில்நுட்பக் கல்லூரிக்கான கட்டிட நிர்மானம் | 2 | 19.53 |
| **விஞ்ஞானம் மற்றும்** | | |
| நனோ தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்டம் | 32 | 515.5 |
| விஞ்ஞான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 5 | 24.66 |
| விதாதா நிகழ்ச்சித்திட்டம் | 3 | 4.15 |
| அரசாங்க தனியார் பங்களிப்பு அடிப்படையில் உயிரியல் தொழில்நுட்ப புத்தாக்க பேட்டையினைத் தாபித்தல் | - | 14.42 |

*மூலம்: தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களம்*

## 3. சுகாதாரம்

2018 ஆம் ஆண்டின் முதல் நான்கு காலப்பகுதியில் மேற்கத்திய மற்றும் உள்நாட்டு மருத்துவத் துறைகளை உள்ளடக்கிய சுகாதாரத் துறைக்கான அரசாங்கத்தின் மொத்தச் செலவினம் மாகாண மற்றும் மத்திய அரசாங்கத்தின் சுகாதாரத்திற்கான செலவினங்களையும் உள்ளடக்கி 2017 ஆம் ஆண்டில் அந்தக் காலப்பகுதியுடன் ஒப்பிடும் போது ரூபா 68,806 மில்லியன் வரை 11.6 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. சுகாதாரத்திற்கான மொத்தச் செலவினத்தில் ரூபா 59,634 மில்லியன் மீண்டுவரும் செலவினத்திற்கானதாகக் காணப்பட்ட அதேவேளையில் மூலதன முதலீடு ரூபா 9,172 மில்லியனாகக் காணப்பட்டது.

**அட்டவணை 3.15: சுகாதாரத் துறையின் முக்கிய செயற்பாடுகளுக்கான செலவினம்**

ரூபா மில்.

| விடயம் | சனவ – ஏப்ரல் 2017 | சனவ – ஏப்ரல் 2018 |
|---|---|---|
| **மொத்த மீண்டெழும் செலவினம்** | **52,993** | **59,634** |
| சேவை வழங்கல் செலவியனம் | 25,773 | 29,480 |
| அதில் மருத்துவ ஆளனி, உதவி ஊழியர் சம்பளங்கள் | 21,209 | 23,948 |
| மருந்து வழங்கலுக்கான ஏற்பாடு | 11,325 | 14,174 |
| மாகாண சுகாதாரம் | 15,895 | 15,980 |
| | | |
| **அரசாங்க முதலீட்டு செலவினம்** | **8,663** | **9,172** |
| பொலநறுவை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்தி | 53 | 98 |
| கொழும்பு தேசிய வைத்தியசாலையில் காக்கை வலிப்பு அலகு | 129 | 5 |
| ஹம்பாந்தோட்டை, நுவரெலியா பொது வைத்தியசாலை அபிவிருத்தி | 3 | - |
| மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையில் புற்றுநோய் வரட்டுத் தொடரை நிர்மாணித்தல்(ரஸ்வி கருத்திட்டம்) | - | - |
| குருணாகல போதனா வைத்தியசாலையில் மகப்பேற்று மருத்துவமனை | 95 | - |
| தோட்டத்துறை வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்தல் | 23 | 29 |
| ராகம வைத்தியசாலையில் அவசர சேவைப் பரிவு மற்றும் வாரட்டுத் தொடரினை நிர்மாணித்தல் | 87 | - |
| ஹெல்முட் கோஹல் மகப்பேற்று மருத்துவமனை கராப்பிடி வைத்தியசாலை | 64 | 35 |
| உயர்ந்த கதிர்வீச்சு ஆற்றலுடன் இலங்கையில் புற்றுநோயாளர்களுக்கு உயர்தரமான கதிரயக்க சிகிச்சையினை வழங்கல் | - | 55 |
| ஏனைய மூலதன முதலீடுகள் | 6,452 | 7,727 |
| மாகாண சுகாதார முதலீடு | 1,757 | 1,445 |

*மூலம்: தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களம்*

## 4. நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவம்

2018 இன் முதல் 4 மாதங்களின் போதும் நீர்ப்பாசனம் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவம் தொடர்பான அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான அரசாங்கம் ரூபா 12,581 மில்லியனை முதலீடு செய்துள்ளது. இதில் மகாவலி அபிவிருத்தி அமைச்சின் கீழ் புதிய நீர்த்தேக்கங்களை நிர்மாணிப்பதற்கு பழையதை புனரமைப்பு செய்வதன் மூலம் மகாவலி நீர்ப்பாசன திட்டத்தின் அபிவிருத்திக்காக ரூபா 9,896 மில்லியன் செலவிடப்பட்டது. எஞ்சிய ரூபா 2,865 மில்லியன் நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் அமைச்சினால் முதலீடு செய்யப்பட்டதுடன் நீர்த தேக்கங்களை நிர்மாணித்தல் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி திட்டங்களுக்கான அனர்த்த முகாமைத துவத்திற்காகவும் முதலீடு செய்யப்பட்டுள்ளது. மொனகஹகந்த, களுகங்கை மற்றும் உமா ஓயா போன்ற பாரிய நீர்ப்பாசன திட்டங்கள் மீதான செலவினத்திற்காக குறித்த மீளாய்வு காலத்தின் போது ரூபா 2,906 மில்லியன் செலவிடப்பட்டது. நீர்ப்பாசன, நீர் வளங்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கீழ் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கான மொத்த ஒதுக்கீட்டில் பெரும் பகுதியான யான் ஓயா கருத்திட்டம் 2018 இன் முதல் 4 மாதங்களின் இறுதியில் ஏறக்குறைய 100 சதவீத நிதி முன்னேற்றத்தினை காட்டியது.

## 5. விவசாயம்

உணவு பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கு விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளடங்களாக 2018 இல் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக விவசாய அமைச்சுக்கு மேற்கொள்ளப்பட்ட மொத்த ஒதுக்கீடு ரூபா 11,936 மில்லியனாகும். இச்செயற்பாடுகளுக்காக 2018 இன் முதல் 4 மாதங்களின் போது செலவிடப்பட்ட தொகை ரூபா 1,619 மில்லியனாகக் காணப்பட்டது. குறித்த மீளாய்வு காலத்தின்போது சிறிய குளங்கள் மற்றும் கால்வாய்களின் புனரமைப்பு உள்ளடங்களாக 100 பழக்கிராமங்களை தாபித்தல் போன்ற பல்வேறு செயற்பாடுகள் குறித்த மீளாய்வுக் காலத்தின் போது சிறந்த நிதி முன்னேற்றத்தினைக் காட்டியது.

## 6. நீர் வழங்கல் மற்றும் துப்பரவேற்பாடு

பாதுகாப்பான குடிநீர் மற்றும் தரமான துப்பரவேற்பாட்டு சேவை வசதிகளை வழங்குவதனை நோக்காகக் கொண்டு அரசாங்கம் நீர்வழங்கல் மற்றும் துப்பரவேற்பாட்டுக்காக 2018 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப் பகுதியில் நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன்களைத் தீர்ப்பதற்கான நிதி நிறுவனங்கள் உட்பட ரூபா 18,495 மில்லியன் தொகையொன்றை முதலீடு செய்துள்ளது. ரூபா 10,009 மில்லியன் வருடாந்த வரவுசெலவு மதிப்பீட்டின் மூலம் ஏற்பாடு செய்யப்படுகின்ற அதே வேளையில் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை நேரடியாகப் பெற்றுக்கொண்ட கடன்தொகை ரூபா 6,385 மில்லியனாகக் காணப்பட்டது. மேலும் நீர் வழங்கல் மற்றும் சாக்கடைக் கருத்திட்டத்திற்காக வெளிநாட்டு நிதியிடல் வசதிகளுக்குரிய உள்நாட்டு எதிரிணை நிதியத்திற்காக பயன்படுத்தும் பொருட்டு மக்கள் வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 2,101 மில்லியன் நிதியும் அதில் உள்ளடங்குகிறது.

அதற்கு மேலதிகமாக மாகாண சபை மற்றும் உள்;ராட்சி அமைச்சினால் 2018 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப் பகுதிக்காக கொழும்பு நகரினதும் கொழும்பு பெரும்பாகத்தினதும் அதிகாரப் பிரதேசங்களில் துப்பரவேற்பாட்டுச் சேவைகளை மேம்படுத்துவதற்காக ரூபா 473 மில்லியன்களை முதலீடு செய்துள்ளது.

அட்டவணை 3.16 பாரிய கருத்திட்டகள் மீதான செலவினம்

| கருத்திட்டம் | 2018.04.30 அன்றுள்ளவாறு செலவினம் (ரூபா.மில்) | | |
|---|---|---|---|
| | வெளிநாட்டு | உள்நாட்டு | மொத்தம் |
| யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர்வழங்கல் மற்றும் துப்பரவேற்பாட்டு கருத்திட்டம | 263 | 432 | 695 |
| அனுராதபுர வடக்கு நீர் வழங்கல் கருத்திட்டம் கட்டம் -I | 418 | 20 | 438 |
| மாத்தளை பெரும்பாக நீர் வழங்கல் கருத்திட்டம் | 1,058 | 792 | 1,850 |
| களனி வலதுகரை நீர் வழங்கல் கருத்திட்டம் கட்டம் -II | 1,382 | 1,024 | 2,406 |
| தெதுரு ஓயா நீர் வழங்கல் கருத்திட்டம் | 646 | 616 | 1,262 |
| மத்துகம, அகலவத்தை ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம் | 686 | 591 | 1,277 |
| அளவ்வ, பொல்கஹவல ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம் | 697 | 188 | 885 |
| தம்புத்தேகம நீர் வழங்கல் கருத்திட்டம் | 3,430 | 526 | 3,956 |
| கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவ கருத்திட்டம் | 1,167 | 27 | 1,194 |
| குருநாகல் பெரும்பாக நீர் வழங்கல் மற்றும் சாக்கடை கருத்திட்டம் | 871 | 186 | 1,057 |
| நீர் வழங்கல் மற்றும் துப்பரவேற்பாட்டு மேம்பாட்டுக் கருத்திட்டம் | 568 | 82 | 650 |
| கொழும்பு கழிவுநீர் முகாமைத்துவக் கருத்திட்டம் | 56 | 75 | 131 |
| சாக்கடை முறைமை – கொழும்பு மாநகரசபை கருத்திட்டம் | - | 342 | 342 |

மூலம்: நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களம்.

## 7. நெடுஞ்சாலைகள் மற்றும் பாலங்கள்

தேசிய வீதிகள், அதிவேக நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி, பாலங்கள் மற்றும் மேம்பாலங்கள் நிர்மானம் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான மூலதனச் செலவினமாக அரசாங்கத்தினால் 2018 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் ரூபா. 33,468 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. அதில் ரூபா 4,861 மில்லியன் அதிவேக நெடுஞ்சாலை அபிவிருத்திக்காக செலவிடப்பட்டுள்ள அதேவேளையில் ரூபா 2,730 மில்லியன் நெடுஞ்சாலை அபிவிருத்திக்காக செலவிடப்பட்டுள்ளது. அதேவேளையில், அரசாங்கத்தினால் வீதிகளை அகலமாக்குதல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றுக்காக ரூபா 5,686 மில்லியன் செலவிடப்பட்டுள்ள அதேவேளையில் பாலம் மற்றும் மேம்பாலங்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 598 மில்லியன்களும் மகநெகும கிராமிய வீதி அபிவிருத்திக் கருத்திட்டத்திற்காக ரூபா 1,704 மில்லியன்களும் செலவிடப்பட்டுள்ளன.

அட்டவணை 3.17: வீதிகள் மற்றும் பாலங்கள் மீதான செலவினம்

ரூபா.மில

| + | கருத்திட்டம்.்.நிகழ்ச்சித்திட்டம் | 2017 ஏப்ரல் 30 இல் உள்ளவாறான செலவினம் | 2018 ஏப்ரல் 30 இல் உள்ளவாறான செலவினம | வேறுபாடு % |
|---|---|---|---|---|
| 1 | அதிவேக நெடுஞ்சாலை அபிவிருத்தி | 9,458 | 4,861 | 51 |
| | வெளிச்சுற்று நெடுஞ்சாலைக் கருத்திட்டம் - கட்டம்; III | 1,161 | 25 | 2 |
| | மத்திய அதிவேக நெடுஞ்சாலைக் கருத்திட்டம் | 742 | 2,944 | 396 |
| | தெற்கு அதிவேக நெடுஞ்சாலை நீடிப்பு | 7,489 | 1,846 | 25 |
| | ஏனையவை | 66 | 46 | 70 |
| 2 | அதிவேக நெடுஞ்சாலை அபிவிருத்தி | 5,532 | 2,730 | 49 |
| | வீதிகளைப் பராமரித்தல் | 2,195 | 0 | 0 |
| | முன்னுரிமை வீதிக் கருத்திட்டங்கள் - III | 1,214 | 1,093 | 90 |
| | கொழும்பு மாவட்ட வீதி அபிவிருத்திக் கருத்திட்டம் | 243 | 531 | 218 |
| | தெற்கு வீதி இணைப்புக் கருத்திட்டம் | 799 | 492 | 62 |
| | (iRoad) ஒருங்கிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் | 807 | 280 | 35 |
| | ஏனையவை | 274 | 334 | 121 |
| 3 | வீதிகளை அகலமாக்குதலும் மேம்படுத்துதலும் | 4,939 | 5,686 | 115 |
| 4 | பாலங்களையும் மேம்பாலங்களையும் நிர்மானித்தல் | 1,096 | 598 | 55 |
| | பிரித்தாணிய உருக்குப் பாலம் கருத்திட்டம் | 233 | 124 | 53 |
| | தேசிய நெடுஞ்சாலைகளின் சேதமடைந்த/ பலவீனமான பாலங்களின் மீள் நிர்மாணித்தல் | 110 | 106 | 96 |
| | 46 பாலங்களை மீள் நிர்மானித்தல் | 109 | 16 | 15 |
| | பாரிய பாலங்கள் நிர்மானிப்புக் கருத்திட்டம் | 62 | 106 | 170 |
| | பழைய பாலங்களின் ஆக்கக்கூறுகளைப் பயன்படுத்தி கிராமிய பாலங்களை நிர்மானித்தல். | 129 | 133 | 103 |
| | இரண்டாவது புதிய களனிப் பாலம் கட்டுமான கருத்திட்டம் | 302 | 39 | 13 |
| | ஏனையவை (மூன்று மேம்பாலங்கள் உட்பட) | 151 | 74 | 49 |
| 5 | இயற்கை அனர்த்தத்தினால் பாதிப்படைந்த பாலங்களை புனரமைத்தல் | 13 | 131 | 1007 |
| 6 | மகநெகும கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 238 | 1,704 | 715 |
| 7 | வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு மாற்றுதல் | 2,038 | 2,037 | 99 |
| 8 | காணி மற்றும் காணி மேம்பாடு(முன்னுரிமை கருத்திட்ங்கள் தவிர்ந்த ஏனைய கருத்திட்டங்கள்) | 912 | 402 | 44 |
| 9 | வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அர்ப்பணிப்பின் இடைவெளிக்கு நிதியிடல் | 12,000 | 15,319 | 127 |
| 10 | ஏனையவை | - | - | - |
| | மொத்தம் | 36,226 | 33,468 | 92 |

*மூலம் : தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம்*

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதி உதவியுடன் வீதிகளை நிர்மாணித்தல் புனரமைத்தல் மற்றும் பராமரித்தல் கருத்திட்டங்கள் பலவும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவை மத்திய அதிவேக நெடுஞ்சாலை, தெற்கு அதிவேக நெடுஞ்சாலை நீடிப்பு, முன்னுரிமை வீதிக் கருத்திட்டம் ஐ-சழயன கருத்திட்டம், புதிய களனிப் பாலம் கருத்திட்டம் என்பனவாகும். இராஜகிரிய, பொல்காவலை மற்றம் கனேமுல்ல ஆகிய இடங்களில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 3 மேம்பாலங்களும் 2018 சனவரி மாதமளவில் பொதுமக்களுக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளன.

உள்நாட்டு வங்கிகள் மூலம் நிதியளிப்புச் செய்யப்படுகின்ற வீதிக் கருத்திட்டங்களில் வட்டி மற்றும் மூலதன மீள் கொடுப்பனவுக்காக அரசாங்கத்திற்கு குறிப்பிடத்தக்க தொகையொன்றை செலவிட வேண்டியேற்பட்டுள்ள அதேவேளையில் முதல் நான்கு மாத காலப்பகுதியில் இதற்காக ரூபா 15,319 மில்லியன்கள் செலவிடப்பட்டுள்ளன.

## 8. போக்குவரத்து

மீளாய்வின் காலப்பகுதியில் போக்குவரத்துத் துறையில் மேற்கொள்ளப்பட்ட முதலீடு ரூபா 3,760 மில்லியனாகக் காணப்பட்ட அதேவேளையில் அது பிரதானமாக நாட்டில் காணப்படுகின்ற பொதுப் போக்குவரத்து முறையைப் பயன்மிக்கதும் நவீனமயமானதுமாக மாற்றும்பொருட்டு பொதுப் போக்குவரத்தின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் வாகனத்தொகுதியின் விரிவாக்கம் என்பவற்றுக்காக செலவிடப்பட்டது. மொத்தச் செலவினத்தில் ரூபா 751 மில்லியன் புதிய பேரூந்துகள் மற்றும் உதிரிப்பாகங்களின் கொள்வனவுக்கான குத்தகை தவணைக் கொடுப்பனவுக்காக இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையினால் செலவிடப்பட்டுள்ளது. எஞ்சிய ரூபா 3,009 மில்லியன்களும் மாத்தறை – பெலியத்த- கதிர்காமம் புதிய புகையிரதப் பாதை, மடு – தலைமன்னார் புகையிரதப் பாதை, பளை – காங்கேசன்துறை புகையிரதப் பாதை மற்றும் அனுராதபுரம், தலைமன்னார், காங்கேசன்துறை ஆகியவற்றில் புதிய புகையிரதப் பாதை சமிக்ஞைகள் மற்றும் தொலைத்தொடர்பு முறைகளை நிறுவுதல் உட்பட நிர்மானக் கருத்திட்டங்களை தொடர்ந்து மேற்கொள்வதற்காக செலவிடப்பட்டது.

அட்டவணை 3.18 : புகையிரதத்துறைக்கான செலவினம் 2018 சனவரி – ஏப்ரல்

ரூபா மில்

| கருத்திட்டத்தின் பெயர | உள்நாட்டு நிதியிடல் | வெளிநாட்டு நிதியிடல் | மொத்தச் செலவினம |
|---|---|---|---|
| மாத்தறை – பெலியத்த – கதிர்காமம் புதிய புகையிரதப் பாதை | 35 | - | 35 |
| மடு- தலைமன்னார் புகையிரதப் பாதை | 6 | - | 6 |
| புதிய புகையிரதப் பாதை சமிக்ஞைகள் மற்றும் தொலைத்தொடர்பு முறைகளை நிறுவுதல் அனுராதபுரம்/ தலைமன்னார் / காங்கேசன்துறை | 3 | - | 3 |
| புதிய தண்டவாளங்கள் மற்றும் சிலிப்பர்கட்டைகள் ஆகியவற்றினால் நிரந்தரப்பாதை புனரமைத்தல் | 973 | - | 973 |
| கொங்கிறீற் தண்டவாள கட்டடை உற்பத்தி பொறித்தொகுதி அலகு. | 69 | - | 69 |
| வாகனங்களை புனரமைத்தல் | 974 | - | 974 |
| **மொத்த முதலீடு** | **2,060** | **-** | **2,060** |

*மூலம் : தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம்.*

## 9. மின்வலு மற்றும் சக்தி

2014 ஆம் ஆண்டு முதல் அரசாங்கத்தினால் இலங்கை மின்சார சபையின் கடனை, மூலதனப் பங்காக மாற்றுவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தின் மூலம் அதன் நிதி நிலைமையை வலுவூட்டுவதற்கும் அதன் பிரகாரம் சுயமாக உருவாக்கப்படும் சம்பாத்தியத்தின் மூலம் செயற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் பெறுபேறாக வருமானத்தை உருவாக்கும் மின்வலு உற்பத்தி செய்யும் கருத்திட்டத்திற்கான அரசாங்கத்தின் முதலீடு படிப்படியாகக் குறைவடைந்துள்ளது.

2018 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் மின்வலு மற்றும் சக்தித் துறையின் கருத்திட்டத்திற்கான அரசாங்கத்தின் முதலீடு ரூபா 256.65 மில்லியனாகக் காணப்பட்டது. இதற்கு தூய சக்தி மற்றும் வலையமைப்பு வினைத்திறன் மேம்பாட்டுக் கருத்திட்டம், நிலைத்து நிற்கும் உயிர் வாயு சக்தி உற்பத்தி மற்றும் நவீன உயிர் சக்தி தொழில்நுட்பம் மற்றும் தொழில்நுட்பக் கருத்திட்டம் ஆகியவற்றுக்காக மேற்கொள்ளப் பட்ட செலவினங்கள் முறையே ரூபா 1.75 மில்லியன் மற்றும் 1.70 மில்லியன் ஆகும். அதேவேளையில் 2018 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலத்தில் வரையறுக்கப்பட்ட பொலிற்றோ லங்கா தனியார் கம்பனியின் மூலம் அகற்றப்படுகின்ற பிளாஸ்றிக் பொருட்களைப் பயன்படுத்தி எரிபொருளை உற்பத்தி செய்வதற்காக ரூபா 3 மில்லியன்கள் செலவிடப்பட்டுள்ளன.

## 10. நகர அபிவிருத்தி

2018 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் நகர அபிவிருத்திக்காக ரூபா 7,900 மில்லியன்கள் செலவிடப்பட்டுள்ள அதேவேளையில் மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சின்கீழ் ரூபா 6,743 மில்லியன்களும் நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின்கீழ் கொழும்பு பெரும்பாக திண்மக் கழிவு முகாமைத்துவ கருத்திட்டத்தின் ஊடாக ரூபா 1,157 மில்லியன்களும் செலவிடப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.19: அபிவிருத்திக் கருத்திட்டச் செலவினம் 2018: சனவரி - ஏப்ரல்**

ரூபா மில்.

| கருத்திட்டம் | உள்நாட்டு | வெளிநாட்டு | மொத்தம் |
|---|---|---|---|
| கொழும்பு மாநகரை அண்டிய நகர அபிவிருத்திக் கருத்திட்டம் (இ.அ- உ.வ.) | 195 | 294 | 489 |
| கொழும்பு மாநகரை அண்டிய திண்மக்கழிவு முகாமைத்துவக் கருத்திட்டம் | 1,939 | - | 1,939 |
| கொழும்பு பெரும்பாக நகரப் போக்குவரத்துக் கருத்திட்டம் -கட்டம் I | 146 | - | 146 |
| அபிவிருத்தி திறமுறை நகரங்கள்- கண்டி மற்றும் காலி(இ.அ- உ.வ.) | 138 | 334 | 472 |
| மனிங் சந்தையை பேலியகொடையில் மீளமைக்கும் கருத்திட்டம் | 501 | - | 501 |
| துறைமுக நகர அபிவிருத்திக் கருத்திட்டம் | 1,209 | - | 1,209 |
| ஒன்பது மாகாணங்களில் நகர அபிவிருத்திக் கருத்திட்டம் | 397 | - | 397 |
| வேரஸ் கங்கை கழிவுநீர் வடிகாலமைப்பு மற்றும் சூழல் மேம்பாட்டு கருத்திட்டம் | 296 | - | 296 |
| பொதுப் போக்குவரத்தை ஊக்குவிப்பதற்கு பேரூந்துச் சேவையை மேம்படுத்துதல் | 129 | - | 129 |
| நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்கள். | 100 | - | 100 |
| இலங்கைக் காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்கள். | 625 | - | 625 |
| நகரங்களை தரமுயர்த்துவதற்கு விரிவான திட்டத்தின் அபிவிருத்தி | 1,028 | - | 1,028 |

*மூலம் : தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம்.*

மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சின்கீழான செலவினங்கள் விரிவான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு பகுதியாக மேல் மாகாணம் முழுவதையும் மாநகரமாக மாற்றியமைப்பதனை நோக்காகக் கொண்டுள்ளது. மேல் மாகாண மாநகரங்களுக்கு மேலதிகமாக நகரமயப்படுத்தலின் நன்மைகள் சமமாகப் பிரிந்து செல்லக்கூடிய விதத்தில் காலி, கண்டி, யாழ்ப்பாணம், அனுராதபுரம் மற்றும் திருகோணமலை ஆகிய உபாயத்திட்ட நகரங்களுக்கும் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. நாட்டின் பின் தங்கிய பிரதேசங்களில் நகரங்களாக தரமுயர்த்தும் பணிக்காக நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

## 11. வீடமைப்பு அபிவிருத்தி

"அனைவருக்கும் புகழிடம்" கருப்பொருளின் கீழ் சகலருக்கும் பொருத்தமான வீடொன்றை வழங்குதல் மற்றும் தற்போதிருக்கும் வீட்டை மேம்படுத்துவதற்கும் பல்வேறு அமைச்சுக்களின் மூலம் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. இந்த வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சத் திட்டங்களுக்காக தொடர்ந்தும் கடன் மற்றும் மானியங்களின் மூலம் நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. 2018 ஆம் ஆண்டில் வீடமைப்பு அபிவிருத்திக்கான மொத்த ஏற்பாடு சுமார் 29,000 மில்லியன்கள் ஆகும்.

**அட்டவணை 3.20 : பல்வேறு அமைச்சுக்களினால் 2018 ஆம் ஆண்டின் வீடமைப்பு அபிவிருத்திக்காக வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகள்.**

| அமைச்சு | ஒதுக்கீடு (ரூபா மில்) |
|---|---|
| வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு | 7,322 |
| சிறைச்சாலை மறுசீரமைப்பு, புனர் வாழ்வு, மீள் குடியேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சு | 3,000 |
| மலையக புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு | 2,667 |
| மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு | 13,300 |
| அனர்த்த முகாமைத்துவ அமைச்சு | 2,800 |
| மொத்தம் | 29,089 |

2018 ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் மேலே குறிப்பிடப்பட்ட சகல அமைச்சுக்களினாலும் வீடமைப்பு அபிவிருத்திக்காக ரூபா 3,821 மில்லியன் செலவிடப்பட்டுள்ளன. இந்த முதலீட்டுடன் 2017 ஆம் ஆண்டின் நாடு பூராவும் ஆரம்பிக்கப்பட்ட 4,738 வீட்டுக் கூறுகளின் நிர்மாண நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்துவதற்கும் 4894 புதிய வீடுகளை நிர்மாணிப்பதற்கும் கடன் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

## அட்டவணை 3.21 : 2018.04.30 அன்றுள்ளவாறு மேலதிக ஒதுக்கீடுகளின் அமைச்சு ரீதியான பொழிப்பு

| தலைப்பு இல. | அமைச்சு / திணைக்களம் | நோக்கம் | மீண்டெழும் | மூலதனம் |
|---|---|---|---|---|
| 1 - 22 | **விசேட செலவின அலகுகள்** | | | |
| 1 | அதிமேதகு சனாதிபதி | கிராமியத் துறையில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட அறிமுகம், வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக பௌத்த நூலகம் மற்றும் தேசிய பொருளாதார பேரவையைத் தாபித்தல், இலங்கை அமரபுர சங்க சபா மகாநாயக்க தேரர் வணக்கத்துக்குரிய கொட்டுகொட தம்மவச அவர்களுக்கான வாகனக் கொள்வனவு மற்றும் நிலுவைக் கொடுப்பனவுகளைத் தீர்த்தல். | 70,000,000 | 611,390,000 |
| 2 | பிரதமரின் அலுவலகம் | வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக நல்லிணக்க பொறிமுறைக்கான ஒருங்கிணைப்பு செயலகத்தினை செயற்படுத்தல் மற்றும் வாகனக் கொள்வனவு | 177,000,000 | 13,000,000 |
| 6 | அரசாங்க சேவை ஆணைக்குழு | 2017 இல் புதிய கட்டிட நிர்மாணம் நிலுவைகளை செலுத்துதல் | - | 84,000,000 |
| 8 | தேசிய பொலிஸ் ஆணைக்குழு | இலங்கையில் சமாதானத்தினைக் கட்டியெழுப்புவதற்கு ஒத்துழைக்கும் கருத்திட்டங்களுக்காக ஐ.நா.அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினால் வழங்கப்பட்ட நிதி மானிய கணக்கீடு மற்றும் ஆள்சார் வேதனாதிகள் | 10,000,000 | 5,100,000 |
| 9 | நிர்வாக மேன்முறையீட்டு நியாயசபை | ஆள்சார் வேதனாதிகள் | 1,760,000 | - |
| 10 | இலஞ்சம் அல்லது ஊழல்கள் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு | மூலதன சொத்துக்கள் கொள்வனவு மற்றும் வாடகை, உள்நாட்டு வரிகள் | 11,000,000 | 13,032,000 |
| 12 | தேசிய கல்வி ஆணைக்குழு | அரச ஊழியர்களுக்கான ஆதனக் கடன் வட்டி | 28,000 | - |
| 13 | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு | இலங்கையில் சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கான கருத்திட்டத்திற்கு ஐ.நா. அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினால் வழங்கப்பட்ட நிதி மானியத்தினை கணக்கீடு செய்தல் மற்றும் கிளிநொச்சி, புத்தளம், மன்னார் மாவட்டங்களில் மீள் குடியேற்ற வாசிகள் தமது உரிமைகளை பெற்றுக்கொள்வதற்கான கருத்திட்டத்திற்கு ஐ.நா.அகதிகளுக்கான ஆணைக்குழுவினால் மாற்றப்பட்ட நிதியினைப் பயன்படுத்தல். | - | 5,940,000 |
| 18 | பாராளுமன்ற பிரதம கொறடாவின் அலுவலகம் | வெளிநாட்டுப் பிரயாணச் செலவினம் | 600,000 | - |
| 22 | நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம் | கட்டிடம் மற்றும் கட்டமைப்புப் பராமரிப்பு | 157,000 | - |

| | | | | |
|---|---|---|---|---|
| 23 | கணக்காய்வு சேவை ஆணைக்குழு | பிரயாணச் செலவினம் | 1,000,000 | - |
| 24 | தேசிய கொள்வனவு ஆணைக்குழு | அரசாங்க ஊழியர்களுக்கான ஆதனக்கடன் வட்டி | 100,000 | - |
| 25 | மீள் எல்லை நிர்ணய ஆணைக்குழு | ஆள்சார் வேதனாதிகள் | 2,650,000 | - |
| | | | | |
| 101 | புத்தசாசன அமைச்சு | வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக புவிச்சரிதவியல் பெறுமானமுடைய புரண ரஜமஹ விகாரையினை புதுப்பித்தல் மற்றும் புனரமைத்தல், நிலுவைக் கொடுப்பனவுகளைத் தீர்த்தல் | - | 272,309,000 |
| 201 | பௌத்த அலுவல்கள் திணைக்களம் | தஹமிதிரிய கொடுப்பனவுகள் மற்றும் தம்ம பாடசாலை ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு, சீருடைகள் மற்றும் பாடசாலை பாடப் புத்தகங்களை அச்சிடுதல் | 834,220,000 | - |
| | | | | |
| 102 | நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு | வசந்தம் தொலைக்காட்சியின் சேவைகளை மேம்படுத்தல், தனியார் மற்றும் அரச பங்களிப்பு அலகுகளின் செயற்பாடு, வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக இட்மிஸ் நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்தல் மற்றும் இலங்கை ரூபவாஹிக் கூட்டுத்தாபனத்திற்கான செலவினம் | 480,000,000 | 580,000,000 |
| 240 | தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம் | யூலை வேலை நிறுத்தற் காரர்களுக்கான மொத்தக் கொடுப்பனவுகளைச் செயற்படுத்தல் | 60,000,000 | - |
| 241 | அரச முயற்சிகள் திணைக்களம் | வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக இலங்கை வங்கிக்கான மூலதன உள்ளீடு | - | 5,000,000,000 |
| 243 | அபிவிருத்தி நிதி திணைக்களம் | பெண் தொழில் முயற்சியாளர்களுக்கான உதவுதொகை, மாற்றுத் திறனாளிகளுக்கான கடன் திட்டத்தினை அறிமுகம் செய்தல், ஹோம்ஸ்ரே நிகழ்ச்சித்திட்டத்திற்கான வட்டி மானியம், நடுத்தர வருமானம் பெறும் வீட்டுக் கொள்வனவாளர்களுக்கு தேசிய சேமிப்பு வங்கியினால் குறைந்த வட்டிக் கடன் திட்டம் 3 புதிய களஞ்சியசாலைகள் நிர்மாணம் மற்றும் தற்பொழுது காணப்படும் களஞ்சியசாலைகளைத் தரமுயர்த்தல், சிறிய மற்றும் நடுத்தர உத்தரவாத நிதியத்தினை தாபித்தல், வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக ''என்ரபிறைஸ் ஸ்ரீலங்கா'' முன்னெடுப்பு, ஊடகவியலாளர் மற்றும் கலைஞர்களுக்கான வட்டி மானிய கடன் திட்டம், உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின் ஊடாக சிரேட்ட பிரசைகளின் நிலையான வைப்புகளுக்கான வட்டி மானியத்தினை வழங்குதல், உள்நாட்டு பால்மா உற்பத்தியாளர்களுக்கான விலை மானியம் | 20,575,000,000 | 1,050,000,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| 245 | அரச நிதி திணைக்களம் | வெளிநாட்டு உதவி கணக்கீடு மற்றும் மூலதனச் சொத்துக்கள் கொள்வனவு, புனரமைப்பு, மேம்பாட்டுக்கான ஏற்பாடு மற்றும் யுஎஸ்எயிட் கருத்திட்டத்தின் பெறுமதி சேர் வரி மற்றும் தேசக் கட்டுமான வரியினை அமுல்படுத்துதல் | - | 118,718,800 |
| 246 | இறைவரித் திணைக்களம் | வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக ராமிஸ் கருத்திட்டத்தினை செயற்படுத்தல் | - | 500,000,000 |
| 248 | மதுவரித் திணைக்களம் | வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக சுங்க வருமான முகாமைத்துவ முறைமையினை செயற்படுத்தல் | - | 50,000,000 |
| | | | | |
| 103 | பாதுகாப்பு அமைச்சு | வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக ஐ.நா.அமைதிகாக்கும் பணியில் இலங்கை இராணுவத்திற்கான பயிற்சி மற்றும் அபிவிருத்தி, சமுத்திர பாதுகாப்பு உள்ளடங்களாக மேம்பாட்டு கருத்திட்டத்தினை செயற்படுத்தல். | - | 3,415,226,000 |
| 222 | இலங்கை இராணுவம் | ஐ.நா.சமாதான தொழிற்பாட்டு ஏற்பாடுகள் | - | 1,510,000,000 |
| 224 | இலங்கை விமானப் படை | ஐ.நா.அமைதிகாக்கும் பணிக்கருத்திட்டத்திற்கான ஏற்பாடுகள் மற்றும் இரண்டு அம்புயுலஸ்கள் கொள்வனவு | - | 127,400,000 |
| | | | | |
| 104 | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு | ஓய்வூதியம் பெறுநர்களுக்கான அக்ரஹார காப்புறுதித் திட்டம், “ஊழிய தயார்படுத்துகை நிதியத்தினை” தாபித்தல், இளைஞர் படையினால் நடத்தப்பட்ட திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கான ஒத்துழைப்பு, ஜேர்மன் தொழில்நுட்ப பாடசாலையுடன் இணைந்து 5 தொழில்நுட்பக் கல்லூரிகளை தாபித்தல். நிலுவைக் கொடுப்பனவுகளைச் செலுத்துதல், உயர் கல்விக்கான நிலையமொன்றினைத் தாபித்தல். | 50,000,000 | 4,363,788,000 |
| 237 | தேசிய திட்டமிடல் திணைக்களம் | நிகழ்ச்சித்திட்ட அடிப்படையிலான கருத்திட்ட தயார்படுத்தல் வசதி கருத்திட்டத்தினை தாபித்தல் | - | 102,000,000 |
| 252 | சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியற் திணைக்களம் | தேசிய ஆய்வு கருத்திட்டத்திற்கான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சாதனங்களை செயற்படுத்தல் | - | 4,291,000 |
| | | | | |
| 106 | அனர்த்த முகாமைத்துவ அமைச்சு | வெள்ளம் மற்றும் மண்சரிவினால் பாதிக்கப்பட்ட பாதைப் புனரமைப்பு, ஒவ்வொரு மாவட்டச் செயலகத்திற்கும் ரூபா 1 மில்லியன் ஒதுக்கீடு, நிலுவை கொடுப்பனவுகளைத் தீர்த்தல், வறட்சியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணம், மீத்தோட்ட முல்ல நிகழ்வினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நட்டஈடு | 3,688,190,000 | 1,020,000,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| 304 | வளிமண்டலவியற் திணைக்களம் | வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக வளிமண்டலவியற் திணைக்களத்தினை தரமுயர்த்தல் | - | 200,000,000 |
| 108 | தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு | வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக புவிச்சரிதவியல் பெறுமானமுடைய புராண ரஜமஹ விகாரை மற்றும் ஏனைய வணக்கஸ்தலங்களை புதுப்பித்தலும் புனர் நிர்மாணம் செய்தலும், மூலதனச் சொத்துக்களின் மேம்பாடு | - | 24,970,000 |
| 202 | முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் | தெஹமிதிரிய நிகழ்ச்சித்திட்டத்தினை செயற்படுத்தல், தம்ம பாடசாலை ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள், தம்ம பாடசாலை பாடப் புத்தகங்கள் அச்சிடுதல், சீருடைகள் மற்றும் மின்சாரம், நீர் சேவைகளுக்கான கொடுப்பனவுகள் | 35,200,000 | - |
| 110 | நீதி அமைச்சு | நீதியினை அடைந்து கொள்வதற்கான கருத்திட்டத்திற்கு ஐ.நா.அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து நிதி மாற்றல் மற்றும் இலங்கையில் பாதிக்கப்பட்ட மற்றும் சான்றுகளை பாதுகாத்தல் | - | 21,660,500 |
| 205 | பொது நம்பிக்கை பொறுப்புகள் திணைக்களம் | மூலதனச் சொத்துக்கள் பராமரிப்பு மற்றும் மேம்பாட்டுக்கான ஏற்பாடு | - | 2,000,000 |
| 228 | நீதிமன்ற நிர்வாகம் | செவிப்புல மற்றும் கட்புல சாதனங்களுடன் விசேட மேல் நீதி மன்றம் ஒன்றினை தாபித்தல், தன்னியக்க வழக்கு முகாமைத்துவ முறைமையொன்றினை அறிமுகம் செய்தல் தொடர்புடைய நீதி மன்றத்தில் ஆரம்ப முறைப்பாடுகளுக்கான இலத்திரனியல் கோவைப்படுத்தல் சாத்தியப்பாட்டினை கண்டறிதல், மண்சரிவினால் பாதிக்கப்பட்ட இரத்தினபுரி மற்றும் வெலிமட நீதி மன்றங்களை இடம் மாற்றுதல், கிளிநொச்சி, தெல்தெனிய, பூகொட மற்றும் கந்தளாய் நீதி மன்றங்களை விரிவாக்குதல் | - | 975,000,000 |
| 229 | சட்டமா அதிபர் திணைக்களம் | ஆள்சார் வேதனாதிகளுக்கான ஏற்பாடு | 400,000,000 | - |
| 233 | அரசாங்க பகுப்பாய்வுத் திணைக்களம் | ஏனைய வளங்கள்களுக்கான ஏற்பாடு | 20,000,000 | - |
| 234 | உயர்நீதிமன்ற பதிவாளர் | மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பிரதி பண்ணல் மற்றும் மொழிபெயர்ப்பு பிரிவின் செலவினம் | 6,026,000 | - |

| | | | | |
|---|---|---|---|---|
| 111 | சுகாதாரம் போசாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு | தாதி பயிற்சி நிறுவனத்தில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு, சுவசரிய முன்னெடுப்பினை வலுப்படுத்தல், கொழும்பு, கண்டி, அநுராதபுரத்தில் 3 உயர் விசேட மகப்பேறியல் அலகுகளைத் தாபித்தல், மட்டக்களப்பு, இரத்தினபுரி வைத்தியசாலைகளில் புற்றுநோய் நிலையங்களை தாபித்தல், மகளிர்களுக்கான காசல்வீதி வைத்தியசாலையை இனப்பெருக்க சிகிச்சை நிலையத்தினை தாபித்தல், பொலநறுவை வைத்தியசாலையில் பிரசவ மற்றும் குழந்தைப் பேறு கட்டிடத்தினை நிர்மாணித்தல், மொரட்டுவ பிரதேச வைத்தியசாலையினை விரிவாக்குதல், தெனியாய மற்றம் பேருவளை ஆதார வைத்தியசாலை, மாத்தறை புதிய மாவட்ட வைத்தியசாலையினை அபிவிருத்தி செய்தல், மகரகம பல்வைத்திய நிறுவகத்தினை வலுவூட்டல், தொற்றாத நோய்களின் ஆபத்து தொடர்பான சுகாதார கல்விப் பணியகத்தின் செயற்பாடுகளை வலுப்படுத்தல், உணவு, சுகாதார மற்றம் உணவுப் பாதுகாப்பு முறைமையினை விருத்தி செய்தல், மனநோய் மற்றும் நரம்பியல் சுகாதாரத்தினை வலுப்படுத்தல், தேசிய சுகாதார மற்றும் இணைந்த ஆராய்ச்சியினை வலுப்படுத்தல், எச்ஐவி, எயிட்ஸ் மற்றும் பாலியல் ரீதியான நோய்களுக்கான விசேட அலகு அநுராதபுரம், பொலநறுவை, யாழ்ப்பாணத்தில் வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக ஈஎஸ்டபிளியு எல் இயந்திரங்களை வழங்குதல், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வலிப்பு நோய்ப்பிரிவில் மூலதனச் சொத்துக்கள் கொள்வனவு | - | 2,267,000,000 |
| 112 | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு | கண்டங்களுக்கிடையிலான பேச்சுவார்த்தைகளுக்கான செயலகமொன்றினை தாபித்தல், வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக 70 ஆவது சுதந்திரத்தினைக் கொண்டாடுவதற்கு வெளிநாட்டு தூதரகத்திற்கு ஒத்துழைப்பு வழங்குதல், நியுயோக் மற்றும் பிரசீலியாவிலுள்ள கட்டிடங்களின் உரிமையினை வெளிநாட்டலுவல்கள் அமைச்சுக்கு மாற்றுதல், வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்களின் பயன்பாட்டுக்காக வாகனங்கள் கொள்வனவு | 75,000,000 | 819,449,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| 114 | போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சு | முச்சக்கரவண்டி ஒழுங்குபடுத்துகை ஆணைக்குழுவொன்றினைத் தாபித்தல், வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக இலங்கை போக்குவரத்துச் சபையின் பேரூந்து தொகுதியில் மின்சார பேரூந்துகளை அறிமுகம் செய்தல், பாடசாலை மற்றும் உயர்கல்விக்கான பருவச் சீட்டு நிகழ்ச்சித்திட்டத்தினை செயற்படுத்தல், இலாபமீட்டாத பாதைகளில் தொழிற்படுகின்ற பேரூந்துகளுக்கான இ.போ.சபை மானியம், இராணுவத்தினருக்கான பேரூந்து அனுமதிப்பத்திரம், வெளிநாட்டுப் பிரயாணம், இ.போ,சபையின் செலுத்தப்படாத ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்பினை செலுத்துதல் | 6,274,500,000 | 500,000,000 |
| 306 | இலங்கை புகையிரதத் திணைக்களம் | வடக்கு புகையிரதப் பாதையில் புகையிரத சமிஞ்ஞை மற்றும் தொடர்பாடல் முறைமையை நிர்மாணிப்பதற்கான கொடுப்பனவு, மதவாச்சி – மடு பாதையினை மாற்றீடு செய்தல் மற்றும் பளை – கேகேஎஸ் பாதை மாற்றுதல் புகையிரப்பாதை அபிவிருத்தி கருத்திட்டம், 9 டீசல் இயந்திரங்களை கொள்வனவு, 200 பயணிகள் பெட்டிகளை திருத்துதல் | - | 1,775,000,000 |
| 307 | மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் | கட்டிடங்கள் மற்றும் உட்கட்டமைப்புக்கான ஏற்பாடு | - | 32,000,000 |
| 117 | உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு | மத்திய அதிவேக பாதை கருத்திட்ட செயற்படுத்துகை, கிராமிய பாதை புனரமைப்பு நிகழ்ச்சித்திட்டம், அனைத்து பல்கலைக்கழக மாணவர்களுக்கான காப்புறுதித் திட்டம், சுதேச மருத்துவத்திற்கான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தினை தாபித்தல், வயம்ப, சப்பிரகமுவ மற்றும் மொரட்டுவ பல்கலைக்கழகங்களில் மருத்துவ பீடங்களை தாபித்தல், கராப்பிட்டிய வைத்தியசாலையில் பேராசிரியர் அலகொன்றினை தாபித்தல், றுகுணு பல்கலைக்கழகத்தில் கடற்படை மற்றும் கப்பற்றொழில் தொடர்பான கற்கை நிலையமொன்றினைத் தாபித்தல், உயர் கல்விக்கான சுதந்திர தர கட்டுப்பாடு மற்றும் சான்றுப்படுத்தல் முறைமையினை தாபித்தல், கொழும்பு பல்கலைக்கழகத்தில் விவசாய தொழில்நுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவனத்திற்கான ஒத்துழைப்பு, உணவு தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையமொன்றினை வயம்ப பல்கலைக்கழகத்தில் தாபித்தல், மஹாப்பொல புலமைப் பரிசிலுக்கான தகைமை பெறும் வருமான எல்லையினை ரூபா 300,000 திலிருந்து ரூபா 500,000 ஆக அதிகரித்தல், 7 புதிய தொழில்நுட்ப பீடங்களில் தொழில்நுட்பத்துறை பட்ட நிகழ்ச்சித்திட்டத்தினை | 175,000,000 | 35,860,000,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | விரிவாக்குதல், வயம்ப, சப்பிரகமுவ, மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடங்களை தாபித்தல், தரவு விஞ்ஞானம் மற்றும் நிபுணத்துவ கற்கைகள் மற்றும் வியாபார பகுப்பாய்வு போன்ற பாரிய தரவு பகுப்பாய்வுத் புதிய துறைகளுக்கான ஒத்துழைப்பு, வவுனியா வளாகத்தில் சகல வசதிகளையும் கொண்ட நூலக வசதி மற்றும் தகவல் தொழில்நுட்ப நிலையத்தினை உருவாக்குதல், வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக உயர் பாடசாலைகளின் சமவாயத்தின் தரப்படுத்தலினைப் பெறுவதற்காக ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடத்திற்கான ஒத்துழைப்பு 2017 ஆம் ஆண்டுடன் தொடர்பான கருத்திட்ட பொறுப்பு நிலுவையினை தாபித்தல், 84 விடுதிக் கட்டிடங்களை நிர்மாணித்தல், பல்கலைக்கழக மாணவர்களுக்கான மடி கணனி மற்றும் வைபை வசதிகளுக்கான வட்டி சலுகை, றுகுணு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திற்கான 10 மாடிக் கட்டிடம், பல்கலைக்கழக மாணவர்களை வெளிக்கள செயற்பாடுகளில் ஈடுபடுத்துதல் | | |
| 214 | பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு | 2017ஆம் ஆண்டுடன் தொடர்பான நிலுவைகளை தீர்த்தல் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான மஹாபொல, மாணவர் உதவி நிகழ்ச்சித்திட்டத்தினை செயற்படுத்தல் | 1,750,000,000 | 3,254,000,000 |
| 118 | விவசாய அமைச்சு | சூழல் சான்றுப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தினை அறிமுகப்படுத்தல், 1500 சிறிய குளங்களை புதுப்பித்தல், புனரமைத்தல் மற்றும் சேறகற்றல், விவசாயிகளுக்கான காப்புறுதி திட்டத்தினை அறிமுகம் செய்தல், ஹொரண மற்றும் மாகந்துர ஆராய்ச்சி நிலையங்களில் உயர் விளைச்சலைத் தரும் வாழை மற்றும் அண்ணாசி நாற்றுக்களை உருவாக்குவது தொடர்பாக ஆராய்ச்சி, தேசிய நோய்க் கட்டுப்பாட்டு நிலையத்தில் பரிசோதனை வசதியினை தரமுயர்த்தல், உர மானிய நிகழ்ச்சித்திட்டம், அபிவிருத்தி மானியங்கள், 2017 தொடர்பான கருத்திட்ட நிலுவைகளை செலுத்துதல், யபபான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தினால் நிதி அளிக்கப்பட்ட யுயுசுனுழு இனால் வழங்கப்பட்ட மானியத்திற்கான கணக்கீடு | 11,829,000,000 | 5,638,871,640 |

| | | | | |
|---|---|---|---|---|
| 281 | கமத்தொழில் அபிவிருத்தி திணைக்களம் | 2017 தொடர்பான பொறுப்பு நிலுவைகளை தீர்த்தல் | - | 612,793,701 |
| 285 | விவசாய திணைக்களம் | 2017 தொடர்பான கருத்திட்ட பொறுப்பு நிலுவைகளை தீர்த்தல் மற்றும் அறுவடைக்கு பின்னரான முகாமைத்துவ செலவினம் மற்றும் இலங்கையின் பழங்களுக்கான பெறுமதி சேர்ப்பு | - | 193,086,837 |
| | | | | |
| 119 | மின்வலு மற்றும் புதுப்பிக்கக்கூடிய சக்தி அமைச்சு | 2017 நிலுவைக் கொடுப்பனவுகளைத் தீர்த்தல், உலக ஆபத்து குறைவு முன்னெடுப்பு நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து உதவிப் பயன்பாடு மற்றும் தூய சக்தி மற்றும்' வலையமைப்பு வினைத்திறன் மேம்பாட்டுக் கருத்திட்டம் | - | 231,100,000 |
| | | | | |
| 120 | மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு | சிறுவர் குற்றவாளிகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களை எடுத்துச் செல்வதற்கான வாகனங்கள் கொள்வனவு, வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக அரசாங்கத்தில் சிறுவர் பராமரிப்பு நிலையங்களை தாபித்தல், கர்ப்பிணித் தாய்மார்களுக்கான போசாக்கு உணவு, முன்பள்ளி சிறுவர்களுக்கான காலை உணவு, முன்பள்ளி ஆசிரியர்களுக்கான லமாதிரிய கொடுப்பனவுகள், ஐ.நா. அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் சிறுவர் நிதியம் என்பவற்றினால் வழங்கப்பட்ட உதவு தொகையான கணக்கீடு, அவசர நிவாரண பொதிகளுக்கான நிலுவைகளை தீர்த்தல் | 5,816,080,000 | 103,763,453 |
| 217 | நன் நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் | வெளிநாட்டுப் பிரயானம் | 750,000 | - |
| | | | | |
| 121 | உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு | வெள்ளம் மற்றும் மண்சரிவு அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட உதவி கருத்திட்ட செலவினம், அபிவிருத்தி கருத்திட்டங்களின் நிலுவைப் பணிகளை நிறைவு செய்தல், 1000 சேவாபியச நிலையங்களை நிர்மாணித்தல் நிலுவைக் கொடுப்பனவுகள், அபிவிருத்தி கருத்திட்டங்கள் தொடர்பான செலவினங்களை செலுத்துதல். | - | 1,131,473,000 |
| 254 | பதிவாளர் நாயகம் திணைக்களம் | 2017 உடன் தொடர்பான மூலதன சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான நிலுவைகளை செலுத்துதல் | - | 21,270,000 |
| 257 | மாவட்டச் செயலகம்இ களுத்துறை | 2017 மே மாத அனர்த்தம் காரணமாக புனரமைப்பு பணிகள் தொடர்பான கொடுப்பனவுகளைத் தீர்த்தல் | - | 390,127,000 |
| 261 | மாவட்டச் செயலகம்இ காலி | 2017 மே மாத அனர்த்தம் காரணமாக புனரமைப்பு பணிகள் தொடர்பான கொடுப்பனவுகளைத் தீர்த்தல் | - | 201,860,000 |
| 262 | மாவட்டச் செயலகம்இ மாத்தறை | நில்வள நகர அபிவிருத்தி கருத்திட்டத்தின் கொடுப்பனவு | - | 364,388,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நிலுவைகளை செலுத்துதல் மற்றும் 2017 மே மாத அனர்த்தம் காரணமாக புனரமைப்பு பணிகள் தொடர்பான கொடுப்பனவுகளைத் தீர்த்தல் | | |
| 263 | மாவட்டச் செயலகம்இ ஹம்பாந்தோட்டை | 2017 மே மாத அனர்த்தம் காரணமாக புனரமைப்பு பணிகள் தொடர்பான கொடுப்பனவுகளைத் தீர்த்தல் | - | 109,810,000 |
| 272 | மாவட்டச் செயலகம்இ குருநாகல் | சுத்திகரிப்பு மற்றும் பாதுகாப்பு சேவைகளுக்கான ஏற்பாடு | 26,800,000 | - |
| 278 | மாவட்டச் செயலகம்இ இரத்தினபுரி | 2017 மே மாத அனர்த்தம் காரணமாக புனரமைப்பு பணிகள் தொடர்பான கொடுப்பனவுகளைத் தீர்த்தல் | - | 278,920,000 |
| 279 | மாவட்டச் செயலகம்இ கேகாலை | 2017 மே மாத அனர்த்தம் காரணமாக புனரமைப்பு பணிகள் தொடர்பான கொடுப்பனவுகளைத் தீர்த்தல் | - | 1,460,000 |
| | | | | |
| 122 | காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு | ஐ.நா.ஹபிராட் கருத்திட்டத்திற்காக பெறப்பட்ட உதவியினைப் பயன்படுத்தல் | - | 11,700,000 |
| 327 | காணி பயன்பாட்டு கொள்கை திட்டமிடல் திணைக்களம் | கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்பு செலவினம் | - | 1,500,000 |
| | | | | |
| 123 | வீடமைப்பு மற்றும் புனரமைப்பு அமைச்சு | வீட்டு உடமையாளர் முன்னெடுக்கும் வீடமைப்பு திட்டம் மற்றும் வரவு செலவுத்திட்ட முன்னெடுப்பு தொடர்பான கிராமிய துறையில் காணப்படும் வீடுகளை மேம்படுத்துவதற்கான ஒத்துழைப்பு மற்றும் காணி சுவீகரிப்புக்கான நட்டஈடு | - | 822,000,000 |
| | | | | |
| 124 | சமூக வலுவூட்டுகை நலன்புரி மற்றும் கண்டிய மரபுரிமை | குறை வருமானமுடைய அங்கவீனமுற்றவர்களுக்கான ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டத்தினை செயற்படுத்தல், 70 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களுக்கான நிதி ஒத்துழைப்பு, சிறுநீரக நோயாளர்களுக்கான நிதி ஒத்துழைப்பு, கண்டிய மரபுரிமைகளுக்கான நியதிச் சட்ட சபையினை அல்லது அதிகார சபையினை தாபித்தல் | 12,449,980,000 | 20,000,000 |
| 331 | தெவிநெகும அபிவிருத்தி திணைக்களம் | சமுர்த்தி நிவாரண உதவி நிகழ்ச்சித்திட்டத்திற்கான செலவினம் | 19,800,000,000 | - |
| 126 | கல்வி அமைச்சு | "ஜஸுயு நிகழ்ச்சித்திட்டத்தினை அறிமுகப்படுத்தல், தேசிய கல்விக் கல்லூரி மாணவர்களுக்கான மாதாந்த கொடுப்பனவுகளை 5000 ரூபாவாக அதிகரித்தல், கல்வி மறுசீரமைப்பு, "ஸ்மாட் வகுப்பறை" எண்ணக்கருவினை வலுப்படுத்தல் இலத்திரனியல் பாடப்புத்தகத்தினை உருவாக்குதல் மற்றும் டிஜிற்றல் | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மயப்படுத்தல், மகரகம கல்விக்கல்லூரிகளில் ஆங்கில மொழியில் ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கான விசேட நிலையங்களை தாபித்தல், ஹப்பிற்றிகமயில் விசேட தேவையுடையவர்களுக்கான பயிற்சி வசதிகளை வழங்குதல், வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக கலைஞர்களுக்கான விபத்து மற்றும் மருத்துவ காப்புறுதி ‘‘சுபஹக’’ புலமைப் பரிசில் திட்டத்தின்கீழ் ஆண்டு 5 புலமைப்பரிசில்களை செயற்படுத்தல். | 479,900,000 | 2,582,000,000 |
| 207 | தொல்பொருளியல் திணைக்களம் | வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக ரிதிகல மற்றும் ராஜகலதென்ன தொல்பொருளியல் இடங்களை பாதுகாப்பு மற்றும் அதற்கான ஏற்பாடுகள் | - | 25,000,000 |
| 212 | பரீட்சை திணைக்களம் | அச்சு இயந்திரங்கள் கொள்வனவு | | 50,000,000 |
| 130 | பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சு | தேசிய திரைப்பட கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பின் மூலம் வழங்கப்பட்ட ஓய்வூதியக் கொடுப்பனவுகளை அதிகரித்தல் மற்றும் 2017 இற்கான நிலுவைக் கொடுப்பனவுகளை தீர்த்தல் | 10,000,000 | 10,000,000 |
| 135 | பெருந்தோட்ட கைத்தொழில்கள் அமைச்சு | உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கு சிறிய பற்றுநில தேயிலை செய்கையாளர்களுக்கான உதவியினை வலுப்படுத்தல், இன களப்பு தென்கு விதைகளை உருவாக்குவதற்கு தெங்கு ஆராய்ச்சி நிறுவகத்திற்கான ஒத்துழைப்பு, இறப்பர் பயிருக்கான திட்டத்தினை வரைதல், தேயிலை இறப்பர் மற்றும் தெங்குத் துறையில் சிறிய செய்கையாளர்களுக்கான உரமானியம் | 1,500,000,000 | 325,000,000 |
| 136 | விளையாட்டுத்துறை அமைச்சு | மனித செயலாற்றுகை ஆய்வு கூடத்தினை செயற்படுத்தல், சுகந்ததாச உள்ளக விளையாட்டரங்கினை நவீன மயப்படுத்தல் மற்றும் அவற்றினை தனியார் அரச பங்களிப்பாக முகாமை செய்தல், சுதந்ததாச வெளியக விளையாட்டரங்கினை தரமுயர்த்தல், போதைப் பாவணைக் கெதிரான தேசிய விழிப்புணர்வு நிகழ்சித்திட்டம் மற்றும் போதைப் பரிசோதனை மற்றும் ஆராய்ச்சி ஆய்வு கூடத்தினை தாபித்தல், நாடு | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முழுவதிலும் நூறு கிராமிய மைதானங்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் விளையாட்டு சமுதாயத்திற்கான வசதியளிப்பு, விளையாட்டு பாடசாலையொன்றினை உருவாக்குதல், 2020 இல் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளுக்கான விளையாட்டு தொகுதியொன்றினை தயார்படுத்தல் மற்றும் விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் | - | 2,383,000,000 |
| 219 | விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களம் | படைவீரர்கள் மற்றும் மாற்றுத் திறனாளி விளையாட்டு வீரர்களின் பங்களிப்புக்கு உதவுதல், மாவட்ட மற்றும் மாகாண மட்ட விளையாட்டு அரங்குகளை தரமுயர்த்தல், வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக மாத்தளை கொக்கி மைதானத்தினை புனரமைத்தல் | 50,000,000 | 400,000,000 |
| 145 | சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சர் | முன்னைய போராளிகள் மற்றும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட விதவைகளுக்கான ஆற்றல் மேம்பாடு மற்றும் சம்பள ஊக்குவிப்பு, தொல்பொருள் பெறுமதியுடைய புனர ரஜமஹா விகாரைகள் புனரமைப்பு மற்றும் புதுப்பித்தல், மாற்றுத் திறனாளி பெண்களுக்கான தேவைகளை நிவர்த்தி செய்வதற்கான விசேட நிகழ்ச்சித்திட்டம், வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக தெரிவு செய்யப்பட்ட சிறிய கைத்தொழிலாளர்களுக்கு உதவுதல், கடன் சுமையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குதல், வாகனங்களுக்கான வாடகை போதைப்பொருட்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான புனர்வாழ்வளிப்பு நிலையத்தினை தாபித்தல், மீள்குடியேற்ற நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கான கருத்திட்டம் தொடர்பான நிலுவைகளை தீர்த்தல் | 255,865,000 | 3,076,600,000 |
| 148 | பிராந்திய அபிவிருத்தி அமைச்சு | | | |
| 280 | கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களம் | பிரயாணச் செலவினத்திற்கான ஏற்பாடு | 1,000,000 | |
| 149 | கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சு | புலமைச் சொத்து அலுவலகத்தினை புனரமைத்தல், றோபோ மற்றும் பொதுக் கண்டுபிடிப்பு விடயங்களுக்கான ஒத்துழைப்பு நிலையத்தினை வலுப்படுத்தல் சிறிய மற்றம் நடுத்தர தொழில் முயற்சி பொலித்தீன் உற்பத்தியாளர்களினால் உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களுக்கான முதலீட்டுச் செலவினத்தில் 50 சதவீதத்தினை | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வழங்குதல், அச்சுவேலி கைத்தொழில் பேட்டைக்கான | | |
| | | வசதிகளை தரமுயர்த்தல், சிங்கள மற்றும் முஸ்லிம் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களை மீள் குடியேற்றல், மன்னார் நகர புனரமைப்பு பணிகளை துரிதப்படுத்தல் மற்றும் சிலாபத்துறை நகர அபிவிருத்தி, உள்நாட்டு தகரத்தில் அடைத்த மீன் உற்பத்தியினை ஊக்குவிப்பதற்கான கருத்திட்டத்தினை செயற்படுத்தல், ஆள்சார் வேதனாதிகள், கூட்டுறவு சங்கங்களை வலுப்படுத்துவதற்கான கருத்திட்டம், லங்கா சதோச சில்லறை விற்பனையினை விரிவாக்கல் தேவையான உட்கட்டமைப்பு மற்றும் தொழில் முயற்சி வசதியினை வழங்குதல், கைத்தொழில் பேட்டைகளை தரமுயர்த்தல், றோபோ உபகரணங்களுக்கான விசேட நிலையம் மற்றும் பாரிய காட்சியறை யொன்றினை தாபித்தல், வர்த்தக ஊக்குவிப்பு நடவடிக்கைகள், ஆடைத்தொழிற்சாலைகளைக் கொண்ட சிறிய தொழிற்சாலைகள் மூலம் மகளிர் பொருளாதார வலுவூட்டல் கருத்திட்டம், கைத்தறி கைத்தொழில் தொழில்பயிற்சி மற்றும் தேவையான உட்கட்டமைப்பு வசதி, லக்சதொச மற்றும் ஒசுசல விற்பனை நிலையங்களை விரிவாக்குதல் | 212,067,360 | 3,233,010,000 |
| 300 | உணவு ஆணையாளர் திணைக்களம் | தற்பொழுது காணப்படும் அரிசி ஆலைகளை புதுப்பிப்பதற்கான செலவினம் | - | 25,000,000 |
| 151 | கடற்றொழில் நீரியல் வளங்கல் ' அபிவிருத்தி அமைச்சு | மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் நங்கூறத் தளங்களை அபிவிருத்தி செய்தலும் தரமுயர்த்தலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் நீரியல் கைத்தொழில் பேட்டையொன்றினைத் தாபித்தல், 10 களப்புகளை சுத்தப்படுத்தல், கந்தர மீன்பிடித் துறைமுகத்தினை அபிவிருத்தி செய்தல் வெள்ளமங்கரவில் புதிய மீன்பிடித் துறைமுகம் ஒன்றினை உருவாக்குதல், பால் மீன் உற்பத்தி நிலையமொன்றினை உருவாக்குதல், அலங்கார மீன் உற்பத்தி நிலையம், நீரியல் வள ஆய்வுக்கான தேசிய நிறுவனத்தில் பரிசோதனை வசதிகளை தரமுயர்த்தல், மயிலிட்டி துறைமுகத்தினை புதிய மீன்பிடி துறைமுகமாக அபிவீருத்தி செய்தல், குளியறைகள் மற்றும் களஞ்சிய வசதிகளை உருவாக்குதல், புதிய கடற்றொழில் மற்றும் நீரியல் வளக் கொள்கையினை உருவாக்குதல், நீரியல் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் பரிசோதனை | 100,000,000 | 1,800,100,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வசதிகளை தரமுயர்த்தல் மீன் சலுகை விலையில் விற்பனை செய்வதற்கான விலை மானியம் | | |
| 290 | கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் | 55 அடி நீளமான பல்நாள் படகுகள் கொள்வனவுகள், வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக பல்நாள் படகுகளின் தொழிற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்தும் செலவினத்தின் 50 சதவீதத்தினை வழங்குதல். | - | 418,000,000 |
| 154 | கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சு | மூலதன சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான செலவினம், நெற் கொள்வனவு, 2017 இல் கருத்திட்டங்களுடன் தொடர்பான நிலுவைக் கொடுப்பனவுகளைத் தீர்த்தல் | 500,000,000 | 45,000,000 |
| 155 | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு | திண்மக்கழிவு விடயங்களில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான ஒத்:துழைப்பு, கிராமிய பாதை வலையமைப்பு மேம்பாடு, இலத்திரனியல் உள்ளூராட்சி மன்ற பிரயோக முறைமையொன்றினை அறிமுகம் செய்தல், யாத்திரிகர் மடங்களை தாபித்தல், உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களை வலுப்படுதல், வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக "அம்மாச்சி" எண்ணக்கருவினை செயற்படுத்தல், கொழும்பு மாநகர சபைக்கான ஒப்பந்த கொடுப்பனவு நிலுவைகளைச் செலுத்துதல், 100 உள்ளூராட்சி மன்றங்களில் முன்னரங்கு அலுவல்களை செயற்படுத்துவதற்கான நிலுவைக் கொடுப்பனவு, மாகாண சபைகளுக்கான பங்களிப்பு, மீரிகம "செத்செவன" அரசாங்க முதியோர் இல்லத்தினை புதுப்பித்தல், கிழக்கு மாகாணத்தில் வடிகாலமைப்பு முறைமையினை செயற்படுத்தல், வடகிழக்கு உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டு கருத்திட்டத்தினை நிறைவு செய்தல், புதிதாக நியமிக்கப்பட்ட இராஜாங்க அமைச்சருகான செலவினம் | 40,842,000 | 1,352,353,000 |
| 312 | மேல் மாகாண சபை | அறிவு மையத்தின் அடித்தளமாக பாடசாலை கல்வியினை மாற்றுவதற்கான ஏற்பாடு | - | 21,000,000 |
| 313 | மத்திய மாகாண சபை | அறிவு மையத்தின் அடித்தளமாக பாடசாலை கல்வியினை மாற்றுவதற்கான ஏற்பாடு | - | 23,000,000 |
| 314 | தென் மாகாண சபை | அறிவு மையத்தின் அடித்தளமாக பாடசாலை கல்வியினை மாற்றுவதற்கான ஏற்பாடு | - | 23,000,000 |
| 315 | வட மாகாண சபை | வடக்குப் பாதை இணைப்பு கருத்திட்ட ஏற்பாடு, யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர் வளங்கள் மற்றும் துப்பரவேற்பாட்டு கருத்திட்டத்தினை விரிவாக்குவதற்கான நிதியினை பயன்படுத்தல். அறிவு மையத்தின் அடித்தளமாக பாடசாலை கல்வியினை மாற்றுவதற்கான ஏற்பாடு | - | 449,250,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| 316 | வடமேல் மாகாண சபை | அறிவு மையத்தின் அடித்தளமாக பாடசாலை கல்வியினை மாற்றுவதற்கான ஏற்பாடு | - | 22,000,000 |
| 317 | வடமத்திய மாகாண சபை | அறிவு மையத்தின் அடித்தளமாக பாடசாலை கல்வியினை மாற்றுவதற்கான ஏற்பாடு | - | 25,000,000 |
| 318 | ஊவா மாகாண சபை | அறிவு மையத்தின் அடித்தளமாக பாடசாலை கல்வியினை மாற்றுவதற்கான ஏற்பாடு மற்றும் ஊவா மாகாணத்தில் விவசாய பாதைகள் மற்றும் சிறிய நீர்ப்பாசன திட்டங்களை புனரமைத்தல் | - | 124,000,000 |
| 319 | சப்பிரகமுவ மாகாண சபை | அறிவு மையத்தின் அடித்தளமாக பாடசாலை கல்வியினை மாற்றுவதற்கான ஏற்பாடு | - | 22,000,000 |
| 321 | கிழக்கு மாகாண சபை | அறிவு மையத்தின் அடித்தளமாக பாடசாலை கல்வியினை மாற்றுவதற்கான ஏற்பாடு | - | 22,000,000 |
| 157 | தேசிய கலந்துரையாடல்கள் அமைச்சு | அரச கரும மொழிக் கொள்கையினைச் செயற்படுத்தல், தேசிய ஒருங்கிணைப்பு, மொழியாற்றல் மற்றும் மொழிபெயர்ப்புகளை மேம்படுத்தல், தொழிற்பாட்டு குத்தகை முறைமையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களுக்கான வட்டி வாடகை | 1,800,000 | 200,000,000 |
| 158 | பொது தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு | மக்கள் தோட்ட அபிவித்தி சபை, இலங்கை அரச பெருந்தொட்டக் கூட்டுத் தாபனம் மற்றும் எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனி, சம்பள மற்றும் கூலிகள் கொடுப்பனவு | - | 240,000,000 |
| 159 | சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு | 6 கோட்டைகள் அபிவிருத்தி, புகையிரத நிலையங்கள் தரமுயர்த்தல், தொல்பொருளியல் இடங்களை பிரகடனம் செய்தல், வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக சுற்றுலா பயணிகளுக்கான டுக்டுக் நிகழ்ச்சித்திட்டத்தினை செயற்படுத்தல் | - | 375,000,000 |
| 203 | கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு | தம்ம பாடசாலை ஆசிரியர்களுக்கான சீருடை மற்றும் நூல்நிலையக் கொடுப்பனவு, தெஹமிதிரிய நிகழ்ச்சித்திட்டம் மற்றும் தொல்பொருளியல் பெறுமதியுடைய வணக்கஸ் தளங்களை புனரமைத்தல் மற்றும் புதுப்பித்தல் | 103,500,000 | 19,250,000 |
| 160 | மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு | கைத்தொழில் கழிவு மற்றும் நீர் முகாமைத்துவ மேம்பாடு, தரம் குறைந்த விவசாய காணிகளை புனரமைத்தல், காடழிப்பினால் ஏற்படுகின்ற மாசினை குறைத்தல், உயிரியல் பல்வகைத்தன்மை மற்றும் விவசாய பல்வகைத் தன்மை பாதுகாப்பு முறைமையினை பேணுதல் | - | 7,891,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| 283 | வனவள திணைக்களம் | காணி மற்றும் காணி மேம்பாட்டு செலவினம், கைத்தொழில் பெருந்தோட்ட முகாமைத்துவம் | - | 75,000,000 |
| 291 | கடலோரப் பாதுகாப்புத் திணைக்களம் | ஒருங்கிணைந்த கரையோர முகாமைத்துவ பொறிமுறை அபிவிருத்தி மற்றும் கடற்கரையோர சுத்திகரிப்பு கருத்திட்டம் | - | 425,000,000 |
| | | | | |
| 161 | பேண்தகு அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் அமைச்சு | | | |
| 284 | வன சீவராசி பாதுகாப்புத் திணைக்களம் | வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக சவாரிக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் அருகிவரும் உயிரின பாதுகாப்பு மதுருஓயா மற்றும் கல்லோயா அபிவிருத்தி | - | 95,000,000 |
| 294 | தேசிய மிருகக் காட்சி சாலைகள் திணைக்களம் | தெகிவளை மிருகக்காட்சி சாலையில் ''திறந்த கூடு'' எண்ணக்கருவினை செயற்படுத்தல் பின்னவல யானை அநாதை நிலையத்தல் ''சுதா்ந்திரமாகப் பிறந்து சுதா்ந்திரமாக வாழ்தல்'' எண்ணக்கருவினை செயற்படுத்தல் | - | 150,000,000 |
| 322 | தேசிய தாவரவியற் பூங்காக்கள் திணைக்களம் | வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக மலா்ச் செய்கை கைத்தொழில்களுக்கான உட்கட்டமைப்பு ஒத்துழைப்பு | - | 10,000,000 |
| | | | | |
| 162 | மாநகர மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சு | அறுவக்காலு கழிவு அகற்றல் திட்ட அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம், அரச தனியாா் பங்களிப்பாக ஒவ்வொரு பிரதேச சபை பிரிவிலும் ஹரித்த உயனவினைத் தாபித்தல், நில்வள எலிய மாதிரிப் பூங்கா, 20,000 வீடமைப்பு அலகுகளை வழங்குதல், நகர மீள் உருவாக்கல் கருத்திட்டம், நகர மற்றும் உபாய நகரங்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் 2017 இற்கான கருத்திட்ட நிலுவைப் பொறுப்புக்களை செலுத்துதல் | - | 16,270,000,000 |
| | | | | |
| 163 | உள்நாட்டலுவல்கள், வயம்ப அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு | மொரட்டுவைக்கான சகல வசதிகளுடன் கூடிய கலாசார நிலையத்தினை செயற்படுத்தல்,வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக மன்னாா் தாழ்வுப்பாட்டில் கலாசார நிலையத்தினை புதுப்பித்தல். | - | 625,000,000 |
| | | | | |
| 165 | தேசிய நல்லிணக்க மற்றும் சகவாழ்வு அமைச்சு | வடக்கு கிழக்கில் 50,000 செங்கல் வீடுகளை நிா்மாணித்தல், கிராமிய நீா்ப்பாசன அபிவிருத்தியில் ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள், மழைநீா் சேகரிப்பு, ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி, பொருளாதார வலுவூட்டல் மற்றும் சமூக உட்கட்டமைப்பு அபிவிருத்தியினை மையப்படுத்திய நல்லிணக்கத்தினை | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வலுப்படுத்தல், கிளிநொச்சி மற்றும் நெடுந்தீவில் 2 உணவுப் பதனிடல் நிலையங்களை தாபித்தல | | |
| | | ., யாழ்ப்பாணத்தில் நவீன விசேட பொருளாதார நிலையமொன்றினை தாபித்தல் மற்றும் வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக காணாமல் போனவர்களுக்கான அலுவலகம் ஒன்றினை தாபிப்பதற்கான ஒத்துழைப்பு, கௌரவ இராஜாங்க அமைச்சருக்கான வாகனக் கொள்வனவு நல்லிணக்கத்தினை மையப்படுத்திய பொருளாதார மேம்படுத்துகை கருத்திட்டம். | 650,000,000 | 4,232,826,000 |
| 166 | நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு | கல்முனை மற்றும் சம்மாந்துறைக்கான பெருந்திட்டத்தினை செயற்படுத்தல், வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக வசதிகுறைந்த பிராந்தியங்களில் நகர அபிவிருத்தி மற்றும் 2017 ஆம் ஆண்டுக்கான நிலுவையினை செலுத்துதல் | - | 2,500,000,000 |
| 167 | விசேட ஒப்படைகள் அமைச்சு | தொழிற்பாட்டு குத்தகை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களுக்கான குத்தகை உடன்படிக்கை | 4,100,000 | - |
| 176 | துறைமுகங்கள் மற்றும் கப்பற் றொழில் அமைச்சு | ஹம்பாந்தோட்டை துறைமுகக் கருத்திட்டத்தின் 2 ஆம் கட்டத்திற்கான காணி சுவீகரிப்பு நட்டஈட்டுக் கொடுப்பனவு நிலுவையினைச் செலுத்துதல் | - | 219,470,000 |
| 192 | சட்டம் மற்றும் ஒழுங்கு, தெற்கு அபிவிருத்தி அமைச்சு | ஆள்சார் வேதனாதிகள், பிரயாணச் செலவினங்கள், வழங்கல்கள், வாகனப் பராமரிப்பு மற்றும் ஏனைய சேவைகளுக்கான நிதி ஏற்பாடுகள் | 11,004,000 | - |
| 225 | பொலிஸ் திணைக்களம் | 20 சுற்றுலா பொலிஸ் நிலையங்களை தாபித்தல், பொலிஸ் மறுசீரமைப்பு மற்றும் சமுதாய பொலிஸ் எண்ணக்கருவினை அறிமுகம் செய்தல், பொலிஸ் மற்றும் குற்றவியல் நீதி பல்கலைக்கழகமொன்றினை தாபித்தல், இணையத்தள குற்றவியல் புலனாய்வு பிரிவொன்றினை வலுப்படுத்தல் மற்றும் வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக பொலிஸ் தகவல் தொடர்பாடல் முறைமையினை தரமுயர்த்தல் | - | 745,000,000 |
| 193 | தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சு | சர்வதேச தொழில் நிறுவனத்திற்கான பங்களிப்பு கட்டணத்தினை செலுத்துதல் 2017 நிலுவைக் கொடுப்பனவுகளை செலுத்தல் | 776,400 | 12,657,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| 328 | மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களம் | பொது ஊழிய சேவையொன்றினை தாபித்தல் | - | 900,000 |
| 194 | தொலைத்தொடர்பு மற்றும் டிஜிற்றல் உட்கட்டமைப்பு அமைச்சு | வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக தொழில்நுட்ப மற்றும் டிஜிற்றல் மயப்படுத்தல் உள்ளீட்டினூடாக சேவை வழங்களை மேம்படுத்தல், 2017 கொடுப்பனவு நிலுவைகளை தீர்த்தல் மற்றும் போக்குவரத்து சேவைகள் | 402,560,000 | 3,119,000,000 |
| 195 | திறமுறை அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு | "அரம்பும" கடன் திட்டத்தினை செயற்படுத்தல், பல்தேசிய ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டம், "தகவல் தொழில்நுட்ப முன்னெடுப்பு" இனை தாபித்தல், ஏற்றுமதி சந்தை அடைவு ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டம், ஒருங்கிணைந்த வர்த்தக இணையத்தளத்தினை தாபித்தல், படகு கட்டுவதற்கான விசேட கைத்தொழில் பேட்டையினை உருவாக்குதல், ஒருங்கிணைந்த காணிப் பதிவு, 31 நிறுவனங்களை இணைக்கின்ற தேசிய ஒற்றைச் சாளரம், மில்லெனியவில் ரொஜனா கைத்தொழில் பேட்டைக்கான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல், பிங்கிரிய மற்றும் வெலிகமவில் கைத்தொழில் பேட்டைகளை தாபித்தல் | 50,000,000 | 4,200,000,000 |
| 196 | விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு | நீலப்பசுமை பொருளாதாரத்திற்கான நிறுவனமொன்றினை தாபித்தல், தரம் குறைந்த மண் மேம்பாடு, கொஸ்ரி திட்டத்தினை நஸ்ரிகா ஆக மாற்றுதல், மெக்கரொனிக் எனேபில் பொருளாதார அபிவிருத்தி முன்னெடுப்பின்கீழ் உற்பத்தி வடிவமைப்பு பொறியியலுக்கு ஒத்துழைப்பு வழங்கல், பலகை மற்றும் பலகையினை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளுக்கான வடிவமைப்பு நிலையத்தினை தாபித்தல், மகாஹேனவத்த, பிறிபானவில் உயர் தொழில்நுட்ப புத்தாக்க பேட்டையினை தாபித்தல், கைத்தொழில் தொழில் நுட்ப நிறுவகத்தின் பரிசோதனை வசதிகளை தரமுயர்த்தல், கொரிய நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட உதவிக்கான கணக்கீடு அமைச்சின் கேட்போர் கூடத்தில் ஒழிபெருக்கி வசதியினை மேற்கொள்ளல், இராஜாங்க அமைச்சரின் வாசஸ் தளத்தினை புதுப்பித்தல், 2017 உடன் தொடர்பான நனோ தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்ட நிலுவைகளை தீர்த்தல். | 25,000,000 | 1,028,928,060 |

| | | | | |
|---|---|---|---|---|
| 197 | திறன் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழில்பயிற்சி அமைச்சு | கின்னியாவில் பல்கலைக்கழக கல்லூரியொன்றினை தாபித்தல், வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக முன்னால் போராளிகளுக்கு என்விகியு சான்றிதழினை வழங்குதல் மற்றும் தொழில் பயிற்சி அதிகாரசபையின் ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்தினை (2006 இலிருந்து 2017 வரை) வழங்குதல். | 33,873,000 | 75,000,000 |
| 198 | நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சு | கலனி ஆற்றுப்பள்ளத்தாக்கு அணைக்கட்டினை வெள்ளத்திலிருந்து பாதுகாப்பதற்கான புனரமைப்பு, வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக தரைகீழ் நீர் கண்காணிப்பு ஒத்துழைப்பு, தள்பிற்றிகல நீர்த்தேக்க உட்கட்டமைப்பு அபிவிருத்தி, பாரிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசன திட்டங்களின் புனரமைப்பு | - | 3,503,856,000 |
| 199 | ஆரம்ப கைத்தொழில் அமைச்சு | வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக1000 நாற்று மேடைகளில் கறுவா மற்றும் மிளகு நாற்றுப் பொருட்கள் தரமேம்பாட்டினை செயற்படுத்தல் மற்றும் கறுவா தொடர்பான பயிற்சியினை வலுப்படுத்தல் | - | 100,000,000 |
| | **மொத்தம்** | | **89,052,328,760** | **129,847,488,991** |

*மூலம்: தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம்*

## 3.4 திறைசேரி தொழிற்பாடுகள்

### பொது திறைசேரியின் காசுப்பாய்ச்சல் செயலாற்றுகை

பொது திறைசேரிக்கான வருமானம் மற்றும் ஏனைய பெறுகைகளிலிருந்து காசு உட்பாய்ச்சல் முன்னைய வருடத்தின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2018 இன் முதல் 4 மாதங்களின் போது ரூபா 607.5 பில்லியனாக 5.0 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. அதேவேளை மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்கள் இரண்டுக்குமான மொத்த காசு வெளிப்பாய்ச்சல் 2018 இன் முதல் 4 மாதங்களின் போதும் ரூபா 854.3 பில்லியனாக 6.7 சதவீதத்தினால் அதிகரித்தது. இந்த வகையில் தேறிய காசு பற்றாக்குறையானது 2017 இன் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 222.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018 இன் முதல் 4 மாதங்களின் போது ரூபா 246.8 பில்லியனாக 11.1 சதவீதத்தினால் அதிகரித்தது. அதிகரித்த தொழிற்பாட்டு மற்றும் முதலீட்டுச் செலவினம் 2018 ஏப்ரல் 30 திகதி அன்றுள்ளவாறு மொத்த இறுதி காசு மீதியினை ரூபா 125.3 பில்லியனாக அதிகரிக்கச் செய்தது.

**அட்டவணை 3.22: 2018 சனவரி – ஏப்ரல் அரசாங்க திறைசேரி காசுப்பாய்ச்சல் தொழிற்பாடுகள் பற்றிய கூற்று**

ரூபா.பில்

| விடயம் | 2017 | 2018 | |
|---|---|---|---|
| | சனவரி – ஏப்ரல் | சனவரி – ஏப்ரல் | |
| | மெய் | மதிப்பீடு | மெய் |
| சனவரி 1 அன்றுள்ளவாறு ஆரம்ப காசு மீதி | (160.3) | (186.2) | (186.2) |
| வருமானம் மற்றும் ஏனைய பெறுகைகளிலிருந்து மொத்த காசு உட்பாய்ச்சல் | 578.5 | 663.9 | 607.5 |
| மீண்டெழும் கொடுப்பனவுக்கான மொத்த காசு வெளிப்பாய்ச்சல் | (607.9) | (713.4) | (655.1) |
| மூலதன கொடுப்பனவுக்கான மொத்த காசு வெளிப்பாய்ச்சல்மூ | (192.7) | (258.8) | (199.2) |
| தேறிய காசு மிகை ∴ (பற்றாக்குறை) | (222.1) | (308.3) | (246.8) |
| மொத்த பெறுகை மூ | 618.3 | 673.6 | 670.9 |
| படுகடன் மீள் கொடுப்பனவு | (380.9) | (388.4) | (364.6) |
| தேறிய பெறுகை | 237.4 | 285.2 | 306.3 |
| (தற்காலிக ஊழிய மீதி, தேறிய வைப்புகள் போன்றன.) | (0.9) | | 1.4 |
| ஏப்ரல் 30 அன்றுள்ளவாறு இறுதி காசு மீதி | (145.9) | (209.3) | (125.3) |

*மூலம் : திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்*

*மூஅரசாங்கத்தினால் பெறப்பட்ட கருத்திட்டம், நிகழ்ச்சித்திட்ட கடன்கள் உள்ளடங்களாக 2018 ஏப்ரல் 30 அன்றுள்ளவாறு பதியப்பட்டது.*

## அரச படுகடன் முகாமை


2018 இன் முதல் 4 மாதங்களின் போது அரசாங்கத்தின் மொத்த பெறுகையானது ரூபா 670.9 பில்லியனாகக் காணப்பட்டதுடன் இதில் உள்நாட்டுப் பெறுகையானது ரூபா 534.9 பில்லியன் என்பதுடன் வெளிநாட்டுப் பெறுகை ரூபா 136.0 பில்லியனாகக் காணப்பட்டது. இதற்கு மேலதிகமாக உள்நாட்டு படுகடன் சேவை கொடுப்பனவுகளுக்கான நிதியளிப்பு, உள்நாட்டுப் பெறுகையும் குறித்த காலத்தின் போது வெளிநாட்டு நாணய படுகடன் சேவைக் கொடுப்பனவின் பகுதியொன்றுக்கான நிதியளிப்பாக பயன்படுத்தப்பட்டது. குறித்த காலப்பகுதியின் இறுதியில் தேறிய கடன் பெறுகை ரூபா 306.3 பில்லியனாகக் காணப்பட்டது. 2018 சனவரி முதல் ஏப்ரல் வரையான காலப்பகுதியில் அரசாங்க மொத்த உள்நாட்டுப் பெறுகையின் பொழிப்பு அட்டவணை 3.21 இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.21: மொத்த உள்நாட்டு கடன் பெறுகை (2018 சனவரி – ஏப்ரல்)**

ரூபா.பில

| கடன் பெறுகை சாதனம் | |
|---|---|
| திறைசேரி முறிகள் | 219.6 |
| திறைசேரி உண்டியல்கள் (தேறிய) | 134.7 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | 102.7 |
| வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் அலகு | 53.0 |
| தற்காலிக முற்பணங்கள் - இலங்கை மத்திய வங்கி | 24.9 |
| மொத்தம் | 534.9 |

**வரைபு 3.3 | மொத்த உள்நாட்டுப் பெறுகைகள் (சனவரி - ஏப்ரல் 2018)**




## திறைசேரி உத்தரவாதங்கள் மீதான எதிர்பாரா பொறுப்புக்களை வெளிப்படுத்தல்

2018 ஏப்ரல் 30 அன்றுள்ளவாறு வெளியிடப்பட்ட மற்றும் தொடர்ந்து பெறுமதியாகக் காணப்பட்ட திறைசேரி உத்தரவாதங்களின் பெறுமதி ரூபா 927.4 பில்லியனாகக் காணப்பட்டதுடன், இது 2016 இன் 13 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்பு) (திருத்தச்) சட்டத்தின் 2 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு ஏற்றுக் கொள்ளப்பட்ட வரையறைக்குள் அமைந்திருந்தது. 2018 ஏப்ரல் 30 அன்றுள்ளவாறு பொது திறைசேரியினால் வெளியிடப்பட்ட திறைசேரி உத்தரவாதங்களின் பட்டியல் அட்டவணை 3.22 இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.22 : பொதுத் திறைசேரியினால் விநியோகிக்கப்பட்ட உத்தரவாதங்களின் விபரப் பட்டியல் 30.04.2018**

| இல | வங்கி அல்லது நிறுவனத்தின் பெயர் | நிறுவனத்தின் பெயர் | ரூபா.மில் |
|---|---|---|---|
| 1 | மக்கள் வங்கி | இலங்கை மின்சார சபை | 9,833.94 |
| | | இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | 143,112.51 |
| | | இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் லிமிடெட் | 12,721.11 |
| | | கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம் | 157.10 |
| | | லங்கா கோல்ட் கம்பனி (தனியார்) லிமிடெட் | 6,000.00 |
| | | பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு | 1,000.00 |
| | | தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை | 2,435.97 |
| | | நெற் சந்தைப்படுத்தும் சபை | 2,864.13 |
| | | நகர அபிவிருத்தி அதிகார சபை | 4,000.00 |
| | | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 16,290.00 |
| 2 | இலங்கை வங்கி | இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | 143,112.51 |
| | | சேர். ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் | 835.00 |
| | | ந'னல் ஸ்கூல் ஒப் பிஸ்னஸ மனேஜ்மன்ட் லிமிடெட் | 8,600.00 |
| | | தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை | 44,426.54 |
| | | நோத்சீ லிமிடெட் | 50.00 |
| | | நெல் சந்தைப்படுத்தும் சபை | 8,970.88 |
| | | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 35,480.30 |
| | | அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம் | 400.00 |
| | | அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனம் | 750.00 |

| | | | |
|---|---|---|---|
| 3 | தேசிய சேமிப்பு வங்கி | இலங்கை மின்சார சபை | 6,250.00 |
| | | சேர். ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் | 32,061.97 |
| | | லக்தநாவி லிமிடெட் | 2,992.00 |
| | | தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை | 1,239.48 |
| | | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 78,621.43 |
| | | இலங்கை காணி மீட்பு அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் | 3,500.00 |
| | | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 2,770.00 |
| 4 | கொமர்'ல் வங்கி | பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு | 2,000.00 |
| | | தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை | 1,929.61 |
| | | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 5,948.81 |
| 5 | டீஎவ்சீசீ வங்கி | பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு | 1,000.00 |
| | | தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை | 5,196.85 |
| | | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 1,105.85 |
| 6 | ஊழியர் நம்பிக்கை நிதியச் சபை | லக்தநாவி லிமிடெட் | 2,992.00 |
| 7 | எக்ஸிம் சீனா வங்கி | இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு | 14,097.38 |
| 8 | ஹட்டன் ந'னல் வங்கி | பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு | 3,550.00 |
| | | தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை | 10,391.89 |
| | | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 23,943.54 |
| 9 | ஹொங்கொங், சங்கை வங்கி | விமான நிலையம், விமானச் சேவைகள் (இலங்கை) லிமிடெட் | 7,018.55 |
| | | வெஸ்ட் கோஸ் பவர் (தனியார்) நிறுவனம் | 26,137.52 |
| 10 | இன்டஸ்ரியல் கொமர்'ல் பாங் ஒவ் சைனா லிமிடெட் | இலங்கை மின்சார சபை | 11,087.02 |
| 11 | ஜப்பான் இன்டர்ந'னல் கோப்ரே'ன் ஏஜன்ஸி (ஜய்க்கா) | விமான நிலையம், விமானச் சேவைகள் (இலங்கை) லிமிடெட் | 109,192.48 |
| 12 | தேசிய அபிவிருத்தி வங்கி | தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை | 8,374.13 |
| | | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 7,745.36 |
| 13 | இந்தியா எக்ஸிம் வங்கி | தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை | 40,818.87 |
| 14 | சீன அபிவிருத்தி வங்கி | தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை | 9,933.07 |
| 15 | ஆசிய அபிவிருத்தி வங்கி | இலங்கை மின்சார சபை | 42,138.68 |
| 16 | சம்பத் வங்கி பீஎல்சி | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 14,500.00 |
| 17 | யூனி கிரடிற் பாங் ஒஸ்ரியா ஏஜி | தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை | 9,808.35 |
| | | **மொத்தம்** | **927,384.84** |

# அத்தியாயம் 4

# அரசுக்குச் சொந்மான வியாபார தொழில்முயற்சிகளின் செயலாற்றுகை

## 4.1 மேன்நோக்கு

அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் குறிப்பாக, அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளின் பொருளாதாரத்தின் மீதான முக்கியத்துவத்தைக் கவனத்திற்கொண்டு மேம்படுத்தப்பட்ட கூட்டிணைவு நடைமுறைகள், முகாமைத்துவ மறுசீரமைப்புக்கள், புத்தாக்க நிதியீட்டம், பலமானதும் அறிவுபூர்வமானதுமான நிதி முகாமை, போட்டித்தன்மைக்கு முகங்கொடுத்தல், சர்வதேச தரத்திலான சிறந்த நடைமுறைகள், வினைத்திறன்மிக்க மனித வள முகாமை, பொது மக்களுக்குப் பொறுப்புக்கூறும்தன்மையை மேம்படுத்துதல் என்பவற்றின் ஊடாக தன்னிறைவடைவதற்கு இந்த அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளை ஊக்குவித்து வசதி ஏற்பாடுகளைச் செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

2017 ஆம் ஆண்டில், 55 அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளின் மொத்தப் புரள்வு 1,755.55 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 13.2 சதவீதமாகும். 2017 ஆம் ஆண்டில், அரசுக்குச் சொந்தமான 55 வியாபாரத் தொழில்முயற்சிகளில் , 39 தொழில்முயற்சிகள் மொத்தமாக 136 பில்லியன் ரூபா தேறிய இலாபத்தை உழைத்திருந்த அதேவேளை 16 தொழில்முயற்சிகள் மொத்தமாக 87 பில்லியன் ரூபா நட்டத்தைப் பதிவு செய்திருந்தன. அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளின் ஆதனத் தொகுதிகள் 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017 ஆம் ஆண்டில் 13.6 சதவீதத்தால் வளர்ச்சியடைந்துள்ளன. இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 56.8 சதவீதமாகும்.

அரச தொழில்முயற்சிகள் திணைக்களம் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் செயலாற்றுகையை மேம்படுத்தும் நோக்கில் 2017 ஆம் ஆண்டில் கூட்டிணைவு நோக்கக் கூற்றை அறிமுகப்படுத்தியது. கூட்டிணைவு நோக்கக் கூற்று (*SCI*) என்பது நிறுவனத்தின் மேம்படுத்தப்பட்ட நிதி சார்ந்த மற்றும் நிதி சாராத செயலாற்றுகையினைப் பிரதிபலிக்கும் நிறுவனத்தின் முக்கிய செயற்பாடுகளை இலக்காகக் கொண்ட முக்கிய செயலாற்றுகைக் குறிகாட்டிகளை உள்ளடக்கிய ஒரு கூற்றாகும்.

இலங்கையின் பொருளாதார இலக்குகளை அடைவதற்கான பயணத்தில், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்குச் செய்யும் பங்களிப்பை மேம்படுத்துவதன் மூலம் உபாயமுறையில் முக்கியத்துவம் பெறுகின்ற அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளுக்கு இந்த கூட்டிணைவு நோக்கக் கூற்று சாதகமான முறையில் பங்களிப்புச் செய்ய முடியும். பொறுப்புக்கூறும் தன்மை மற்றும் நல்லாட்சி என்பவற்றை மேம்படுத்தும் அதேவேளை இந்த அரசுக்குச் சொந்தமான இந்த வியாபாரத் தொழில்முயற்சிகளின் குறிக்கோள்களை வர்த்தக ரீதியில வெற்றியளிக்கக்கூடிய நிறுவனங்களாக மாற்ற வேண்டும் என்பதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும்.

2017 ஆம் ஆண்டில், முக்கியமான ஐந்து அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளான, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானம், இலங்கை மின்சார சபை, இலங்கை துறைமுக அதிகாரசபை, வரையறுக்கப்பட்ட விமான நிலைய, விமானப் போக்குவரத்துச் சேவை, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை என்பன உரிய தொழில்முயற்சிகளின் முகாமை, நிதி அமைச்சு மற்றும உரிய நிரல் அமைச்சு ஆகிய முத்தரப்புக்களை ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டதன் மூலம் கூட்டிணைவு நோக்கக் கூற்றின் தரப்புக்களாக இருந்தன. தற்போது கூட்டிணைவு நோக்கக் கூற்றுக்களின் குறிக்கோள்களை அடைவதன் முன்னேற்றங்களைக் கண்காணிக்கும் செயன்முறைப் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

அதனைத் தொடர்ந்து, அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றதன் பின்னர், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், நகர அபிவிருத்தி அதிகாரசபை, வரையறுக்கப்பட்ட லங்கா சதொச (தனியார்) கம்பனி, மத்திய பொறியியல் ஆலோசனைச்சேவைப் பணியகம், அரசாங்க மரக் கூட்டுத்தபானம், இலங்கை

போக்குவரத்துச் சபை, அரசு மருந்துப்பொருட் கூட்டுத்தபானம் மில்கோ (தனியார் கம்பனி) தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை, புவிச்சரிதவியல் அளவைச் சுரங்கப் பணியகம் ஆகிய தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கத்துச் சொந்தமான 10 வியாபாரத் தொழில் முயற்சிகளுடன் 2018 ஜுலை மாத இறுதியில் கூட்டிணைவு நோக்கக் கூற்றுக்களில் கைச்சாத்திடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 4.2 அரசுக்குச் சொந்தமான முக்கிய பத்து தொழில்முயற்சிகள் தொடர்பான மீளாய்வு

### இலங்கை வங்கி

2017 ஆம் ஆண்டின் இறுதியில் 1.9 ட்ரில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட இலங்கை வங்கியின் ஆதனத் தளம் 2018 ஏப்ரல் மாதத்தில் 2 ட்ரில்லியன் ரூபாவைத் தாண்டியது. 2017 ஆம் ஆண்டின் இறுதியில் 1,547 பில்லியன் ரூபாவாகக் காணப்பட் வங்கியின் வைப்புத் தளம், 2018 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் 3.8 சதவீதத்தால் அதிகரித்து 1,606 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. 2017 ஆம் ஆண்டின் இறுதியில் 2.8 சதவீதமாகக் காணப்பட்ட வங்கியின் செயற்பாடில்லாக் கடன் விகிதம் 2018 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் 4.3 சதவீதமாக அதிகரித்துள்ளது. வங்கியின் வரிக்கு முன்னரான இலாபம் 2018 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் 8.6 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இது முன்னைய வருடத்தின இதே காலப்பகுதியின் இலாபம் 10.2 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 15.7 சதவீத வீழ்ச்சியாகும்.

### மக்கள் வங்கி

2017 ஆம் ஆண்டின் இறுதியில் 1,467 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட மக்கள் வங்கியின் ஆதனத் தொகுதி 2018 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாத இறுதியில் 5.7 சதவீதத்தால் அதிகரித்து 1,551 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. 2017 ஆம் ஆண்டின் இறுதியில் 1,244 பில்லியன் ரூபாவாக் காணப்பட்ட வங்கியின் வைப்புத் தளம், 2018 ஏப்ரல் மாத இறுதியில் 5.0 சதவீதத்தால் அதிகரித்து 1,306 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. 2018 ஜனவரி முதல் ஏப்ரல் வரையான காலப்பகுதியில் கடன்கள் மற்றும் முற்பணங்கள் 7.8 சதவீதத்தால் அதிகரித்து 1,158 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. 2017 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப் பகுதியில் 4.6 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட மக்கள் வங்கியின் வரிக்கு முன்னரான இலாபம், 2018 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப் பகுதியில் 7.8 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது.

### தேசிய சேமிப்பு வங்கி

2017 ஆம் ஆண்டின் இறுதியில் 1,012 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட தேசிய சேமிப்பு வங்கியின் ஆதனத் தொகுதி 2018 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களின் இறுதியில் 3.7 சதவீதத்தால் அதிகரித்து 1,050 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. 2017 ஆம் ஆண்டின் இறுதியில் 737 பில்லியன் ரூபாவாக் காணப்பட்ட வங்கியின் வைப்புத் தளம், 2018 ஏப்ரல் மாத இறுதியில் 4.7 சதவீதத்தால் அதிகரித்து 772 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. 2018 ஜனவரி முதல் ஏப்ரல் வரையான காலப்பகுதியில் கடன்கள் மற்றும் முற்பணங்கள் 3.1 சதவீதத்தால் அதிகரித்து 402 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. 2017 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப் பகுதியில் 3.5 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட தேசிய சேமிப்பு வங்கியின் வரிக்கு முன்னரான இலாபம், 2018 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப் பகுதியில் 3.9 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது.

### வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தபானம்

இவ்வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் வரிக்கு முன்னரான இலாபமாக 2,258 மில்லியன் ரூபாவையும் மொத்த வருமானமாக 14.8 பில்லியன் ரூபாவையும உழைத்துள்ளது. இது 2017 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதிற்கான மொத்த வருமானமான 13.4 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 10.4 சதவீத அதிகரிப்பாகும். இக்காலப்பகுதியில் கூட்டுத்தபானத்தின் முக்கியமான முகாமைத்துவப் பதவிகளை நிரப்பியதன் மூலம் வினைத்திறன்மிக்க முகாமைத்துவம் ஏற்படுத்தப்பட்டது.

இக்கூட்டுத்தாபனம் தனது ஆயுட் காப்புறுதி வாடிக்கையாளர்களுக்கு 6.8 பில்லியன் ரூபா பெறுமதியான இத்தொழில் தொழிற்துறையிலேயே அதிகூடிய வெகுமதிகளை மிகப் மிகை ஊதியத்தை அறிவித்தது. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், வசதிகுறைந்த பிள்ளைகளுக்கான ‘சுப பத்தும் புலமைப்பரிசில்’’ திட்டத்தையும் புற்றுநோய் ஆஸ்பத்தியிரிலுள்ள பிள்ளைகள் மருத்துவமனை படுக்கைத் தொகுதி நிதி அன்பளிப்புக்கான நிதியைப் பெற்றுக்கொள்ளும் செயற்திட்டத்தையும் மீள ஆரம்பித்தது.

## இலங்கை மின்சார சபை

2017 ஆம் ஆண்டின் முதற் காலாண்டுக்கான வருமானமான 50,489 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் இலங்கை மின்சார சபை 2018 ஆம் ஆண்டின் முதற் காலாண்டு 54,489 மில்லியன் ரூபாவை வருமானமாக உழைத்துள்ளது. எவ்வாறாயினும், 2017 ஆம் ஆண்டின் இதே காலப் பகுதிக்கான தொழிற்பாட்டு நட்டமான 12,443 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2018 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டு 14,702 மில்லியன் ரூபா தொழிற்பாட்டு நட்டம் ஏற்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டில் 20.19 ரூபாவாகக் காணப்பட்ட கிலோவொற் மணித்தியாலமொன்றுக்கான வரியின்றிய செலவு 2018 ஆம் ஆண்டின முதற் காலாண்டில் 20.75 ரூபாவாக அதிகரித்துள்ளது. அமெரிக்க டொலருக்கு எதிராக ரூபாவின் பெறுமதி தேய்வடைந்தமை இலங்கை மின்சார சபையின் செயலாற்றுகை மீது ஓரளவு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. மின் உற்பத்தி கலவையானது, நீர் மின்சக்தி, பாரம்பரியமல்லாத புதுப்பிக்கத்தக்க சக்தி மூலவளங்கள் மற்றும் காற்று மூலமாக 901 ஜிகாவாற் மணித்தியால மின்சக்தியையும் அனல் சக்தி (எரிபொருள்) மூலமாக 1,430 ஜிகாவாற் மணித்தியால மின்சக்தியையும் அனல் சக்தி (நிலக்கரி) மூலமாக 1,557 ஜிகாவாற் மணித்தியால மின்சக்தியையும் கொண்டதாக அமைந்தது. இதன் மூலம் 2017 ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் 15:39:46 ஆகக் காணப்பட்ட மின்வலு சக்தி மூலங்களின் கலவை விகிதம் 2018 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 23:37:40 ஆக மாற்றமடைந்தது.

இலங்கை மின்சார சபையின வங்கிகளுக்கான நிலுவைக் கொடுப்பனவுகள் 2017 ஆம் ஆண்டின் முதற் காலாண்டில் 31,744 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டதுடன் இவ்வருடத்தின் முதலாம் காலாண்டில் 44,340 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. செலவினப் பிரதிபலிப்பு விலை நிர்ணயப் பொறிமுறையொன்று அமுல்படுத்தப்படாமையினால், இலங்கை மின்சார சபையின் செலவினங்களுக்காக அரச வங்கிகளிடமிருந்து கடனைப் பெறுவதால் கடனின் அளவு அதிகரிக்கின்றது. இவை தவிர 2017 ஆம் ஆண்டின் முதற் காலாண்டில் 53,033 மில்லியன் ரூபாவாக் காணப்பட்ட இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தற்கும் தனியார் மின்வலு உற்பத்தியாளர்களுக்கும் ***(IPP)*** இற்குமான மொத்த நிலுவை 2018 ஆம் ஆண்டின் முதற் காலாண்டில் 86,995 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது.

காற்றுச் சக்தியைப் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலமாக அபிவிருத்தி செய்வதற்கான முயற்சியாக, ஏப்ரல் மாதத்தில் ‘சுலங் பல மெஹுயும’’ செயற்திட்டம் அம்பாந்தோட்டையிலுள்ள தேசிய புதுப்பிக்கத்தக்க எரிசக்திப் பூங்காவில் ஆரம்பிக்கப்பட்டதுடன் மன்னாரில் 100 மெகாவொற் காற்றுச் சக்திச் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தவதற்கும் நவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானம்

2018 ஆம் ஆண்டின் முதல் 4 மாதங்களில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 11,143 மில்லியன் ரூபா தொழிற்பாட்டு நட்டத்தை எதர்நோக்கியது. இது 2017 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 3,553 மில்லியன் ரூபாவாகக் பதிவாகியிருந்தது. 2018 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் பிரெண்ட் மசகு எண்ணெய் பீப்பாயொன்றின சராசரி விலை ஐ.அ.டொ 66.95 ஆகக் காணப்பட்டது. இது 2017 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் 53.96 ஐக்கிய அமெரிக்க டொலர்களாகக் காணப்பட்டது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விற்பனைகளுக்கான மொத்தச் செலவு 2018 ஆம் ஆண்டின் முதல் 4 மாதங்களில் 17 சதவீதத்தால் அதிகரித்து 164,821 மில்லியன் ரூபாவாகப் பதிவாகியதுடன் அது 2017 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 139,945 மில்லியன் ரூபாவாகப் காணப்பட்டது. ஐக்கிய அமெரிக்க டொலுக்கு எதிராக இலங்கை ரூபாவின் பெறுமதி தேய்வடைந்தமை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் செயலாற்றுகையின் அடிப்படை இலாபத்தின் மீது பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தியது. 2018 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் நாணயமாற்று வீதத்தின் தாக்கம் 9,146.5 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. 2017 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இது 5,652 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்பாட்டு மற்றும் நிதி அதிர்வு நிலைமைகள் அரசாங்கத்திற்கு சொந்தமான இரண்டு வர்த்தக வங்கிகளான இலங்கை வங்கி, மக்கள் வங்கி என்பவற்றினால் தற்காலிகமாக நிவர்த்தி செய்யப்பட்டிருந்தன. இந்த இரண்டு வங்கிகளுக்கும் செலுத்த வேண்டிய மொத்தத் தொகை 2018.04.30 ஆந் திகதியில் 375,496 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது.

பொருளாதாரத்தின் மீதான ஒட்டுமொத்தத் தாக்கங்களையும் கவனத்தில் கொண்டு, போக்குவரத்துடன் தொடர்புடைய பெற்றோலிய உற்பத்திகளுக்கும் மண்ணெண்ணெய்க்குமான விலைச் சூத்திரத்தை அரசாங்கம் 2018 ஆம் ஆண்டு மே மாதத்திலிலிருந்து நடைமுறைப்படுத்தியுள்ளது. அதனால், இந்தப் புதிய முன்னெடுப்பின் மூலம் நிர்வாக விலையிடல் பொறிமுறையுடன் தொடர்புடைய நிதிச் சுமை குறைக்கப்படும். எவ்வாறாயினும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 2018.04.30 இல் உள்ளவாறான திரட்டிய இழப்புக்கள் மற்றும் தேறிய மறைப் பெறுமதி என்பன முறையே 218,609 மில்லியன் ரூபாவாகவும் 174,940 மில்லியன் ரூபாவாகவும் காணப்பட்டன.

### இலங்கை துறைமுக அதிகாரசபை

இலங்கை துறைமுக அதிகாரசபை முன்னொருபோதும் இல்லாத விதத்தில் 2017 ஆண்டில் 13.3 பில்லியன் ரூபாவை தேறிய இலாபமாக உழைத்துள்ளது. அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்திச் செயற்திட்டத்திற்காக இலங்கை துறைமுக அதிகாரசபையினால் பெறப்பட்டிருந்த கடன்கள் அகற்றப்பட்டமையே இந்த இலாபத்திற்கான பிரதான காரணமாக அமைந்தது. 2018 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் ஐ.அ.டொ. 973,658,000 மற்றும; ஐ.அ.டொ 146,000,000 பெறுமதியான விற்பனை வருமானங்களின் இரண்டு தொகுதிகள் கிடைக்கப்பெற்றன. சலுகை ஒப்பந்தத்தின் முன் நிபந்தனையைப் பூர்த்தி செய்ததன் பின்னர் 2018 ஜூன் மாதத்தில் மூன்றாம் தொகுதி கிடைக்கவுள்ளது. குத்தகைக்குப் பெறப்பட்டுள்ள நிலப் பிரதேசத்தில் இலங்கை கடற்படையினர் பயன்படுத்துகின்ற காணி தொடர்பில் இலங்கை கடற்படைக்கும் இலங்கை மின்சார சபைக்கும் இடையிலான குத்தகை ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்துதல், எண்ணெய்களற்ற எண்ணெய்த் தாங்கிகளைக் கையளித்தல் என்பன இதில் உள்ளடங்கும். அம்பாந்தோட்டை அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக சீன எக்சிம் வங்கி, இலங்கை வங்கி என்பவற்றிடமிருந்து பெறப்பட்ட கடன்களுக்கான சேவைகளை அரசாங்கம் பொறுப்பேற்று அதற்கான தவணைக் கொடுப்பனவு 2018 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் செலுத்துவதற்குப் பொறுப்பேற்றது.

இலங்கை துறைமுக அதிகாரசபையின் அதிகரித்த இலாபங்க்களை அடிப்படையாகக் கொண்டு, தொழிற்சங்கங்கள் சம்பள அதிகரிப்பைக் கோரியுள்ளன. அதற்கிணங்க, ஊழியர்களுடன் 2018-2020 ஆம் ஆண்டுக்கான கூட்டு ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. அது இலங்கை துறைமுக அதிகாரசபையின் சம்பள ஏற்றச் செலவை 2 பில்லியன் ரூபாய்களால் அதிகரிக்கும். திறைசேரி, துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சு, இலங்கை துறைமுக அதிகாரசபை என்பவற்றை உள்ளடக்கிய 2017 இல் ஏற்படுத்தப்பட்ட கூட்டிணைவு நோக்கக் கூற்று முத்தரப்பு ஒப்பந்தத்தில் 5 சதவீத சம்பள மீளாய்வு கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. உடன்பாடு காணப்பட்ட கூட்டிணைவு நோக்கக் கூற்று காலப் பகுதியான மூன்று வருடத்தில் இந்தப் பாரிய சம்பள அதிகரிப்பானது இலங்கை துறைமுக அதிகாரசபையின அடிப்படை இலாபத்தின் மீது நிச்சயமாகப் பாதிப்பை ஏற்படுத்தும். அத்துடன் அம்பாந்தோட்டை துறைமுகத்தை விற்றமையானது எதிர்காலத்தில் கூட்டிணைவு நோக்கக் கூற்று இலக்குகளையும் பாதிக்கக்கூடும்.

இலங்கை துறைமுக அதிகாரசபை 2018 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் 14,381 மில்லியன் ரூபாவை வருமானமாக உழைத்துள்ளது. இந்த வருமானத்திற்கான பிரதான பங்களிப்பை, அதாவது இலங்கை துறைமுக அதிகாரசபையின் மொத்த வருமானத்தில் 62 சதவீத பங்களிப்பை கப்பல் ஏற்றி இறக்கல் சேவைகள், கப்பல் வழிகாட்டல் செயற்பாடு தொழிற்பாடு வழங்கியுள்ளது.இலங்கை துறைமுக அதிகாரசபை 2018 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் 1,696 கப்பல்களைக் கையாண்டுள்ளதுடன் அவற்றில் 1,474 கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்தினால் கையாளப்பட்டுள்ளன. காங்கேசந்துறை துறைமுகத்தில் 2018 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் 29 கப்பல்கள் கையாளப்பட்டுள்ளன. காங்கேசனதுறை துறைமுகத்தை சுயமான நிலைபேறான வர்த்தக துறைமுகமாக தரமுயர்த்தும் எதிர்பார்ப்புடன் இந்தியாவும் கடன் உதவியுடன் காங்கேசந்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இலங்கை துறைமுக அதிகாரசபை 2018 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் 2.25 மில்லியன் கொள்கலன் அலகுகளைக் கையாண்டுள்ளது.

இலங்கை துறைமுக அதிகாரசபை, 1998 ஆம் ஆண்டின் பின்னர், உள்நாட்டில் இலங்கை துறைமுக அதிகாரசபையுடன் போட்டி போடும் தனியார் துறை துறைமுக இயக்குநர்களுடன் போட்டி போடும் விதத்தில் தனது கட்டணக் கட்டமைப்பை மீளாய்வு செய்து வருகின்றது. இதில் தன்னியக்கமாக்கலுக்குப்

பொருந்தும் விதத்தில் ஆவணமாக்கல் செயன்முறையை இலகுபடுத்துதல், தாமதங்களுக்கும் முறைகேடுகளுக்கும் வழிவகுக்கும் வரையறைகளை ஒழித்தல் என்பனவும் உள்ளடங்கும்.இந்த மீளாய்வின் மூலம் 500 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட வருமானம் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது

### தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையானது தற்போது முறையே 44.2 சதவீதம், 89.3 சதவீதம், 2 சதவீதம் ஆகக் காணப்படுகின்ற குழாய் மூலமான நீர்வழங்கல், பாதுகாப்பான நீர் வழங்கல், குழாய் மூலம் வடிகாலமைப்பு என்பனவற்றை 2020 ஆம் ஆண்டாகும் போது முறையே 60 சதவீதம், 91.7 சதவீதம், 3.3 சதவீதம் ஆகிய இலக்குகளை அடைவதற்கு கடுமையாக முயற்சித்து வருகின்றது.

337 நீர் வழங்கல் திட்டங்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் 62 செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. அமைச்சரவையின் அங்கீகாரத்திற்கு அமைய நகரப்புறச் செயற்திட்டங்களில் 50 சதவீதத்தையும் கிராமியச் செயற்திட்டங்களில் 75 சதவீதத்தை நீடித்த சிறுநீரக நோய் குறைப்புச் செயற்திட்டங்களில் 100 சதவீதத்தையும் மேற்கொள்வதற்கான கடன் சேவைகளை மேற்கொள்வதற்காக பொதுத் திறைசேரி 2018 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் 174 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது. கடமைகளை நிறைவேற்றும் குறிக்கோள்களை அடையும் நோக்கில், தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையின் உள்நாட்டு நிதியிடப்பட்ட செயற்திட்டங்களுக்கு 75,630 மில்லியன் ரூபா வரையும் வெளிநாட்டுச் செயற்திட்டங்களுக்கு ஐ.அ.டொ. 1,155.38 வரையும் யூரோ 170.03 மில்லியன் வரையும் கடன்பெறும் எல்லைகளாக நிதி அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

2017 ஆம் ஆண்டின் முதற் காலாண்டுக்கான வருமானமான 7,600 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை 2018 ஆம் ஆண்டின் முதற் காலாண்டில் 7,892 ரூபாவை வருமானமாக உழைத்துள்ளது. இது மூன்று தரப்பினருக்கு மத்தியில் கைச்சாத்திட்டப்பட்ட கூட்டிணைவு நோக்கக் கூற்றிற்கு இணங்க இலக்காகக் கொள்ளப்பட்ட வருமானத்தில் 24 சதவீதமாகும். 2017 ஆம் ஆண்டின் 362 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையின் இலாபமீட்டும் தன்மை 158 சதவீதத்தால் அதிகரித்துள்ளதுடன் அது எதிர்பார்க்கப்படும் இலாபத்தின் 6 சதவீதமாகும்.

கசிவுகள், மானிப் பிரச்சினைகள் மற்றும் சட்டரீதியற்ற நுகர்வு என்பவற்றின் காரணமாக தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை ஏற்றுக்கொள்ள முடியாத அளவுக்கு வருமானம் தராத நீரைக் கொண்டுள்ளது. கடந்த வருடத்தின் இதே காலப் பகுதியில் 27.8 சதவீதமாகக் காணப்பட்ட வருமானம் தராத நீரின் அளவு 2018 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் 25.9 சதவீதம் வரை குறைந்துள்ள போதிலும், அது நிறுவனத்தின் தொழிற்பாட்டு வினைத்திறனுக்கும் நிதி நிலைமைக்கும் பெறும் தடையாக அமைந்துள்ளது.

### வரையறுக்கப்பட்ட (இலங்கை) விமான நிலைய, விமானப் போக்குவரத்துச் சேவை

விமான நிலையங்கள் மற்றும் விமானப் போக்குவரத்துச் சேவைகள் கம்பனியின் தொழிற்பாட்டு இலாபம், 2017 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2018 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் 2,230 மில்லியன் ரூபாவிலிருந்து 53 சதவீதம் அதிகரித்து 3,410 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது.

விமானப் போக்குவரத்துச் சேவையுடன் 2017 ஆம் ஆண்டில் கூட்டிணைவு நோக்கக் கூற்று என்ற முத்தரப்பு ஒப்பந்தமொன்றை மேலும் மூன்று வருட காலப்பகுதியில் நடைமுறைப்படுத்த கைச்சாத்திட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்துக்கும் தாய்லாந்து அரசாங்கத்துக்கும் இடையில் இரு தரப்பு விமானச் சேவைக்கான ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்படுள்ளது. இது வரையறுக்கப்பட்ட (இலங்கை) விமான நிலைய, விமானப் போக்குவரத்துச் சேவைக் கம்பனியின் வருமானத்தில் சாதகமான தாக்கங்களை ஏற்படுத்த முடியும். சுற்றுலாத் துறையை ஊக்குவிப்பதற்காக உள்நாட்டு விமானத் தொழிற்பாடுகளை வாடகைக்கு வழங்குவது இலங்கை அரசாங்கத்தின ஒரு முக்கியமான குறிக்கோளாகும். அது வரையறுக்கப்பட்ட இலங்கை விமான நிலைய, விமானப் போக்குவரத்துச் சேவையின் செயலாற்றுகையின் மீது சாதகமான தாக்கங்களை ஏற்படுத்தும்.

### ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டெட்

ஸ்ரீ ரீலங்கா ஏயார்லைன்ஸ் லிமிடெட்டின் வரைவு நிதிக் கூற்றின் படி, இந்நிறுவனமானது 2016/2017 ஆம் நிதியாண்டுடன் ஒப்பிடுகையில் 2017/2018 ஆம் நிதியாண்டில் ரூபா 160,850 மில்லியனினை அதாவது 16 சதவீத அதிகரிப்பொன்றினை பதிவாக்கியிருந்தது. பயணிகள் சேவை மற்றும் சரக்கு சேவை வருமானங்கள் முறையே 25 சதவீதத்தினாலும் மற்றும் 23 சதவீதத்தினாலும் அதிகரித்ததன் காரணமாக இச்செயலாற்றுகையினை அடைந்துள்ளது. 2016/2017 ஆம் நிதியாண்டில் ரூபா 7,489 மில்லியனாகக் காணப்பட்ட ஸ்ரீ லங்கா ஏயார்லைன்ஸ் லிமிடெட்டின் தொழிற்பாட்டு இலாபம் 2017/2018 ஆம் நிதியாண்டில் ரூபா 3,721 இற்கு வீழ்ச்சிடைந்துள்ளது.

ஸ்ரீ லங்கா ஏயார்லைன்ஸ், மிஹின் லங்கா மற்றும் ஸ்ரீ லங்கா ஏயார்லைன்ஸ் லிமிடெட்டின் துணை நிறுவனமான ஸ்ரீ லங்கா ஏர்லைன்ஸ் கேட்டரிங் லிமிடெட் என்பனவற்றுடன் தொடர்புபடுத்தப்பட்டதாகக் கூறப்படும் முறைகேடுகள் மற்றும் ஒங்கீனங்கள் தொடர்பில் விசாரணைசெய்வதற்காக மேல்முறையீட்டு நீதிமன்றம், உயர் நீதிமன்றம், இலங்கை கணக்கியல் மற்றும் கணக்காய்வு தரநிலைகள் கண்காணிப்புக் குழு மற்றும் கணக்காய்வாளர் திணைக்களம் என்பனவற்றிலிருந்தான ஐந்து பேர் கொண்ட ஆணைக் குழுவொன்றினை 2018.02.02 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் அதிமேதகு ஜனாதிபதி நியமித்துள்ளார். குறித்த விசாரணைகள் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் உதவியுடன் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன.

2017 ஆம் ஆண்டில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் மூடப்பட்டதனால் ஏற்பட்ட நட்டங்களுக்காக பெறப்பட்ட கடன்கள் தொடர்பில் ஸ்ரீ லங்கா ஏயார்லைன்ஸ் லிமிடெட் சார்பில் இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கியிடமிருந்து பெறப்பட்ட ஆறுதல் கடிதங்களை மறுசீரமைக்கவும் அமைச்சரவையின் ஒப்புதலினை ஸ்ரீ லங்கா ஏயார்லைன்ஸ் லிமிடெட் பெற்றுள்ளது.

## 4.3 அரசுக்குச் சொந்தமான பிரதான வியாபாரத் தொழில்முயற்சிகளுக்கான மறுசீரமைப்பு முன்னெடுப்புக்கள

| நிறுவனம் | மறுசீரமைப்பு முன்னெடுப்புக்கள் |
|---|---|
| அரச வங்கிகள் (இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி) | ▪ வாடிக்கையாளர்கள் மத்தியில் எண்மத் தொழில்நுட்ப வங்கிமுறையை ஊக்குவித்தல்<br>▪ இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி கடன் பங்குகள், அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் உள்ளிட்டதாக அதிக அதிகளவில் அரசாங்கத்தின் மீது தங்கியுள்ளன. இது பொருளாதாரத்தின் புதிதாக அபிவிருத்தியடைந்து வரும் துறைகளுக்கும் கடன் வசதிகளை விரிவாக்குவதற்கும் உற்பத்திப் பங்குகளை பல்வகைப்படுத்துவதற்குமான ஆற்றலுக்குத் தடையாக உள்ளது.<br>▪ கடன்களின் தரத்தை மேம்படுத்தி மீள அறவிடும் பொறிமுறையை மேம்படுத்துதல்.<br>▪ நடுத்தரக் காலத்தில் செயலாற்றுகையை மேம்படுத்துவதற்காக வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தில் வியாபார மீள்கட்டமைப்புச் செயன்முறையொன்றை நடைமுறைப்படுத்துதல். |
| இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | ▪ ஆயுள் மற்றும பொது முக்கிய முறைமையை நடைமுறைப்படுத்துவதற்கு ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |
| லங்கை மின்சார சபை | ▪ காற்றுச் சக்தியைப் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலமாக அபிவிருத்தி செய்வதற்கான முயற்சியாக, ஏப்ரல் மாதத்தில் ‘சுலங்க பல மெஹுயும'' செயற்திட்டம் அம்பாந்தோட்டையிலுள்ள தேசிய புதுப்பிக்கத்தக்க எரிசக்திப் பூங்காவில ஆரம்பிக்கப்பட்டது.<br>▪ 100 மெகாவொற் காற்றுச் சக்தி செயற்திட்டத்தை மன்னாரில் நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.<br>▪ மின்மாற்றல் மற்றும் விநியோகத்திற்கும் போதியளவு முதலீடு செய்யப்படுவதை உறுதிப்படுத்தி ஒவ்வொரு மாகாணத்திலும் மின்மாற்றல் வசதிகளை வழங்குவதில் தனியார் துறையினரின் பங்கேற்பை ஊக்குவிப்பதற்கான மறுசீரமைப்புக்கள்.<br>▪ இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்பட்ட |

| | |
|---|---|
| | தேவைப்பாட்டுக்கு இணங்க மொத்த வழங்கல் கொடுக்கல் வாங்கல் கணக்குகளை நடைமுறைப்படுத்தவதற்கு இலங்கை மின்சார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.<br>▪ மின்சாரத்திற்கான தன்னியக்கமான விலைச் சூத்திரமும் தற்போதுள்ள கட்டண முறையை அபிவிருத்தி செய்து நடைமுறைப்படுத்தப்படும். |
| இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | ▪ கூட்டிணைவு நோக்கக் கூற்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர், சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர், திறைசேரியின் செயலாளர் ஆகிய மூன்று தரப்பினருக்கு மத்தியில் கைச்சாத்திடப்பட்டுள்ளது<br>▪ திருகோணமலை மேல் தாங்கிப் பண்ணையை திரும்பவும் எண்ணெய் களஞ்சியப்படுத்தலுக்குப் பயன்படுத்துவதன் சாத்தியங்கள் தொடர்பில் கண்டறிவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.<br>▪ சரக்குகளை தரநியம மட்டத்தில் விடுவிப்பதற்கு எடுக்கும் சராசரி நேரத்தைக் குறைப்பதற்காகவும் அதன் மூலம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் பாரியளவில் செலுத்தப்படும் தாமதக் கட்டணங்களைக் குறைப்பதற்காகவும புதிய தொழில்நுட்பங்கள் மூலம் நாட்டுக்கு குறுக்கேயான புதிய குழாய்த் தொகுதிகளை அமைக்கும் வேலைகளை ஆரம்பித்துள்ளது.<br>▪ இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் வர்த்தக ரீதியில் நிலைபெறுவதற்கு, விலைச்சூத்திர பொறிமுறை உதவுமென எதிர்பார்க்கப்டுகின்றது. உத்தேச விலைச் சூத்திரமானது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் இலாபமீட்டும் தன்மைக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் என்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தனது நிதியீட்டத் தேவைகளுக்காக உள்நாட்டு நிதிச் சந்தைகளில் பெருமளவு தங்கியிருப்பதிலிருந்து விடுபடும் நிலையை தோற்றுவிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. |
| தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை | ▪ ஒட்டுமொத்த குடிமக்களுக்கும் பாதுகாப்பான குடிநீரை வழங்கும் இலக்கை அடைவதற்காக, தடங்கலற்ற நீர் வழங்கலை உறுதிப்படுத்துதவற்காக வானிலை முறைமைகளினால் பாதிக்கப்படும் தன்மையைத் தணிப்பதற்கான வித்தியாசமான அணுகுமுறைகளைத் தேடுவது முக்கியமானதாகும்.<br>▪ குறித்துரைக்கப்பட்ட நேர வரையறைக்குள் இந்த இலக்குளை அடைவதற்காகப் புத்தாக்க நிதிப் பொறிமுறைகளைப் பயன்படுத்துவது முக்கியத்துவம் வாயந்ததாக மாறியுள்ளது. |
| வ/ப இலங்கை விமான நிலைய, விமானப் போக்குவரத்துச் சேவை | ▪ நடுத்தரக் காலத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய கூட்டிணைவு நோக்கக் கூற்று ஒப்பந்தத்தைச் செய்துள்ள ஐந்து அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளில் வரையறுக்கப்பட்ட (இலங்கை) விமான நிலைய, விமானப் போக்குவரத்துச் சேவையும் ஒன்றாகும். அதனால், கூட்டிணைவு நோக்கக் கூற்றின் அடிப்படையில் நோக்குகையில், 2017 ஆம் ஆண்டில் வரையறுக்கப்பட்ட (இலங்கை) விமான நிலைய, விமானப் போக்குவரத்துச் சேவையினால் பின்வருவனவற்றைப் பூர்த்தி செய்ய முடிந்துள்ளது<br>▪ 2017 ஆம் ஆண்டில் ஓடுபாதை மேற்பரப்பு அமைப்பதுடன் சேர்த்து ஓடுபாதை தொகுதியைத் தரமுயர்த்துவதற்கு வரையறுக்கப்பட்ட (இலங்கை) விமான நிலைய, விமானப் போக்குவரத்துச் சேவையினால் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டதைத் தொடர்ந்து பண்டாரநாயக சர்வதேச விமான நிலையமானது தற்போது ஏ380 போன்ற விமானங்களையும் கையாளக்கூடியதாக உள்ளது. எவ்வாறாயினும், பண்டாரநாயக சர்வதேச விமான நிலையத்தின் செயற்பாட்டு அளவை விட கூடியளவு சேவை வழங்கப்படுவதனால் நிறுவனத்தின் சேவை வழங்கலின் வினைத்திறன் குறைவடைந்துள்ளது.<br>▪ வரையறுக்கப்பட்ட (இலங்கை) விமான நிலைய, விமானப் போக்குவரத்துச் சேவை எதிர்வுகூறப்பபடும் 2025 ஆம் ஆண்டுக்கான கேள்வியைப் பூர்த்திசெய்வதற்காக உட்கட்டமைப்பு அபிவிருத்தியுடன் தொடர்புடைய முதலீட்டுத் தேவைகளை முன்கூட்டிக் கோருவது அவசியமாகும்.<br>▪ பண்டாரநாயக சர்வதேச விமான நிலைத்தின் ஓடுபாதை தரநியமக் காலப்பகுதியில் புதுப்பிக்கப்படாமையினால், 2017 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் அச்செயற்திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்காக வரையறுக்கப்பட்ட (இலங்கை) விமான நிலைய, விமானப் போக்குவரத்துச் சேவை தேவையான முதலீட்டைச் செய்தது. |

*மூலம்: அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகள் மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்*

## அட்டவணை 4.1 | அரசுக்குச் சொந்தமான நிதியல்லாத வியாபாரத் தொழில்முயற்சிகளின் வங்கி நிலுவை படுகடன்கள்

*ரூபா மில்*

| | தொழில்முயற்சிகள் | வங்கிகளுக்கான படுகடன் 2016 | வங்கிகளுக்கான படுகடன் 2017 (தற்காலிக) | 2018.04.30 இல் உள்ளவாறு (தற்காலிகமான) |
|---|---|---|---|---|
| 1 | இலங்கை மின்சார சபை | 38,968 | 27,995 | 44,340 |
| 2 | இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானம் | 333,793 | 339,481 | 359,036 |
| 3 | இலங்கை துறைமுக அதிகாரசபை (அ) | 10,593 | 7,409 | - |
| 4 | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை | 35,102 | 67,162 | 73,583 |
| 5 | வ/ப விமான நிலையங்கள் மற்றும் விமானப் போக்குவரத்துச் சேவைகள் (இலங்கை) கம்பனி | 37,679 | 42,780 | 0 |
| 6 | ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிடட்(அ) | 67,598 | 90,337 | - |
| 7 | வ/ப மிஹின் லங்கா (தனியார்) கம்பனி(ஆ) | 3,372 | - | - |
| 8 | இலங்கை போக்குவரத்துச் சபை (ஆ) | - | - | - |
| 9 | அரசு பொறியியல் கூட்டுத்தபானம் (அ) | 1,261 | 2,050 | 900 |
| 10 | மத்திய பொறியியல் ஆலோசனைச்சேவைப் பணியகம் | 0 | 0 | 0 |
| 11 | அரச அபிவிருத்தி, நிர்மாணக் கூட்டுத்தபானம் (அ) | 752 | 907 | 1,450 |
| 12 | மில்கோ தனியார் கம்பனி (அ) | 13,677 | 15,017 | - |
| 13 | தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபை (அ) | 209 | 249 | - |
| 14 | இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தபானம் | 12 | 2 | 13.4 |
| 15 | மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை | 101 | 56 | 68.12 |
| 16 | வ/ப குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி | 77 | 0 | 0 |
| 17 | சிலாபம் பிளான்டேஷன்ஸ் கம்பனி | 0 | 0 | 0 |
| 18 | வ/ப கலுபோவிட்டியானை தேயிலைத் தொழிற்சாலைக் கம்பனி (அ) | 35 | 124 | - |
| 19 | இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தபானம் (அ) | 0 | 8 | - |
| 20 | வ/ப இலங்கை கனிம மணல் கம்பனி | 100 | 536 | 0 |
| 21 | வ/ப இலங்கை பொஸ்பேட் கம்பனி | 15 | 4 | 15 |
| 22 | கஹட்டகஹ கிர∴பைட் லங்கா கம்பனி | 0 | 0 | 0 |
| 23 | அபிவிருத்தி லொத்தர் சபை | 0 | 0 | 0 |
| 24 | தேசிய லொத்தர் சபை | 0 | 0 | 0 |
| 25 | அரசு மருந்தாக்கற் கூட்டுத்தபானம் | 0 | 0 | 0 |
| 26 | இலங்கை ஆயுர்வேத மருந்துப் பொருள் கூட்டுத்தபானம் | 53 | 46 | 44 |
| 27 | அரசு மருந்துப்பொருட் கூட்டுத்தபானம் (அ) | 39 | 1,361 | - |
| 28 | ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை | 0 | 0 | 0 |
| 29 | வ/ப சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு | 0 | 0 | 0 |
| 30 | இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தபானம் (அ) | 311 | 341 | - |
| 31 | இலங்கை ஒலிபரப்பரப்புக் கூட்டுத்தபானம் | 0 | 0 | 0 |
| 32 | இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை | 554 | 520 | 453 |
| 33 | அரசாங்க மரக் கூட்டுத்தபானம் | 0 | 0 | 0 |
| 34 | அரசாங்க வர்த்தகக் கூட்டுத்தாபன பொது வர்த்தகக் கம்பனி | 1,180 | 1,338 | 1,128 |
| 35 | வ/ப லங்கா சதொச நிறுவனம் (ஆ) | - | - | - |
| 36 | அரசாங்க அச்சகக் கூட்டுத்தபானம் (அ) | 0 | 733 | - |
| 37 | இலங்கைப் கடற்தொழில் கூட்டுத்தபானம் (அ) | 38 | 87 | - |
| 38 | இலங்கை கடற்தொழில் துறைமுகக் கூட்டுத்தபானம் | 0 | 0 | 0 |
| 39 | வ/ப லங்கா உரக் கம்பனி (அ) | 27,482 | 28,296 | - |
| 40 | வ/ப கொழும்பு கொமர்ஷல் ∴பெர்டிலைசர் கம்பனி | 12,675 | 13,897 | 9,969 |
| 41 | ஹொட்டேல் டெவலொப்பர்ஸ் லங்கா பீஎல்சீ | 340 | 272 | 69 |
| 42 | வ/ப லங்கா சீனிக் கம்பனி | 0 | 0 | 0 |
| | **மொத்தம்** | **431,462** | **440,844** | **491,069** |

*மூலங்கள்: அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகள் மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்*

*(அ)2018.04.30 இல் தரவுகள் கிடைக்கக் கூடியவையாக இருக்கவில்லை*

*(ஆ) நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படவில்லை*

## அட்டவணை 4.2 | அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் இலாபமீட்டும் தன்மை

ரூபா.மில்

| | தொழில்முயற்சிகள் | இலாபம் /(நட்டம்) | | 2018.04.30 இல் உள்ளவாறான (தற்காலிகமானது) |
|---|---|---|---|---|
| | | **2016** | 2017 (வரைவு) | |
| 1 | இலங்கை வங்கி | 31,189 | 30,363 | 8,659 |
| 2 | மக்கள் வங்கி | 20,814 | 23,564 | 7,777 |
| 3 | தேசிய சேமிப்பு வங்கி | 13,303 | 14,029 | 3,895 |
| 4 | அரச ஈட்டு, முதலீட்டு வங்கி | 706 | 446 | 343.9 |
| 5 | வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் | 848 | 502 | 161 |
| 6 | வ/ப லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி | 259 | 285 | 26.5 |
| 7 | பிரதேச அபிவிருத்தி வங்கி | 2,131 | 3,289 | 617.6 |
| 8 | வ/ப இலங்கை சேமிப்பு வங்கி | 600 | 605 | 189.4 |
| 9 | ஊழியர் நம்பிக்கை நிதியச் சபை (அ) | 16,043 | 19,534 | - |
| 10 | இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தபானம் | 12,741 | 4,569 | 2,258 |
| 11 | தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் (அ) | 2,840 | 758 | - |
| 12 | இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தபானம் | 156 | (200) | 89 |
| 13 | விவசாய மற்றும் கமத்தொழில் காப்புறுதிச் சபை | (3,261) | (3,895) | (1,590) |
| 14 | இலங்கை மின்சார சபை | (14,499) | (49,231) | (14,702) |
| 15 | இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானம் | 69,620 | 3,504 | (21,178) |
| 16 | இலங்கை துறைமுக அதிகாரசபை (அ) | 1,036 | 13,222 | - |
| 17 | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை | 2,385 | 1,737 | 362 |
| 18 | வ/ப விமான நிலையங்கள் மற்றும் விமானப் போக்குவரத்துச் சேவைகள் (இலங்கை) கம்பனி | 6,909 | 10,762 | 3,410 |
| 19 | ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிடட்(அ) | (12,622) | (28,930) | - |
| 20 | வ/ப மிஹின் லங்கா (தனியார்) கம்பனி | (1,579) | - | - |
| 21 | இலங்கை போக்குவரத்துச் சபை | (3,617) | 2,598 | 589 |
| 22 | அரசு பொறியியல் கூட்டுத்தபானம் (அ) | (958) | (940) | 305 |
| 23 | மத்திய பொறியியல் ஆலோசனைச்சேவைப் பணியகம் | 816 | 633 | 143 |
| 24 | அரச அபிவிருத்தி, நிர்மாணக் கூட்டுத்தபானம் (அ) | 23 | (491) | 15 |
| 25 | மில்கோ (பிரைவெட்) லிமிடட் (அ) | 340 | 114 | - |
| 26 | தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபை (அ) | 9.49 | (840) | - |
| 27 | இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தபானம் | (134) | (79) | 8.09 |
| 28 | மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை | (443) | (295) | (88.44) |
| 29 | வ/ப குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி(அ) | 156 | 240 | - |
| 30 | சிலோ பிளான்டேஷன்ஸ் லிமிடட் (அ) | 78 | 126 | - |
| 31 | வ/ப கலுபோவிட்டியானை தேயிலைத் தொழிற்சாலைக் கம்பனி (அ) | 43 | 31 | - |
| 32 | இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தபானம்(அ) | 32 | 16 | - |
| 33 | வ/ப இலங்கை கனிம மணல் கம்பனி (அ) | 170 | 100 | - |
| 34 | வ/ப இலங்கை பொஸ்பேட் கம்பனி (அ) | (32) | 15 | - |
| 35 | கஹட்டகஹ கிர.ஃபைட் லங்கா லிமிடட் | (2.52) | 17.8 | 4.9 |
| 36 | அபிவிருத்தி லொத்தர் சபை (அ) | 2,700 | 2,320 | - |
| 37 | தேசிய லொத்தர் சபை (அ) | 897 | 602 | - |
| 38 | அரசு மருந்தாக்கற் கூட்டுத்தபானம் | 441 | 322 | 54 |
| 39 | இலங்கை ஆயுர்வேத மருந்துப் பொருள் கூட்டுத்தபானம் | 48 | 56 | 12.5 |
| 40 | அரசு மருந்துப்பொருட் கூட்டுத்தபானம் (அ) | 1,868 | 1,560 | - |
| 41 | ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை | (171) | (143) | (435) |
| 42 | வ/ப சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு (அ) | (70) | (287) | - |
| 43 | இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தபானம் (அ) | (231) | (196) | - |
| 44 | இலங்கை ஒலிபரப்பரப்புக் கூட்டுத்தபானம் (அ) | 49 | 75 | - |
| 45 | இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை | 7 | 33 | 2.5 |
| 46 | அரசாங்க மரக் கூட்டுத்தபானம் | 86 | 565 | 53.1 |
| 47 | அரசாங்க வர்த்தகக் கூட்டுத்தாபன பொது வர்த்தகக் கம்பனி | 61 | 71 | 2 |
| 48 | வ/ப லங்கா சதொச நிறுவனம் (அ) | (4,474) | (1,980) | - |
| 49 | அரசாங்க அச்சகக் கூட்டுத்தபானம் (அ) | (75) | (229) | - |
| 50 | இலங்கைப் கடற்தொழில் கூட்டுத்தபானம் (அ) | (161) | 37 | - |
| 51 | இலங்கை கடற்தொழில் துறைமுகக் கூட்டுத்தபானம் (அ) | (31) | (64) | - |
| 52 | வ/ப லங்கா உரக் கம்பனி (அ) | 937 | 128 | - |
| 53 | வ/ப கொழும்பு கொமர்ஷல் ஃபெர்டிலைசர் கம்பனி | 253 | 70 | 16.5 |
| 54 | ஹொட்டேல் டெவலொப்பர்ஸ் லங்கா பீஎல்சீ | 172 | 219 | 243 |
| 55 | வ/ப லங்கா சீனிக் கம்பனி (அ) | 1,006 | 677 | - |
| | **மொத்தம்** | **76,952** | **48,204** | **(9,366)** |

*மூலங்கள்: அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகள், பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்*
*(அ) நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படவில்லை*

### அட்டவணை 4.3 | அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் மூலமான தீர்வை/பங்கிலாப வருமானம்

ரூபா மில்

| விடயம் | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018.04.30 இல் உள்ளவாறான |
|---|---|---|---|---|---|---|---|
| **தீர்வை** | **31,514** | **30,400** | **42,137** | **26,118** | **92,338** | **50,489** | **2,361** |
| தேசிய சேமிப்பு வங்கி | 8,200 | 5,000 | 4,000 | 2,800 | 12,026 | 3,865 | - |
| இலங்கை வங்கி | 5,000 | 5,000 | 6,500 | 5,000 | 18,000 | 12,000 | - |
| மக்கள் வங்கி | 4,500 | 4,500 | 6,000 | 3,000 | 8,000 | 5,000 | 200 |
| தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு | 7,200 | 10,100 | 10,000 | 10,000 | 28,000 | 22,800 | 2,000 |
| இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானம் | | | 10,000 | | 10,000 | - | - |
| அரச ஈட்டு, முதலீட்டு வங்கி | 25 | 40 | 10 | 10 | 10 | - | - |
| பிரதேச அபிவிருத்தி வங்கி | 500 | 500 | - | 87 | 88 | - | - |
| அரசாங்க மரக் கூட்டுத்தபானம் | 50 | 50 | 25 | 50 | 175 | 100 | - |
| அரசு மருந்தாக்கற் கூட்டுத்தபானம் | 20 | 20 | 25 | 30 | 65 | 222 | - |
| தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் | 4,200 | 3,200 | 4,000 | 3,000 | 2,500 | 2,100 | 121 |
| புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் | 750 | 700 | 650 | 850 | 900 | 1,500 | - |
| தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை | - | 100 | - | 75 | 175 | 100 | - |
| இலங்கை மாநாட்டுப் பணியகம் | 12 | - | - | - | - | - | - |
| இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தபானம் | 5 | - | 2 | - | - | - | - |
| இலங்கை மின்சார சபை | - | - | - | - | 8,000 | - | - |
| முதலீட்டுச் சபை | 200 | - | 100 | 141 | 115 | 220 | - |
| தேசிய லொத்தர் சபை | 502 | 500 | - | 50 | 550 | - | - |
| பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு | - | 94 | - | - | - | - | - |
| இலங்கை காப்புறுதிச் சபை | - | 300 | - | - | - | - | - |
| இலங்கை கட்டளைகள் நிறுவனம் | - | 20 | - | - | - | - | - |
| இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தபானம் | - | 25 | - | - | 25 | - | - |
| தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபை, | - | 1 | - | - | - | | - |
| மத்திய பொறியியல் ஆலோசனைச்சேவைப் பணியகம் | - | - | - | 25 | 25 | 25 | - |
| இலங்கை சுற்றுலாத் துறை ஊக்குவிப்புப் பணியகம் | - | - | 500 | 500 | 1,500 | 1,000 | - |
| சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை | 350 | 200 | 250 | 400 | 768 | 800 | - |
| அரச மருந்துப்பொருட் கூட்டுத்தபானம் | - | 50 | 75 | 100 | 216 | 222 | - |
| தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனம் | - | - | - | - | 200 | 160 | 40 |
| இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் | - | - | - | - | 1,000 | 75 | - |
| தேசிய பொலிஸ் ஆணைக்குழு | | | | | | 300 | - |
| **பங்கிலாபங்கள்** | **4,548** | **-** | **4,664** | **3,678** | **15,821** | **3,550** | **453** |
| தேசிய சேமிப்பு வங்கி | 60 | - | 60 | 60 | 60 | 60 | 30 |
| இலங்கை வங்கி | 346 | - | 346 | 346 | 346 | 346 | 173 |
| மக்கள் வங்கி | 158 | - | 316 | 316 | 316 | 316 | 158 |
| லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி | 18 | - | 36 | 36 | 36 | 41 | - |
| தேசிய அபிவிருத்தி வங்கி | 4 | - | 6 | 5 | 2 | 2 | 1 |
| வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தபானம் | 1,001 | - | 2,001 | 1,003 | 11,857 | 503 | 3.6 |
| வ/ப விமான நிலையங்கள் மற்றும் விமானப் போக்குவரத்துச் சேவைகள் கம்பனி | - | - | 500 | 497 | 1,500 | 850 | - |
| வ/ப இலங்கை கனிம மணல் கம்பனி | 1,700 | - | 43 | 14 | - | - | - |
| வ/ப இலங்கை பொஸ்பேட் கம்பனி | 40 | - | 35 | 30 | - | 8 | - |
| வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு | 88 | - | 125 | 84 | - | 10 | - |
| லங்கா லேலாண்ட் லிமிடட் | 5 | - | 11 | 54 | 34 | 35 | - |
| ரக்னா ஆரக்ஷக லங்கா லிமிடட் | 10 | - | 68 | 93 | - | - | - |
| மாந்தை ஸோல்ட் லிமிடட் | - | - | 1 | - | - | - | - |
| சிலோன் பெர்டிலைசர்ஸ் லிமிடட் | 4 | - | 38 | 54 | 116 | 90 | 21 |
| கொழும்பு கொமர்ஷல் பெர்டிலைசர்ஸ் லிமிடட் | 8 | - | 12 | 10 | 25 | 12 | - |
| வரையறுக்கப்பட்ட பரந்தன் இரசாயனக் கம்பனி | 3 | - | 10 | 5 | - | 8 | - |
| கஹுட்டகஹ கிர.்.பைட் லங்கா லிமிடட் | - | - | 1 | - | - | - | - |
| அரசாங்க வர்த்தகக் கூட்டுத்தாபன பொது வர்த்தகக் கம்பனி | - | - | - | - | 5 | - | - |
| ஸ்ரீலங்கா ரெலிகொம் பீஎல்சீ | 759 | - | 759 | 795 | 795 | 795 | - |
| டி லா ரூ லங்கா லிமிடட் | 42 | - | 49 | 61 | 62 | 79 | - |
| வரையறுக்கப்பட்ட லங்கா மின்சாரக் கம்பனி | 75 | - | 25 | 87 | 152 | 218 | - |
| வ/ப இலங்கை கைத்தொழில் பேட்டைகள் கம்பனி | 47 | - | 55 | 55 | 47 | 55 | - |
| திறன் விருத்தி நிதியம் | - | - | - | 2 | - | - | - |
| சிலோன் அக்ரோ இன்டஸ்ட்ரீஸ் | - | - | 7 | 6 | 12 | 12 | - |
| வ/ப லங்கா சீனிக் கம்பனி | - | - | 80 | - | - | - | - |
| ஆசிய மீள்காப்புறுதிக் கூட்டுத்தபானம் | - | - | - | - | - | - | |
| வரையறுக்கப்பட்ட லங்கா லொஜிஸ்டிக் | - | - | 2 | 2 | 5 | - | 1 |
| சிலோன் பெற்றோலியம் ஸ்டொரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் | - | - | - | - | 438 | - | - |
| பெருந்தோட்டக் கம்பனிகள்* | 179 | - | 80 | 62 | 10 | 103 | 64.98 |
| ஏனையவை** | 1 | - | - | 1 | 3 | 7 | - |
| **மொத்தம்** | **36,062** | **30,400** | **46,801** | **29,796** | **108,159** | **54,039** | **2,814** |


*மூலங்கள்: அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகள், பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்*

# அத்தியாயம் 5
# வெளிநாட்டு நிதியளிப்பு

## 5.1 வெளிநாட்டு நிதியளிப்பு உறுதியளிப்புக்கள்

அரசாங்கத்தின் முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்திற்குத் தேவையான வெளிநாட்டு நிதியளிப்புக்களை வழங்குவதற்காக அரசாங்கம் பல்வேறு வெளிநாட்டு அபிவிருத்தி பங்காளர்களுடனும் கடன் வழங்கும் முகவர்களுடனும் 2018 ஆம் ஆண்டின் சனவரி 01 ஆந் திகதியிலிருந்து ஏப்ரல் 30 ஆந் திகதி வரை பத்து (10) வெளிநாட்டு நிதியளிப்பு உடன்படிக்கையின் மூலம் ஐக்கிய அமெரிக்க டொலர் 266.2 மில்லியன் பெறுமதியான உடன்படிக்கை (உத்தியோகபூர்வ அபிவிருத்தி ஒத்துழைப்பு) ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளன. இதில் ஐ.அ.டொலர் 219.2 மில்லியன் கடன் உடன்படிக்கைக்கு அமைவாக நிதியளிக்கப்படுகின்ற அதேவேளையில் எஞ்சிய ஐ.அ.டொலர் 46.9 மில்லியன் மானிய உடன்படிக்கைக்கு அமைவாக நிதியளிக்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக இந்தக் காலப்பகுதியில் சர்வதேச முறி விநியோகத்தின் மூலம் ஐ.அ.டொலர் 2,500 மில்லியன் பெறப்பட்டுள்ளது. இந்த 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளில் அதிகூடிய பெறுமதியாகிய ஐ.அ.டொலர் 79.8மில்லியன் சீனாவிடமிருந்து பெறப்பட்டுள்ள அதேவேளையில் அதற்கடுத்ததாக முறையே ஆசிய அபிவிருத்தி வங்கி (ஐ.அ.டொலர் 75.0 மில்லியன்)இ இந்தியா (ஐ.அ.டொலர் 45.3 மில்லியன்)இ அவுஸ்திரேலியா (ஐ.அ.டொலர் 25.0 மில்லியன்)இ ஐக்கிய அமெரிக்கா (ஐ.அ.டொலர் 17.9 மில்லியன்)இ ஆஸ்திரியா (ஐ.அ.டொலர் 13.0 மில்லியன்)இ விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் (ஐகுயுனு)(ஐ.அ.டொலர் 6.2 மில்லியன்)இ ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியம் (UNFPA) (ஐ.அ.டொலர் 4.0 மில்லியன்) மற்றும் அகதிகளக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் (ருேர்ஊசு) (ஐ.அ.டொலர் 0.01 மில்லியன்) ஆகிய அபிவிருத்தித் பங்காளர்களால் வழங்கப்பட்டுள்ளன. 2018 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதகாலப் பகுதியில் விநியோகிக்கப்பட்டுள்ள சர்வதேச முறிகளிடையே ஐ.அ.டொலர் 1,250 மில்லியன் வருடாந்த வட்டி வீதம் நூற்றுக்கு 5.75 சதவீதத்தின் கீழ் 5 வருடங்களில் முதிர்வடையக்கூடிய விதமாகவும். எஞ்சிய ஐ.அ.டொலர் 1,250 மில்லியன் தொகை 10 வருடங்களில் முதிர்வடையக்கூடிய விதமாக நூற்றுக்கு 6.75 சதவீத வருடாந்த வட்டி வீதத்தின் கீழும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. 2018 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் விநியோகிக்கப்பட்ட உத்தியோகபூர்ப அபிவிருத்தி ஒத்துழைப்புகளுக்கிடையே அதிகூடிய பெறுமதியாகிய ஐ.அ.டொலர் 79.8 மில்லியன் புகையிரதப் போக்குவரத்துத் துறைக்காக ஒதுக்கப்பட்டுள்ள அதேவேளையில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியின் அபிவிருத்திக்காக ஐ.அ.டொலர் 75.0 மில்லியன் உடன்படிக்கை ஏற்படுத்திக்கொள்ளப்பட்டுள்ளது.

**வரைபு 5.1 2018 சனவரி 01 - ஏப்பிரல் 30 ஆந் திகதி வரையில் துறை ரீதியாக ஏற்படுத்திக் கொள்ளப்பட்டஒதுக்கங்கள்(ஐ.அ.டொலர்மில்லியன்)**



அட்டவணை 5.1 : 2018 சனவரி 01 முதல் ஏப்ரல் 30 வரை ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நிதியளிப்பு உறுதியளிப்புக்கள் 2018 சனவரி 01 முதல் ஏபரல்

| அபிவிருத்தித் பங்காளர்கள்;/ கடன் வழங்கும் முகவர் | நிதி வழங்கல் அடிப்படை | உடன்படிக்கை திகதி | கருத்திட்டம் / நிகழ்ச்சித்திட்டம் / சாதனத்தின் பெயர் | அர்ப்பணிக்கப்பட்ட தொகை (மில்லியன்) | | | | நிதி நியதிகள் | | | | ஏனைய நியதிகள் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | வட்டி | | | | | |
| | | | | நாணயம் | சாதன நாணயத்தில் | ரூபா | ஐ.அ. டொலர் | வகை | வருடாந்த விகிதம் (%) | வரையறை (100 அடிப்படை புள்ளி) | ஏனைய கட்டணங்கள் | சலுகைக் காலம் (ஆண்டு) | முதிர்ச்சி/ உடன்படிக்கை திகதியிலிருந் தான எஞ்சிய காலம் (ஆண்டுகள்) |
| **இருதரப்பு உத்தியோகபூர்வ அபிவிருத்தி உடன்படிக்கை** | | | | | | | | | | | | | |
| அவுஸ்திரேலியா | மானியம் | 2018/01/30 | அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கான நல்லாட்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் | அவு. டொலர் | 31.0 | 3,850.9 | 25.0 | | | ஏற்புடையதாகாது | | | 2.4 |
| ஐக்கிய அமெரிக்கா | மானியம் | 2018/01/30 | சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நல்லாட்சிக்கான வலுவான பங்குடைமையைக் கட்டியெழுப்புதல். (நிதியத்தை அதிகரித்தல்) | ஐ.அ. டொலர் | 9.7 | 1,487.1 | 9.7 | | | ஏற்புடையதாகாது | | | 8.7 |
| | மானியம் | 2018/01/30 | நிலையானதும் வலுவானதுமான பொருளாதார வளர்ச்சி (நிதியத்தை அதிகரித்தல்) | ஐ.அ. டொலர் | 8.2 | 1,263.0 | 8.2 | | | ஏற்புடையதாகாது | | | 7.7 |
| இந்திய ஏற்றுமதி இறக்குமதி வங்கி | கடன் | 2018/01/10 | காங்கேசன்துறை துறைமுகத்துக்கான டொலர் கடன் | ஐ.அ. டொலர் | 45.3 | 6,963.4 | 45.3 | மாறக் கூடிய | ஐ.அ.டொலருக்கான 6 மாத LIBOR | 0 | - | 5 | 20 |
| (சீனா-ஹொங்கொங் வங்கி ர்ளுடீஊ) | கடன் | 2018/04/27 | மலையக புகையிரதத்துக்கான 09 டீசல் புகையிரதங்களைக் கொள்வனவு செய்வதற்கான பெறுகை | ஐ.அ. டொலர் | 79.8 | 12,578.2 | 79.8 | மாறக் கூடிய | ஐ.அ.டொலருக்கான 6 மாத LIBOR | 2.0 | கடன் காப்புறுதித் தவணை ஐ.அ.டொ.2.2 மில். ஒழுங்குபடுத்தல் கட்டணம் ஐ.அ.டொ 877,665.87, அர்ப்பணிப்புக் கட்டணம் 0.5% | 1 | 13.5 |

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆஸ்திரியா<br>UniCedit Bank Austria AG வங்கி | கடன் | 2018/03/08 | கிரம – கட்டுவான ஒருங்கிணைந்த நீர் வழங்கள் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் | யூரோ | 10.5 | 2,019.4 | 13.0 | | வட்டி இலவசம் | | அர்ப்பணிப்புக் கட்டணம் 0.4%, முகாமைத்துவக் கட்டணம் யூரோ 47,185.25, கையாள்கைக் கட்டணம் யூரோ 1,440, அடிப்படை கொடுப்பனவு ஐ.அ.டொ. 58,981.6 | 6.5 | 15 |
| **பல்தரப்பு உத்தியோகபூர்வ அபிவிருத்தி உடன்படிக்கை** | | | | | | | | | | | | | |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | கடன் | 2018/02/16 | சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகளுக்கான கடன் தொடர் (மேலதிக நிதியளிப்பு) | ஐ.அ. டொலர் | 75.0 | 11,649.3 | 75.0 | மாறக் கூடிய | ஐ.அ.டொலருக்கான 6 மாத LIBOR | 0.6 | அர்ப்பணிப்புக் கட்டணம் 0.15% | 11 | 11 |
| விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் | கடன் | 2018/01/26 | சிறு தோட்ட விவசாய வியாபார பங்குடமை நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் (நிதியத்தை அதிகரித்தல்) | ஐ.அ. டொலர் | 6.2 | 950.1 | 6.2 | நிலையான | 2 | ஏற்புடையதாகாது | - | 5 | 25 |
| அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் ஆணையம் | மானியம் | 2018/01/01 | கிளிநொச்சி, புத்தளம் மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் மீள் குடியேறுபவர்களுக்கு அவர்களது உரிமைகளுக்கான அணுகுகை. | இலங்கை ரூபா | 1.9 | 1.9 | 0.01 | | | ஏற்புடையதாகாது | | | 1 |
| ருகேயீயு | மானியம் | 2018/01/26 | உள்நாட்டு நிகழ்ச்சித் திட்டங்களின் நடவடிக்கைத் திட்டம் 2018-2022 | ஐ.அ. டொலர் | 4.0 | 612.6 | 4.0 | | | ஏற்புடையதாகாது | | | 5 |
| **சந்தைக் கடன்** | | | | | | | | | | | | | |
| சர்வதேச முறி விநியோகம் | கடன் | 2018/04/18 | சர்வதேச முறி 2018 | ஐ.அ. டொலர் | 1,250.0 | 195,413.4 | 1,250.0 | நிலையான | 5.75 | ஏற்புடையதாகாது | - | 5 | 5 |
| | கடன் | 2018/04/18 | சர்வதேச முறி 2018 | ஐ.அ. டொலர் | 1,250.0 | 195,413.4 | 1,250.0 | நிலையான | 6.75 | ஏற்புடையதாகாது | - | 10 | 10 |
| **மொத்தம்** | | | | | | **432,201.6** | **2,766.2** | | | | | | |

### 5.2 வெளிநாட்டு நிதியளிப்பு பகிர்வுகளும் பயன்பாடும்

2018 சனவரி 01 முதல் ஏப்ரல் 30 வரை அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களின் பயன்பாட்டிற்காக ஐ.அ.டொலர் 512.1 மில்லியன் வெளிநாட்டு நிதிப் பகிர்வுகள் பெறப்பட்டுள்ளன. இதில் ஐ.அ.டொலர் 508.2 மில்லியன் கடனாகப் பெறப்பட்டுள்ள அதே வேளையில் ஐ.அ.டொலர் 3.9 மில்லியன் மானியமாக பெறப்பட்டுள்ளன.

இந்த நிதிப் பகிர்வுகளின் அதியுயர் நிதிப்பகிர்வு ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் கைச்சாத்திடப்பட்டுள்ள உடன்படிக்கையின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் அது மொத்தத் தொகையில் அண்ணளவாக நூற்றுக்கு 45 சதவீதமாகவும் அதனைத் தொடர்ந்து அதிகூடிய தொகையாகிய சீனா 18 சதவீதமும் மற்றும் ஜப்பான் 11 சதவீதமும் கைச்சாத்திடப்பட்டுள்ள கடன் உடன்படிக்கையின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட நிதிப் பகிர்வுகளாகும்.

**அட்டவணை 5.2| 2018 சனவரி 01 முதல் ஏப்ரல் 30 வரையில் ஒவ்வொரு அபிவிருத்திப் பங்காளர்களினாலும் மேற்கொள்ளப்பட்ட நிதிப்பகிர்வுகள்**

| அபிவிருத்திப் பங்காளர் | பகிர்வுகளின் அளவு (ஐ.அ.டொ. மில்லியன்)* | | |
|---|---|---|---|
| | கடன் | மானியம் | மொத்தம் |
| **இருதரப்பு** | **221.95** | **3.16** | **225.10** |
| சீனா | 90.83 | - | 90.83 |
| ஜப்பான் | 54.19 | - | 54.19 |
| பிரான்ஸ் | 16.91 | 0.25 | 17.17 |
| இந்தியா | 16.90 | - | 16.90 |
| நெதர்லாந்து | 8.65 | - | 8.65 |
| ஆஸ்திரியா | 8.38 | - | 8.38 |
| சவுதி அரேபியா | 6.39 | - | 6.39 |
| கொரியா | 4.58 | - | 4.58 |
| ஸ்பெயின் | 4.32 | - | 4.32 |
| ஐக்கிய இராச்சியம் | 3.55 | - | 3.55 |
| ஐக்கிய அமெரிக்கா | - | 2.90 | 2.90 |
| டென்மார்க் (டென்மார்க்குடனான ர்ளுடீஊ யின் உத்தரவாதம்) | 2.80 | - | 2.80 |
| குவைத் | 2.69 | - | 2.69 |
| ஜேர்மனி | 1.08 | - | 1.08 |
| அவுஜ்திரேலியா | 0.68 | - | 0.68 |
| **பல்தரப்பு** | **286.28** | **0.74** | **287.02** |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 228.85 | - | 228.85 |
| உலக வங்கி | 48.83 | - | 48.83 |
| ஒபெக் நிதியம் | 7.17 | - | 7.17 |
| விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் | 1.43 | - | 1.43 |
| ஐக்கிய நாடுகளின் முகவர் (ருேர்ஊசு)இ (ருஜேஊநுகு) ரூ (ருகேீயு) | - | 0.54 | 0.32 |
| ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி | - | 0.20 | 0.20 |
| **மொத்தம்** | **508.23** | **3.89** | **512.12** |


*மூலம் : வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்*

**குறிப்பு:** *ஒவ்வொரு அந்நியச் செலாவணியிலும் குறிப்பிடப்படுகின்ற பகிர்வுப் பெறுமதிகளை ஐ.அ.டொலருக்கும் ரூபாவுக்கும் மாற்றும்போது 2018 ஏப்ரல் 30 ஆந் திகதியில் காணப்பட்ட செலாவணி வீதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.*


* *தற்காலிகமானது*

இந்த நிதிப் பகிர்வுகளில் அதியுயர் நிதிப்பகிர்வு வீதி மற்றும் பாலங்கள் துறையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்ற கருத்திட்டங்களுக்காக பயன்படுத்தப் பட்டுள்ள அதேவேளையில் அது அண்ணளவாக நூற்றுக்கு 27 சதவீதமாகும். அதனைத் தொடர்ந்து முறையே நிதி மற்றும் நல்லாட்சி துறைக்காக நூற்றுக்கு 24 சதவீதமும் மின்வலு மற்றும் எரி சக்தி துறைக்காக நூற்றுக்கு 8 சதவீதமும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்காக நூற்றுக்கு 7 சதவீதமும் என்ற வகையில் நிதிப்பகிர்வுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

**வரைபு 5.2: 2018 சனவரி 01 முதல் ஏப்ரல் 30 வரையிலான காலப்பகுதியின்போது ஒவ்வொரு அபிவிருத்திப் பங்காளர்களினாலும் வழங்கப்பட்ட நிதிப்பகிர்வுகள்.**




**வரைபு 5.3: 2018 சனவரி 01 முதல் ஏப்பிரல் 30 ஆந் திகதி வரையில் துறை ரீதியாக மேற் கொள்ளப்பட்ட நிதிப் பகிர்வுகள் (ஐ.அ.டொலர் மில்லியன்)**





## 5.3 உறுதியளிக்கப்பட்டு பகிரப்படாத நிதி


தற்போது உறுதியளிக்கப்பட்டுள்ள உடன்படிக்கைக்கு அமைவாக அடுத்துவரும் 3-5 வருடங்களில் பல்வேறு கருத்திட்டங்களிலும் நிகழ்ச்சித்திட்டங்களிலும் பயன்படுத்தப்படவுள்ள வெளிநாட்டு நிதியளிப்புகள்மீது 2018 ஏப்ரல் 30 ஆந் திகதியிலுள்ளவாறு ஐக்கிய அமெரிக்க டொலர் 8,870.4[1]மில்லியனாகக் காணப்பட்டது. இதில் ஐ.அ.டொ. 2,513.0 மில்லியன் அல்லது நூற்றுக்கு 28 சதவீதம் வீதி மற்றும் பாலங்கள் துறைக்காகவும் ஐ.அ.டொ. 2,070.5 மில்லியன் நீர் வழங்கள் மற்றும் துப்புரவேற்பாட்டுத் துறைக்காகவும் உடன்படிக்கை செய்யப்பட்டுள்ள கருத்திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படவுள்ளன.

[1] ஈரான் மீது விதிக்கப்பட்டுள்ள சர்வதேசத் தடை தாக்கம் செலுத்தியுள்ளது. அரசாங்க தொழில்முயற்சிக்கு அமைவாக மேற்கொள்ளப்படவுள்ள உறுதியளிப்புக்களின் பகிரப்படாத மீதி உள்ளடக்கப்படவில்லை.

**வரைபு 5.4: 2018 ஏப்ரல் 30 ஆந் திகதியிலுள்ளவாறு அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் உறுதியளிக்கப்பட்டு பகிரப்படாத நிதி (ஐ.அ.டொலர் மில்லியன்)**





**வரைபு 5.5:** 2018 ஏப்ரல் 30 ஆந் திகதியிலுள்ளவாறு அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் துறை ரீதியாக அர்ப்பணிப்புச் செய்யப்பட்டு பகிரப்படாத நிதி (ஐ.அ.டொலர் மில்லியன்)



## 5.4 வெளிநாட்டு படுகடன் நிலுவையும் வெளிநாட்டு படுகடன் சேவைக் கொடுப்பனவும்.

2018 ஏப்ரல் இறுதியிலுள்ளவாறு அரசாங்கத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள நிதி அளிப்புகளுக்காக திருப்பிச் செலுத்தப்படவேண்டியிருந்த வெளிநாட்டு படுகடனின் அளவு ஐ.அ.டொலர் 31.6[2] பில்லியன் ஆகும். மேலும் 2018 சனவரி 01 முதல் ஏப்ரல் 30 ஆந் திகதி வரை மேற்கொள்ளப்பட்டுள்ள கடன் சேவைக் கொடுப்பனவு 715.6[3] மில்லியன் ஆகும். இதில் ஐ.அ.டொலர் 390.2 மில்லியன் கடன் மீள் கொடுப்பனவுக்காக பயன்படுத்தப்பட்டுள்ள அதேவேளையில் எஞ்சிய ஐ.அ.டொலர் 325.4 மில்லியன் வட்டிக் கொடுப்பனவுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளன.

**வரைபு 5.6**: 2018 சனவரி முதல் ஏப்ரல் 30 வரையில் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்டுள்ள படுகடன் சேவைக் கொடுப்பனவு மற்றும் 2018 ஆம் ஆண்டின் எஞ்சிய காலப்பகுதிக்கான எதிர்வு[4] கூறப்பட்டுள்ள படுகடன் சேவைக் கொடுப்பனவு (ஐ.அ.டொலர் மில்லியன்)




2018 ஆம் ஆண்டிற்காக எதிர்வு கூறப்பட்ட கடன் சேவைக் கொடுப்பனவின் அளவு ஐ.அ.டொலர் 2,900.9 மில்லியன் ஆகும். இதில் நூற்றுக்கு 25 சதவீதம் இந்த வருடத்தின் ஏப்பிரல் 30 ஆந் திகதியளவில் செலுத்தப்பட்டுள்ளன.[2] பெறுகைக்கு அமைவாக திரட்டப்படக்கூடிய கடன் சேவைக் கொடுப்பனவின் பெறுமதிகள் சேர்க்கப்படவில்லை.

*[2] திறைசேரி பிணைமுறி மற்றும் உண்டியல்களின் வதிவிடமல்லாத முதலீடு மற்றும் அரச தொழில் முயற்சிகளுக்காக பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்கள் உள்ளடக்கப்படவில்லை.*

*[3] மொத்த படுகடன் சேவை = வட்டிக் கொடுப்பனவு + கடன் தவணை மீள் கொடுப்பனவு, அரசாங்கத் தொழில்முயற்சிகளின் படுகடன் சேவைக் கொடுப்பனவு உள்ளடக்கப்படவில்லை.*

*[4] 2018 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு காணப்பட்ட செலாவணி வீதங்களுக்கு அமைவாக எதிர்வு கூறப்பட்டுள்ளது. எதிர்வு கூறல்களுக்காக தற்போதுள்ள கடன்தொகைகள் மாத்திரம் அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படுகின்ற புதிய கடன்*